எம். எஸ். வசந்தகுமார்




# திருமறை போதிக்கும் திருமுழுக்கு

ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகமப் போதனை

# வேதஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார் எழுதிய ஏனைய நூல்கள்

1. இன்பத்தின் இரகசியங்கள்
   யோவான் 15ம் அதிகாரத்திற்கான விளக்கவுரை.
2. இயேசுகிறிஸ்து யார்?
   ஏழு சுயவெளிப்பாட்டு கூற்றுக்களின் விளக்கவுரை.
3. வேதாகமம் தேவனுடைய வார்த்தையா?
   வேதாகமம் தேவவார்த்தை என்பதற்கான சான்றுகள்.
4. இது ஒரு கிறிஸ்தவ குடும்பம்
   கிறிஸ்தவ குடும்பம் பற்றிய வேதாகமப் போதனை
5. மரணத்தின் மறுபக்கம்
   மரணத்தின் பின்பான வாழ்வு பற்றிய போதனை
6. இயேசுகிறிஸ்து இறைவனா?
   இயேசுவின் தேவத்துவத்திற்கான ஆதாரங்கள்
7. கிறிஸ்தவ வாழ்வில் தேவசித்தம்
   கிறிஸ்தவ வாழ்வுக்கான நடைமுறை சத்தியங்கள்
8. இயேசுகிறிஸ்து ஒரு சரித்திர நபரா?
   இயேசு இவ்வுலகில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள்
9. திருமறையும் திருமணமும்
   திருமணம், விவாகரத்து, மறுவிவாகம் பற்றிய நூல்
10. புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு
    வேதாகமம் உருவான சரித்திர விஷயங்கள்
11. யெகோவாவின் சாட்சிகளுக்கு கிறிஸ்தவனின் பதில்கள்
    யெகோவாவின் சாட்சிகளுக்கு பதிலளிக்கும் முறை
12. கர்த்தரின் வார்த்தைகளில் கடினமான வரிகள்
    இயேசுவின் கடினமான கூற்றுகளுக்கான விளக்கம்
13. ஒரு விதவையின் விவாகம்
    ரூத் புத்தகத்திற்கான விளக்கவுரை
14. ஓடிப்போனவன்
    யோனா தீர்க்கதரிசியின் நூலுக்கான விளக்கவுரை
15. ஒரு விலைமகள் விசுவாசியாகின்றாள்
    ராகாபின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
16. மகளையே பலியிட்ட மனிதன்
    யெப்தாவின் வாழ்வுச் சரிதைக்கான விளக்கவுரை
17. விபரீதமான வீரன்
    சிம்சோனின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
18. ஆத்தும தாகத்திற்கு அற்புதத் தண்ணீர்
    சமாரியப் பெண்ணின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
19. தேவனின் பாதத்தைத் தேடிவந்த பாவை
    மரியாளின் வாழ்விலிருந்து வேதபாடங்கள்
20. சங்கீதங்களின் சத்தியங்கள்
    சங்கீதப் புத்தகத்திற்கு ஒரு அறிமுகம்.
21. கர்த்தரின் பராமரிப்பில் களிகூர்ந்திடும் பக்தன்
    23ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
22. மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்
    19ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
23. கலங்கிடும் மனதிற்கு களிப்பான மருந்து
    42ம் 43ம் சங்கீதங்களுக்கான விளக்கவுரை
24. துன்மார்க்கரின் வளமும் நீதிமானின் துயரமும்
    73ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
25. ஒத்தாசையாயிருக்கும் ஒப்பற்ற தெய்வம்
    121ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
26. வயோதிப காலத்திலும் வழிநடத்தும் கர்த்தர்
    71ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
27. புண்பட்ட உள்ளங்களில் புறப்படும் உணர்வுகள்
    137ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
28. ஆனந்தமான வாழ்வுக்கு அவசியமான வழிமுறை
    1ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
29. பயத்தின் மத்தியில் பக்தனின் மனம்
    56ம் சங்கீதத்திற்கான விளக்கவுரை
30. சில சம்பவங்களில் சில சத்தியங்கள்
31. டாவின்சியின் ஓவியத்தைப்பற்றிய நாவல் உண்மைச் சரிதையா?
32. மரித்தோரின் ஆவிகளினால் மனிதரை ஆசீர்வதிக்கமுடியுமா?

# திருமறை போதிக்கும் திருமுழுக்கு

## ஞானஸ்நானம்பற்றிய வேதாகமப் போதனை

# திருமறை போதிக்கும் திருமுழுக்கு

## ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகமப் போதனை


வேதஆராய்ச்சியாளர்

**எம்.எஸ்.வசந்தகுமார்**



**TAMIL BIBLE RESEARCH CENTRE**

**தமிழ் வேதாகம ஆராய்ச்சி மையம்**

8, Broadlands Avenue, Enfield EN3 5AH, England

Phone: 0044 (0)20 8374 4004

Email: vasanthakumarms@yahoo.co.uk

Web: tamilbibleresearchcentre.com

# BAPTISM
# ACCORDING TO THE BIBLE

An Analysis of
the Biblical Doctrine of Baptism

*Written by*

**M.S.VASANTHAKUMAR**
**BTh, MA, MPhil, DMin.**

*Produced by*

**TAMIL BIBLE RESEARCH CENTRE**
8, Broadlands Avenue, Enfield, EN3 5HA, England.
Phone: 0044 (0)20 8374 4004
Email: msvtbrc@googlemail.com
Web: tamilbibleresearchcentre.com

*Published by*

**BETHANY CHURCH OF GOD**
P.O.Box 294, Southall, Middlesex UB2 5EE, UK
Phone: 0044 (0)20 8571 2156
Email: bethanychurchuk.yahoo.com
Web: bethanychurches.org

First Edition
October 2011, Copies: 2000

No part of this publication may be reproduced in any form without the prior permission of the author.
அனுமதியின்றி பிரதி பண்ணுவது தடைசெய்யப்பட்டுள்ளது

நீங்கள் புறப்பட்டுப் போய்,
சகல ஜாதிகளையும் சீஷராக்கி,
பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே
அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,
நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும்
அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு
உபதேசம் பண்ணுங்கள் (மத்தேயு 28:19-20).

# பொருளடக்கம்


**ஆசிரியர் உரை** 07

**அணிந்துரை (சகோ. மோகன் சி. லாசரஸ்)** 10

**அணிந்துரை (பாஸ்டர். சா. மே. பிரேம்குமார்)** 12

**அறிமுக உரை**

திருமறை போதிக்கும் திருமுழுக்கு 15

**முதலாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்தின் அவசியம்**

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும்? 27

**இரண்டாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்திற்கான அருகதை**

நாம் எந்நிலையில் ஞானஸ்நானம் பெறவேண்டும்? 37

**மூன்றாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்தின் அணுகுமுறை**

நாம் எப்படி ஞானஸ்நானம் பெறவேண்டும்? 53

**நான்காம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்தின் அர்த்தம்**

ஞானஸ்நானம் என்றால் என்ன? 69

**ஐந்தாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்தின் ஆசீர்வாதம்**

ஞானஸ்நானத்தில் நாம் எவற்றைப் பெறுகின்றோம்? 87

**ஆறாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்தின் அறியாமை**

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா? 105

**ஏழாம் அத்தியாயம்**

**ஞானஸ்நானத்திற்கான அறைகூவல்**

நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது? 145

**உசாத்துணை நூல்கள்** 158



# ஆசிரியர் உரை

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மறுபடியுமாக இந்நூலின் மூலம் என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதோடு, நீண்ட கால ஆராய்ச்சியின் பின்னர் இந்நூலை எழுதி வெளியிட கிருபையளித்த தேவனை நன்றியோடு ஸ்தோத்தரிக்கின்றேன்.

ஞானஸ்நானத்தைப் பற்றிய இந்நூல் பல வருஷகால தேடுதலிலும் ஆராய்ச்சியிலும் தேவவழிநடத்துதலிலும் உருவாகியுள்ளது. கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, குழந்தை ஞானஸ்நானம் பெற்று, சபையின் பாரம்பரியப் போதனைகளில் வளர்க்கப்பட்ட என்னுடைய மனம் நீண்டகாலமாகவே குழந்தை ஞானஸ்நானமே சரியானது என்னும் எண்ணத்தில் இருந்து வந்தது. இதனால் 1983ம் ஆண்டு, இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக அறிந்து, 1984ல் ஊழியப் பயிற்சிக்காக வேதாகமக் கல்லூரிக்கு சென்றாலும், 1987ம் ஆண்டு வரை குழந்தை ஞானஸ்நானமே சரியானது என்று வாதிட்டு வந்தேன். ஆனால், வேதாகமக் கல்லூரியில் வேதத்தை ஆழமாக ஆராய்ந்து படிக்கும்போது, குழந்தை ஞானஸ்நானத்திற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரங்களும் இல்லை என்பதை அறிந்து கொண்டேன். இதனால் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து 1987ம் ஆண்டு வேதம் போதிக்கும் விதத்தில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, இதன் மூலம் பரிசுத்த ஆவியானவர் அருளும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டேன்.

1987ம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்ற காலத்திலிருந்தே இதைப் பற்றி ஒரு புத்தகம் எழுதவேண்டும் என்று தேவன் உணர்த்தி வந்தார். எனினும், ஞானஸ்நானத்தைப்பற்றிய பாரம்பரிய பழக்க வழக்கங்களும் உபதேசங்களும் பல்வேறுவிதமான கேள்விகளை என் உள்ளத்தில் ஏற்படுத்தின. இக்கேள்விகள் அனைத்திற்கும் வேதத்தின் அடிப்படையில் முழுமையான பதில்களைக் கண்டு பிடிக்க இருபது வருஷங்களுக்கும் மேலாகிவிட்டது. எனவே, இந்நூல் இருபது வருஷங்களுக்கும் மேற்பட்ட தேடுதலினதும் ஆவியானவரின் உணர்த்துதலினதும் விளைவாக உள்ளது.

பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் வேதாகமத்தில் நான் கண்டுகொண்ட ஞானஸ்நானத்தைப்பற்றிய சத்தியத்தை நீங்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக வேதாகமத்தையும், ஞானஸ்நானத்தைப்பற்றி பல்வேறு சபைப்பிரிவினர் எழுதியுள்ள நூல்களையும் ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளேன்.

தற்காலத்தில் தமிழ்க் கிறிஸ்தவ உலகில் தேவனால் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வரும் "இயேசு விடுவிக்கிறார்" ஊழியத்தின் ஸ்தாபகர் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் இவ்வருஷம் இங்கிலாந்துக்கு வந்தபோது இந்நூலை வாசித்து இதற்கு சிறப்பான ஒரு அணிந்துரையை எழுதி இதைத் தமிழ்க் கிறிஸ்தவ உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதேபோல, நீண்ட காலமாக நான் அறிந்துள்ள அருமையான போதகரும், "திறந்த வாசல் சர்வதேச வேதாகமக் கல்வி நிறுவனத்தின்" ஸ்தாபக ருமான சா.மே.பிரேம்குமார் அவர்களும் சிறப்பான ஒரு அணிந்து ரையை எழுதியுள்ளார்கள். இவர்கள் இருவருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை எழுதும் காலத்தில் இதன் மூலப் பிரதியை வாசித்து என்னை அதிகமாக உற்சாகப்படுத்திய இங்கிலாந்து "பெத்தானியா தேவ சபையைச்" சேர்ந்த பாஸ்டர் போல் செல்வதீபம், மற்றும் இந்தியாவிலுள்ள "கிறிஸ்தவ விசுவாசிகளின் ஐக்கியத்தைச்"

சேர்ந்த ஊழியர் வி.ராஜ்கமல் என்போருக்கும், இதை வெளியிடும் “இங்கிலாந்து பெத்தானியா தேவசபை” விசுவாசிகளுக்கும் இச் சபையின் போதகர் பாஸ்டர் சத்தியராஜ் அவர்களுக்கும், இந்நூலின் மூலப் பிரதியை வாசித்து திருத்தங்கள் செய்ய உதவிய சகோதரிகள் சிந்தியா சுரேஷ், மற்றும் செல்வி ராமச் சந்திரன் என்போருக்கும், இதை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த சகோதரன் மில்ட்டனுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம சத்தியங்களைத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்வதற்கு இந்நூல் உதவிடும் என்னும் நம்பிக்கையில் ஜெபத்துடன் இதை உங்களிடம் சமர்ப்பிக்கின்றேன். இதை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அதேசமயம் இந்நூல் பற்றிய உங்கள் கருத்துகளையும் எனக்குத் தெரிவியுங்கள்

**எம்.எஸ்.வசந்தகுமார்**
(லண்டன் - ஒக்டோபர் 2011).



# அணிந்துரை

## இயேசு விடுவிக்கிறார் ஊழிய ஸ்தாபகர் சகோ. மோகன் சி. லாசரஸ்

வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ். வசந்தகுமார் அவர்கள் எழுதியிருக்கிற "திருமறை போதிக்கும் திருமுழுக்கு" என்ற இந்த புத்தகத்திற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். ஏனென்றால், ஞானஸ்நானத்தின் அர்த்தத் தையும் முக்கியத்துவத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை அநேகர் அறியாதிருக்கின்றனர். அநேகர் ஞானஸ்நானத்தைக் குறித்துத் தவறான நம்பிக்கை வைத்தி ருக்கிறார்கள். இந்துக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த நான் இயேசு என்னை அற்புதமாகச் சுகமாக்கினபடியினால் அவர்மீது அன்புவைத்து ஞானஸ்நானம் எடுத்தேன். அப்பொழுது எனக்கு ஞானஸ்நானத்தைப் பற்றி எதுவும் தெரியாது. அப்பொழுது நான் இரட்சிக்கப்படவும் இல்லை.

மூன்று ஆண்டுகள் கழித்து ஆண்டவர் கிருபையாக என்னை இரட்சித்தார். நான் இரட்சிக்கப்பட்ட பிறகு "நீங்கள் முழுகி ஞானஸ் நானம் பெறவேண்டும்" என்று பலர் எனக்கு ஆலோசனை கொடுத் தார்கள். "ஒரே ஞானஸ்நானம்தான், அதை பெற்றுவிட்டேன்" என்று வாதாடியிருக்கிறேன்.

அதன் பிறகு ஆண்டவர் பரிசுத்த ஆவியினால் என்னை நிரப்பினார். அப்பொழுதும் சிலர், முழுகி எடுக்கவேண்டிய ஞானஸ்நானத்தைக் குறித்து என்னோடு பேசினார்கள். "ஆண்டவர் என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பியிருக்கிறார், இனி ஒரு ஞானஸ்நானம் அவசியம் இல்லை" என்று வாதாடியிருக்கிறேன்.

அந்த காலத்தில்தான் ஒரு நாள் அதிகாலை தேவசமுகத்தில் நான் காத்திருந்தபோது, ஆவியானவர் தெளிவாகப் பேசினார்: "விசுவா சமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற். 16:16) என்ற வசனத்தைக் கொண்டு, "இரட்சிக்கப்பட்ட பிறகு முழுகி எடுத்துக் கொள்வதுதான் ஒரே ஞானஸ்நானம்" என்பதை விளக்கிக் கொடுத்தார்.

அதே நாளில் உடனே நான் கீழ்ப்படிந்து முழுகி ஞானஸ்நானம் பெற்றேன். யார் சொல்லியும் நம்பாத நான், ஆவியானவர் தெளிவாகப் பேசினவுடன் கீழ்ப்படிந்தேன். அதில் பெரிய சந்தோஷமும் ஆசீர்வாத மும் இருந்ததை உணர்ந்தேன்.

இந்த புத்தகத்தை வாசிக்கின்ற நீங்களும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். தேவ ஆசீர்வாதத் தைப் பெற்றுக்கொள்ள இந்தப் புத்தகம் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

ஜெபத்தோடு இந்தப் புத்தகத்தை வாசியுங்கள். வேதத்தின் சத்தி யங்களை அறிந்துகொள்ளுங்கள். வேத வசனத்திற்குக் கீழ்ப்படி யுங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிற அன்பு சகோதரர் எம்.எஸ். வசந்தகுமார் அவர்கள் இன்னும் அநேக புத்தகங்களை எழுத கர்த்தர் கிருபை கொடுக்க ஜெபிக்கிறேன்.

உங்கள் சகோதரன்
**மோகன் சி. லாசரஸ்**



# அணிந்துரை

## திறந்த வாசல் சர்வதேச வேதாகம கல்வி நிறுவன ஸ்தாபகர்

## பாஸ்டர் சா. மே. பிரேம்குமார்

சபையின் அஸ்திபார உபதேசங்களில் ஒன்றாகத் திகழ்ந்து, வசனங்கள் ஊடாகத் தெளிவாக விளக்கப்பட்டும், சபை சர்ச்சைகளுக்கும், சபைப் பிரிவுகளுக்கும் உட்படுத்தப்பட்டு, பாரம்பரிய சபைகளில் வெறும் பாரம்பரியமாகவே உருமாற்றம் பெற்றுள்ள திருமுழுக்கு குறித்த ஒரு ஆராய்ச்சி நூல் வெளிவருவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகி றேன். இந்நூலை எனதருமை நண்பரும், பிரபல வேத ஆராய்ச்சியாள ருமாகிய போதகர் எம்.எஸ்.வசந்தகுமார் அவர்கள் எழுதியுள்ளமை என்னைப் பேருவகைக் கொள்ளச் செய்கிறது.

இருமனங்களின் சேர்க்கையை வெளியுலகிற்கு பகிரங்கமாக அறிவிக் கும் திருமணத்தைப்போலவே, இரட்சகரில் நாம் அடையும் மனமாற்றத் தின் உறுதியை வெளியரங்கமாகப் பிரகடனப்படுத்தும் திருமுழுக்கா கவே ஞானஸ்நானம் திகழ்கின்றது.

ஞானஸ்நானத்தைத் தேவ நீதியாக, தேவ ஆலோசனையாக, தேவ கட்டளையாக, தேவனோடு செய்யும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை யாக, அன்பர் இயேசுவோடு அடக்கம் செய்யப்பட்டு உயிரோடெழும் செயலாகவே வேதம் சித்தரிக்கிறது.

ஞானஸ்நானம் பெற அவசியமற்ற நம் இரட்சகர்கூட தேவநீதியை நிறைவேற்றவும், நமக்கு நல்வழிகாட்டவும் திமுமுழுக்கு பெற்றார். அதன் பின்னரே ஊழியத்தை ஆரம்பித்தார். ஊழியத்தின் முடிவில்

தம் சீடருக்கு அளித்த கடைசி கட்டளையில்கூட திருமுழுக்கை இராஜரீகப் பிரமாணமாக வலியுறுத்தியே இயேசு பரமேறினார்.

இந்நூலில் தெளிவான வாதங்களோடு, தமக்கே உரிய நடையில் திருமுழுக்கு குறித்த வேதாகம சத்தியங்களைப் போதகர் எம்.எஸ். வசந்தகுமார் விளக்கியுள்ளார். இவ்வாராய்ச்சி நூல் கிறிஸ்தவ உலகிற்கு கிடைத்த நல்லதொரு பொக்கிஷம். ஊழியர்களும் விசுவாசிகளும் ஒருமித்து பயனடைவார்கள் என்பது நிச்சயம்.

தமிழ் கிறிஸ்தவ உலகிற்கு தமது ஆய்வுப் பணியால் பல நல்ல படைப்புகளை அளித்துள்ள போதகர் எம்.எஸ்.வசந்தகுமார் அவர்கள் இன்னும் பல அரிய படைப்புகளை உருவாக்க இறைவன் இயேசு அருள்புரிவாராக.

**போதகர் சா.மே.பிரேம்குமார்**
திறந்த வாசல் சர்வதேச வேதாகம கல்வி நிறுவனம்,
பேர்லின், ஜெர்மனி.



ஞானஸ்நானத்தைப்பற்றிய வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகின்றன. இதனால், ஞானஸ்நானத்தைப் பற்றி அறிந்துகொள்வதற்கு வேதாகமத்தில் ஞானஸ்நானம் என்னும் சொல் இடம்பெறும் வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்து மனிதரைத் தம்முடைய சீஷராக்கி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததோடு (யோவான் 4:1), இவ்விதமாக ஞானஸ்நானம் கொடுக்கும்படி நமக்குக் கட்டளையிட்டுள்ளார் (மத்தேயு 28:19).

## அறிமுக உரை



# திருமறை போதிக்கும் திருமுழுக்கு

## கிறிஸ்தவ ஞானஸ்நானம்பற்றிய வேதாகமப் போதனை

கிறிஸ்தவ உலகில் எக்காலத்திலும் அதிக சர்ச்சைக்குரியதும், அதேசமயம் மிகவும் அவசியமானதுமான புனித காரியமாக ஞானஸ் நானம் உள்ளது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கொடுத்த உன்னதப் பணியில் ஞானஸ்நானமும் உள்ளடக்கப்பட்டுள்ளதினால் (மத்.28:19-20),[1] கிறிஸ்தவ வாழ்வில் இது மிகவும் முக்கியமானதொரு செயலாக உள்ளது. இதனால், "ஆதிகிறிஸ்தவர்களின் விசுவாசப் பிரமாணத்தின் அடிப்படை அம்சமாக ஞானஸ்நானமே இருந்தது."[2]

---

1 இயேசுகிறிஸ்து சீஷர்களுக்கு கொடுத்த பணியில், "நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (மத்.28:19-20) என்னும் அறிவுறுத்தல் உள்ளது.

2 D.F.Wright, *What has Infant Baptism done to Baptism?* p. 38-41.

ஞானஸ்நானம் அவசியமானது என்பதைப் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், இதை எக்காலத்தில், எப்படி கொடுப்பது என்பதைப்பற்றி பல்வேறுவிதமான கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ளன. ஞானஸ்நானத்தைப்பற்றிய வித்தியாசமான உபதேசங்கள் கிறிஸ்தவ சபையில் கடுமையான சர்ச்சைகளையும், பிரிவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. தற்காலத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைச் சில சபைகள் பின்பற்றி வருகின்றன. ஏனைய சபைகள், வளர்ந்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்றன. அதேசமயம், இவ்விரு ஞானஸ்நானங்களிலும் ஞானஸ்நானம் பெறுபவரைத் தண்ணீரில் முழுக்கி, அல்லது தண்ணீரை அவருடைய தலையில் ஊற்றி, அல்லது தண்ணீரைத் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கும் வித்தியாசமான முறைகள் உள்ளன.



கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நம்பிக்கைகளும் நடத்தைமுறைகளும் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றவிதத்தில் இருக்கவேண்டும்



கிறிஸ்தவர்களாகிய நம்முடைய நம்பிக்கைகளும் நடத்தைமுறைகளும் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றவிதத்தில் இருக்கவேண்டும் என்பதனால், ஞானஸ்நானத்தைப்பற்றித் தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை நாம் சரியானவிதத்தில் அறிந்திருக்கவேண்டியது அவசியமாயுள்ளது. வேதாகமத்தில் பலதரப்பட்ட ஞானஸ்நானங்களைப்பற்றி நாம் வாசிக்கலாம். இவற்றில் பெரும்பாலானவை தண்ணீரில் முழுக்கிக் கொடுக்கப்படும் ஞானஸ்நானமாக இருக்கையில், ஏனையவை உருவகக் குறிப்புகளாக (figurative descriptions) உள்ளன. அதாவது, குறிப்பிட்ட ஒரு காரியத்தை விளக்குவதற்கும் ஞானஸ்நானம் என்னும் சொல் வேதாகமத்தில் உருவகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, "அக்கினி ஞானஸ்நானம்" என்பதில், ஞானஸ்நானம் என்னும் சொல் உருவகமாயுள்ளது (மத்.3:11). இது, ஆக்கினைத் தீர்ப்பைக் குறிக்கின்றது. ஏனெனில், இவ்வசனம் இடம்பெறும் பகுதியில், தம்மை விசுவாசிப்பவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அருளும் இயேசுகிறிஸ்து, தம்மை

விசுவாசியாதவர்களை ஆக்கினைக்குட்படுத்துவார் என்று யோவான் ஸ்நானகன் அறிவித்துள்ளார்.[3] இதைப்போலவே, இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சிலுவை மரணத்தைக் குறிப்பிடுவதற்கும் ஞானஸ்நானம்

---

[3] மத்தேயு 3:11ல் "ஆவியினாலும் அக்கினியாலும் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்" பரிசுத்த ஆவியானவரினால் ஞானஸ்நானம் பெறுவதைக் குறிப்பதாகச் சிலர் கருதுகின்றனர். இவர்களைப் பொறுத்தவரை இவ்வசனத்தில் "அக்கினி" பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும் செயலை உவமிக்கின்றது (L.Morris, *Matthew: The Pillar New Testament Commentary*, p. 62; D.A.Carson, *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*, p. 105). ஆனால், தனக்குப் பின் வரும் இயேசுகிறிஸ்து "பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று அறிவித்த யோவான் ஸ்நானகன் (மத்.3:11, லூக்.3:16), அடுத்த வசனத்தில் இதைப்பற்றி விளக்கும்போது, "தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்" என்று தெரிவித்துள்ளார் (மத்.3:12, லூக்.3:17). இதிலிருந்து, ஆவியின் ஞானஸ்நானம் "இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு அவர் பரிசுத்த ஆவியானவரை அருள்வதையும்" அக்கினி ஞானஸ்நானம், "அவரை விசுவாசியாதவர்களுக்கு அருளப்படும் ஆக்கினைத் தீர்ப்பையும்" குறிப்பிடுவதை அறிந்துகொள்கின்றோம். யோவான் ஸ்நானகனுடைய விளக்கத் தில், "கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பது" இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படுபவர்கள் பரலோகத்தில் சேர்க்கப்படுவதையும், "பதர்கள் அக்கினியில் சுட்டெரிக்கப்படுவது" இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் நரக ஆக்கினையை அடைவதையும் உவமிக்கின்றது (C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, pp. 79-80; M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 138; R.T.France, *Matthew: The New International Commentary on the New Testament*, pp. 112-116). இவ்வசனத்தில் "அக்கினி ஞானஸ்நானம்" ஆக்கினைத் தீர்ப்பைக் குறிப்பதனால், பரிசுத்த ஆவியானவர் அக்கினியோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ள ஏனைய வசனங்களும் ஆக்கினைத் தீர்ப்பைப்பற்றியே கூறுகின்றன என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில் வேதாகமத்தின் ஏனைய இடங்களில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகிக்கும் அல்லது வல்லமை அளிக்கும் செயலைக் குறிப்பிடுவதற்கும் அக்கினி என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் அக்கினிமயமான நாவுகளாக சீஷர்களின்மீது வந்த செயலானது அவர்கள் ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்ட செயலாக உள்ளது (அப்.2:3-4). மேலும், 2தீமோத்தேயு 1:6ல் தேவவரத்தை அனல்மூட்டி எழுப்பிவிடும்படியான அறிவுறுத்தல், ஆவியானவரால் அருளப்படும் வல்லமையைக் குறிக்கின்றது. நாம் வேதவசனங்களின் அர்த்தத்தை அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு சொல்லும் அல்லது வசனமும், அவை இடம்பெறும் வேதப் பகுதியில் எத்தகைய அர்த்தத்துடன் உள்ளது என்பதைக் கண்டறியவேண்டும். இவ்வாறு செய்யாமல், ஒரு சொல்லுக்கு ஒரு இடத்தில் உள்ள அர்த்தத்தை ஏனைய இடங்களுக்கு கொடுக்கக்கூடாது. அதாவது, தண்ணீர் என்னும் சொல் ஒரு இடத்தில் ஆவியானவரைக் குறிப்பதனால், இச்சொல் இடம்பெறும் சகல வசனங்களிலும் ஆவியானவரையே குறிக்கின்றது என்று எண்ணலாகாது

என்னும் சொல்லை உபயோகித்துள்ளார் (லூக்.12:50).[4] தண்ணீரில் முழுக்கி கொடுக்கப்பட்ட ஞானஸ்நானங்களில், யோவான் கொடுத்தது "மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமாகும்" (மத்.3:6, 3:11, மாற்.1:5).[5] அதாவது, யோவானுடைய பிரசங்கத்தைக் கேட்டுத் தங்கள் பாவங்களி லிருந்து மனந்திரும்பியவர்கள், தாங்கள் மனந்திரும்பியதற்கான அடை யாளமாக அவனிடம் ஞானஸ்நானம் பெற்றனர். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய ஊழிய காலத்தில் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத் துள்ளார் (யோவா.3:26). ஆனால், இது யோவான் கொடுத்த ஞானஸ்நா னத்தைவிட வித்தியாசமானது. ஏனெனில், இயேசுகிறிஸ்து மக்களைத் "தம்முடைய சீஷராக்கிய பின்பே" அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (யோவா.4:1). அத்தோடு, இவ்விதமாக ஞானஸ்நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து நமக்குக் கட்டளையிட்டுள்ளார் (மத்.28:19). இதனால்தான் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற் றிருந்த மக்களுக்கு இயேசுகிறிஸ்து கட்டளையிட்டவிதமாக மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளதை அப்போஸ்தலர் 19:1-5 அறியத் தருகின்றது.[7] யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கா னதாய் இருக்கையில், இயேசுகிறிஸ்துவின் கட்டளையின்படியான ஞானஸ்நானம் இரட்சிப்புக்கானதாய் உள்ளது. கிறிஸ்தவ உலகில் இது "கிறிஸ்தவ ஞானஸ்நானம்" என்று அழைக்கப்படுகின்றது. இவற்றைத் தவிர, ஆவியின் ஞானஸ்நானத்தைப்பற்றியும் (மத்.3:11, மாற்.1:8, அப்.1:4) வேதாகமத்தில் நாம் வாசிக்கலாம். இது, ஒருவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் அனுபவமாயுள்ளது (எபே.1:13, அப்.19:2).[8]

---

[4] தமிழில் "ஸ்நானம்" என்னும் சொல்லே உள்ளபோதிலும், மூலமொழியில் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடும் சொல்லே உள்ளது. இதனால்தான் ஆங்கிலத் தில் "பெப்டிஸம்" (baptism) என்னும் சொல்லை உபயோகித்துள்ளனர்.

[5] மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் யோவா னிடம் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதை மத்தேயு 3:6உம், மாற்கு1:5உம் அறியத்தருகின்றன. யோவானும், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தி னால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" என்று மத்தேயு 3:11ல் குறிப்பிட்டுள்ளான். இதனால்தான், யோவான், "பாவமன்னிப்புக்கென்று மனந் திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்" என்று லூக்கா 3:6ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

[7] இச்சம்பவம் பற்றிய மேலதிக விஷயங்கள் ஆறாம் அத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளன.

[8] இதைப்பற்றி பக்கங்கள் 92 முதல் 97 வரை விளக்கப்பட்டுள்ளது.

வேதாகமத்தில் வித்தியாசமான ஞானஸ்நானங்களைப்பற்றி குறிப்பிடப் பட்டுள்ளதினால், ஞானஸ்நானத்தைப்பற்றிய குழப்பங்கள் கிறிஸ்தவர் கள் மத்தியில் காணப்படுகின்றன. சில கிறிஸ்தவர்கள், ஞானஸ்நானம் என்னும் சொல் இடம்பெறாத வேதப்பகுதிகளையும் ஞானஸ்நானத் தைப்பற்றிய குறிப்புகளாகக் கருதுவதும் இத்தகைய குழப்பத்திற்கான ஒரு காரணமாக உள்ளது. வேதாகமத்தில், (மூலமொழியில்) "பெப் டிஸ்ஸோ" (*baptizo*) என்னும் கிரேக்கச் சொல்லே ஞானஸ்நானத் தைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது. இச்சொல் ஆங்கிலத்தில் "பெப்டிஸம்" (baptism) என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு, தமிழில் "ஞானஸ்நானம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய மொழிபெ யர்ப்புகளில் "திருமுழுக்கு" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. உண்மையில், மூலமொழியில் "பெப்டிஸ்சோ" என்னும் சொல் இடம் பெறும் வேதப்பகுதிகள் மாத்திரமே ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகளாக உள்ளன.[9] ஆனால் சில கிறிஸ்தவர்கள், "கழுவுதல்" "ஸ்நானம்" "தண்ணீரினால் சுத்திகரித்தல்" என்னும் அர்த்தமுள்ள சொற்களையும் ஞானஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகளாகக் கருதுகின் றனர். இதனால், தற்காலத்தில் ஞானஸ்நானத்தைப்பற்றிய பல தவறான உபதேசங்கள் உருவாகியுள்ளன. எனவே, ஞானஸ்நானம் என்னும் சொல் இடம்பெறாத வேதப்பகுதிகளை நாம் ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகளாகக் கருதலாகாது.



ஞானஸ்நானம் என்னும் சொல்
இடம்பெறாத வேதப்பகுதிகளை
ஞானஸ்நானத்தைப்பற்றிய
குறிப்புகளாகக் கருதுவது தவறாகும்.



சில கிறிஸ்தவர்கள், யோவானுடைய ஞானஸ்நானத்திலிருந்தே கிறிஸ் தவ ஞானஸ்நானம் உருவாகியுள்ளதாகக் கருதுகின்றனர்.[10] இவர்க ளைப் பொறுத்தவரை இரண்டும் ஒரேவிதமான ஞானஸ்நானமாகவே

---

[9] புதிய ஏற்பாட்டில் "பெப்டிஸ்ஸோ" (*baptizo*) என்னும் வினைச்சொல்லும், இதன் பெயர்ச்சொல்லான "பெப்டிஸ்மா" (*baptisma*) என்னும் சொல்லும் மொத்தம் 96 தடவைகள் இடம்பெற்றுள்ளது.

[10] J.Gill, *A Complete Body of Doctrinal and Practical Divinity Vol. III*, pp.290.

உள்ளன.[11] ஆனால் இது தவறான ஒரு கருத்தாகும். ஏனெனில், இரண்டும் ஒரேவிதமான ஞானஸ்நானமாக இருந்திருந்தால், அப்போஸ் தலர் 19:1-5ல் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றவர்களுக்குப் பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்திருக்கமாட்டார்.[12] யோவா னுடைய ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கானதாக மாத்திரமே இருந்தது. ஆனால் கிறிஸ்தவ ஞானஸ்நானம், மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாய் இருப்பவர்களுக்கானதாகும்.[13] யோவானிடத் தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் இயேசுகிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவன் மூலம் கேள்விப்பட்டிருந்ததோடு (லூக்.3:16), இயேசுகிறிஸ் துவின் ஊழிய காலம் ஆரம்பமாகும் வரை யோவானுடைய சீஷர்களா கவே இருந்தனர் (யோவா.5:33-35). அதன் பின்பே இவர்கள் இயேசு கிறிஸ்துவின் சீஷரானார்கள் (யோவா.1:35-37, 3:25-26). உண்மையில், இயேசுகிறிஸ்துவின் சீஷராகும் வரை இவர்கள் மனந்திரும்பியவர்க ளாக மாத்திரமே இருந்தனர். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றத்தொடங் கிய பின்பே இவர்கள் அவருடைய சீஷராகினார்கள். எனவே, மனந்தி ரும்புதலும் இயேசுகிறிஸ்துவின் சீஷராகுதலும் இவர்களுக்கு கால

---

[11] J.Calvin, *Institutes of the Christian Religion*, p. 861.

[12] எபேசுவிலிருந்தவர்கள் "சீஷர்கள்" என்று அப்போஸ்தலர் 19:1ல் குறிப்பிடப் பட்டுள்ளதினால், இவர்கள் கிறிஸ்தவர்களாகவே இருந்திருக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். ஏனெனில், இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளில் சீஷர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் கிறிஸ்தவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் மூலமொழியில் அப்போஸ்தலர் 19:1 தவிர்ந்த ஏனைய இடங்களில் சீஷர்கள் என்னும் சொல்லுக்கு முன் "இந்த" அல்லது "அந்த" என்று குறிப்பிட்டுச் சொல்லும் "சுட்டுச்சொல்" (definite article – ஆங்கிலத்தில் the) உள்ளது. இது குறிப்பிட்ட ஒரு வகையான சீஷர்களைச் சிறப்பான விதத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் முறையாக உள்ளது. எனவே, அப்போஸ்தலர் 19:1ல் உள்ள சீஷர்கள் சுட்டுச்சொல் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளதினால், இவர்கள் ஏனைய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சீஷர்களைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கேள்விப்படாதவர்களாகவும் (அப்.19:2), இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவர்களாகவும் இருந்ததினால் (அப்.19:4) இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களான கிறிஸ்தவர்களாக இருக்கவில்லை. இவர்கள் யோவானின் சீஷர்கள் என்பதை அறியத்தருவதற்காகவே சீஷர்கள் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது (T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism: Sign of the New Covenant in Christ*, p. 38; D.G.Peterson, *Acts: The Pillar New Testament Commentary*, pp. 529-530). கி.பி.4ம் நூற்றாண்டு வரை யோவானை மேசியாவாகக் கருதியவர்கள் இருந்தனர் (C.H.H.Scobie, *John the Baptist*, pp. 187-202).

[13] J.Murray, *Christian Baptism*, pp. 1-2; L.E.Dyer, *Baptism: The Believer's First Obedience*, pp. 10-12.

இடைவெளியுள்ள வித்தியாசமான அனுபவங்களாகவே இருந்தன. இதனால், மனந்திரும்புதலுக்கான யோவானுடைய ஞானஸ்நானமும், இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கான கிறிஸ்தவ ஞானஸ்நானமும் ஒரேவிதமானவை என்று கூறமுடியாது.[14] "இயேசுகிறிஸ்துவின் வருகையைப்பற்றிய எதிர்பார்ப்புடன் மனந்திரும்பியவர்களுக்கு யோவான் ஞானஸ்நானம் கொடுத்தான். ஆனால், இயேசுகிறிஸ்துவுடன் ஐக்கியத்தை ஏற்படுத்துவதாக கிறிஸ்தவ ஞானஸ்நானம் உள்ளது."[15] உண்மையில், "இயேசுகிறிஸ்து அருளும் ஞானஸ்நானத்திற்கான ஆயத்த செயலாகவே யோவான் கொடுத்த ஞானஸ்நானம் உள்ளது."[16] மேலும், இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் கொடுக்கத் தொடங்கிய காலத்தில், யாருடைய ஞானஸ்நானம் சிறந்தது என்னும் சர்ச்சை யோவானுடைய சீஷர்கள் மூலம் ஏற்பட்டது (யோவா.3:25-26).[17] இருவருடைய ஞானஸ்நானமும் வித்தியாசமானவை என்பதை இந்த

---

[14] மாற்கு 1:4லும், லூக்கா 3:6லும் யோவான் "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்ததாகக்" குறிப்பிடப் பட்டுள்ளதினால், அவனுடைய ஞானஸ்நானம் மனிதருக்கு பாவமன்னிப்பை அருளக்கூடியதாக இருந்தது என்று நாம் கருதலாகாது. ஏனெனில் பாவங்களிலிருந்து மனந்திரும்பியவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்த யோவான், தனக்குப் பின்வரும் இயேசுகிறிஸ்துவை மக்களுக்கு சுட்டிக்காட்டுபவராகவே இருந்தார். இயேசுகிறிஸ்துவே மக்களுடைய பாவத்தை மன்னிப்பவராக இருப்பதனால், மனந்திரும்பியவர்களுக்கு யோவான் கொடுத்த ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் மூலம் அருளப்படும் பாவமன்னிப்பை எதிர்பார்த்த நிலையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது.

[15] R.C.Sproul, *Truths We Confess, p.* 114.

[16] M.Green, *Baptism: Its Purpose Practice and Power*, p. 23.

[17] யோவான் 3:25ல் சுத்திகரிப்பைக் குறித்து யோவானுடைய சீஷர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் யூதர்களுடைய சுத்திகரிப்பைப் பற்றியது என்று சிலர் கருதுகின்றனர் (D.A.Carson, *John: The Pillar New Testament Commentary*, p. 210; A.J.Kostenberger, *John: Baker Exegetical Commentary on the NT*, p. 137). ஆனால், அடுத்த வசனத்தில் இயேசுகிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளதினால், இவ்விரு வசனங்களுக்கும் இடையில் இருக்கும் தொடர்பு, யாருடைய ஞானஸ்நானம் மேலானது என்பதைப்பற்றி சர்ச்சை ஏற்பட்டுள்ளதையே அறியத்தருகின்றது. இல்லையென்றால் இவ்விரு வசனங்களுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இராதது மாத்திரமல்ல, சர்ச்சையைப்பற்றிய 25ம் வசனத்தின் குறிப்பு அவசியமற்றதாகவும் இருக்கும். சுத்திகரிப்பைப்பற்றிய சர்ச்சையைத் தொடர்ந்து, இயேசுகிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தைப் பற்றியே யோவானிடம் கேள்வி கேட்கப்படுவதனால் சர்ச்சையானது இருவருடைய ஞானஸ்நானத்தையும் பற்றியதாகவே உள்ளது (G.R.Beasley-Murray, *John: Word Biblical Commentary Vol. 36*, p. 52; G.L.Borchert, *John: The New American Commentary*, p. 190).

சர்ச்சை உறுதிப்படுத்துகிறது.[18] இல்லையென்றால் இப்படியொரு சர்ச்சை அக்காலத்தில் ஏற்பட்டிருக்காது.

ஞானஸ்நானம் எவ்வாறு உருவானது என்பதைப்பற்றியும் வித்தியாசமான கருத்துகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ளன. யோவான் ஸ்நானகனே ஞானஸ்நானம் கொடுக்கும் முறையை அறிமுகப்படுத்தியதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால் அதற்கும் முற்பட்ட காலத்திலேயே யூதர்களாக மாறும் புறஜாதியாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை யூதர்கள் மத்தியில் இருந்துள்ளது.[19] இது வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் உருவானது.[20] யூதராகுவதற்கு அதுவரை காலமும் இருந்த விருத்தசேதனத்தோடு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட சடங்காசாரமாக இந்த ஞானஸ்நானம் இருந்தது.[21] மேலும், பிறமதங்களிலும் தண்ணீரின் மூலமான பல்வேறு விதமான சுத்திகரிப்பு முறைகளும் ஸ்நானங்களும் உள்ளன. சரீரத்தைச் சுத்திகரிப்பதற்காகத் தண்ணீர் உபயோகிக்கப்படுவதனால், சகல மதங்களிலும் சடங்காசார ரீதியான சுத்திகரிப்புக் காரியங்களில் தண்ணீரின் மூலமான ஸ்நானம் ஒரு அடையாளச் செயலாக இருந்து வந்துள்ளது.[22] இதனால், பிறமதங்களிலிருந்தே ஞானஸ்நானம் வேதாகமத்திற்குள் வந்ததாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், கிறிஸ்தவ மார்க்கத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் தனித்துவமானதாகவும், சிறப்பான அர்த்தமுடையதாகவும் உள்ளது. இது பிறமதங்களிலுள்ள

---

[18] யோவான் ஸ்நானகனைப்பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் வாசித்தாலும், இரட்சிப்பின் சரித்திரத்தில் அவனுடைய ஊழியம் பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கு உரியதாகவே உள்ளது. இதனால்தான் "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கிவந்தது" (லூக்.16:16) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே, யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானத்தைப் புதிய உடன்படிக்கையின் கீழ் வரும் கிறிஸ்தவ ஞானஸ்நானமாகக் கருதமுடியாது.

[19] Schurer, *The Jewish People in the Time of Jesus Christ Volume 2*, p. 322; W.O.E.Oesterley & G.H.Box, *The Religion and Worship of the Synagogue*, p. 281; H.H.Rowley, "Jewish Proselyte Baptism" in *Hebrew Union College Annual*. (1940), p. 316. H.G.Marsh, *The Origin and Significance of the New Testament Baptism*, p, 9. W.F.Flemington, *The New Testament Doctrine of Baptism*, p. 4.

[20] R.C.Sproul, *Truths We Confess*, p. 113.

[21] D.Bridge & D.Phypers, *The Water that Divides,* p. 19.

[22] J.Green & S.McKnight, ed., *Dictionary of Jesus and the Gospels*, p. 55; H.F.Stander & J.P.Louw, *Baptism in* the *Early Church*, p. 180.

நம்பிக்கைகளையும் செயல்முறைகளையும் அடிப்படையாகக் கொண்டதல்ல.[23] உண்மையில், பழைய ஏற்பாட்டின் சுத்திகரிப்பு ஸ்நானங்களையும், யூதர் மற்றும் சாக்கடலுக்கருகில் வாழ்ந்த "கும்ரான்" என்னும் சமூகத்தவரின் மத்தியிலும் இருந்த புனித ஸ்நான முறைகளை அடிப்படையாகக் கொண்டே ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கிறிஸ்தவத்தில் உருவாகியுள்ளது. எனினும், கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் சிறப்பம்சங்களும் அதன் அர்த்தமும் பழைய ஏற்பாட்டிலிருந்தோ, கும்ரான் சமூகத்தவரிடமிருந்தோ வரவில்லை. கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்குத் தேவனே புதிய ஏற்பாட்டில் சிறப்பான அர்த்தத்தைக் கொடுத்துள்ளார். எனவே, தண்ணீரில் கொடுக்கப்படும் புனித ஸ்நானங்கள் பிற மதங்களிலும் இருக்கின்ற போதிலும், கிறிஸ்தவ ஞானஸ்நானம் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு புனித காரியமாகவே உள்ளது. இது இயேசுகிறிஸ்துவினால் நியமிக்கப்பட்ட சிறப்பான ஞானஸ்நானமாக உள்ளது.

வேதாகம காலத்தில் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறும் முறையே கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தது.[24] புறஜாதியார் யூதராக மாறும்போது, முதலில் அவர்கள் எதற்காக யூதர்களாக மாறுகின்றனர் என்பதை அறிந்துகொள்வதற்கான கேள்விகள் அவர்களிடம் கேட்கப்படும். அதன்பின்னர் அவர்கள் கைக்கொள்ளவேண்டிய யூத மார்க்க கட்டளைகள் அவர்களுக்கு அறிவிக்கப்படும். இதற்கு அவர்கள் சம்மதித்தால் உடனடியாக அவர்களுக்கு விருத்தசேதனம் செய்யப்படும். விருத்தசேதனம் செய்யும்போது ஏற்படும் காயம் ஆறிய பின்னர் அவர்கள் தண்ணீரில் மூழ்கித் தங்களுக்குத் தாங்களே ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கம். பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஏனைய பெண்கள் ஞானஸ்நானம் கொடுத்தனர்.[25] யூதராக மாறும் புறஜாதியாருக்கான ஞானஸ்நானம், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சீரிய படைத்தலைவனான நாகமான் யோர்தான் நதியில் ஏழு தரம் முழுகியதைப் போன்றது (2ராஜா.5:14) என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். புறஜாதியாருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டு

[23] G.R.Beasley-Murray, *Baptism in the New Testament*, p. 4; B.Witherington III, *Troubled Waters: Rethinking the Theology of Baptism*, p. 9.

[24] இதற்கான ஆதாரங்களுக்கு மூன்றாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[25] C.Jones, ed., *The Study of Liturgy*, p. 73.

வந்த ஞானஸ்நானத்தை யோவான் ஸ்நானகன் யூதர்களுக்கும் கொடுத்தான். இதன் மூலம், புறஜாதியார் மாத்திரமல்ல, யூதர்களும் பாவிகள், அவர்களும் மனந்திரும்பி வரவிருக்கும் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அறிவிப்பவனாக யோவான் ஸ்நானகன் இருந்தான்.



## ஞானஸ்நானம் பெறுபவர் இயேசுகிறிஸ்துவைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டுள்ளதை அறிக்கையிடவேண்டியது அவசியம்



கிறிஸ்தவ ஞானஸ்நானம் யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானத்தைப் போல மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானமாக இராமல், மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்களுக்கானதாக இருந்தது. இதனால், ஞானஸ்நானம் பெறுபவர் இயேசுகிறிஸ்துவைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டுள்ளதைத் தன் வாயினால் அறிக்கையிடுவது அவசியமானதாக இருந்தது. இதற்காக ஞானஸ்நானம் பெறுபவரிடம் சில கேள்விகள் கேட்கப்படுவது வழக்கம். இதனால்தான் பிலிப்புவின் கேள்விகளுக்குப் பதிலளித்த எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர் “இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை நான் விசுவாசிக்கின்றேன்” என்று அறிக்கை செய்தான் (அப்.8:37). மேலும், வேதாகம காலத்தில் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷச் செய்தியைக் கேட்டு, அவரைத் தெய்வமாக ஏற்றுக்கொள்பவர்களுக்கு உடனடியாக ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. “புதிய ஏற்பாட்டுச் சபையில், சிறப்பான ஞானஸ்நான வகுப்புகளோ, ஞானஸ்நானம் பெறுபவர் உண்மையிலேயே கிறிஸ்தவராகியிருக்கின்றாரா என்பதைக் கண்டறிவதற்கான கால அவகாசமோ இருக்கவில்லை.”[26] இத்தகைய நடைமுறைகள் பிற்காலத்திலேயே கிறிஸ்தவ சபைக்குள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆரம்ப காலத்தில், இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசிக்கும் வளர்ந்தவர்களுக்கு மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

[26] Colin Buchanan, *Infant Baptism under Cross Examination*, p. 20.

ஆனால் கி.பி.3ம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கும் முறை உருவானது.[27] மேலும், ஆரம்பகாலத்தில் தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கும் முறையே கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தது. கிரேக்க சபைகளில் ஒருவரை மூன்று தரம் தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆனால் கி.பி.2ம் நூற்றாண்டில் தண்ணீரை ஒருவரது தலைமீது ஊற்றி அல்லது தெளித்து அல்லது பூசி ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைச் சில சபைகள் அறிமுகப்படுத்தின. தற்காலத்தில் "குவேக்கர்ஸ்" "செல்வேஷன் ஆர்மி" என்னும் இரு சபைகளும் ஞானஸ்நானம் கொடுப்பதைத் தவிர்த்து வருகின்றனர். இரட்சிப்பின் அனுபவத்திற்கு வெளிப்படையான அடையாளமாக ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமற்றது என்று கருதும் இவர்கள், ஞானஸ்நானத்தைப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படும் அனுபவமாக விளக்குகின்றர்.[28] ஆனால், இயேசுகிறிஸ்துவின் கட்டளையும் (மத்.28:19-20), ஆதிகிறிஸ்தவர்களின் செயல்முறையும் (அப்.2:38, 2:41) தண்ணீர் ஞானஸ்நானத்தின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுவதோடு, தண்ணீர் ஞானஸ்நானமும் ஆவியின் ஞானஸ்நானமும் வித்தியாசமான அனுபவங்கள் என்பதை அறியத்தருகின்றன. இந்நூலில் ஞானஸ்நானத்தைப்பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்கள் தொடர்ந்து வரும் அத்தியாங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.



[27] K.Aland, *Did the Early Church Baptize Infants?*, pp. 100-111. குழந்தை ஞானஸ்நானம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆறாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[28] *Quakers' Declaration of Faith* Issued by the Richmond Conference in 1887; *One Faith, One Church: The Salvation Army's Response to Baptism, Eucharist & ministry*, p.11.



## முதலாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்னும் கேள்விக்கு, வேதாகமம் மூன்று காரணங்களைப் பதிலாகத் தந்துள்ளது. முதலாவதாக, இது இயேசு கிறிஸ்துவின் கட்டளையாயுள்ளது. இதனால், நாம் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும். இரண்டாவதாக, இரட்சிப்பைத் தொடர்ந்துவரும் செயலாக ஞானஸ்நானம் இருப்பதனால், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிக்கப்பட்டவன் அடுத்து செய்யவேண்டிய முக்கிய காரியமாக ஞானஸ்நானம் உள்ளது. மூன்றாவதாக, ஞானஸ்நானம் கிறிஸ்தவனின் அடையாளமாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பெற்றவனே கிறிஸ்தவனாகக் கருதப்பட்டான். இம்மூன்று காரணங்களும் முதலாம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## முதலாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்தின் அவசியம்

## நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும்?

கிறிஸ்தவ மார்க்கத்தில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமான ஒரு புனித காரியமாக உள்ளது. "செல்வேஷன் ஆர்மி" (Salvation Army) "குவேக்கர்ஸ்" (Quakers) என்னும் இரு கிறிஸ்தவ சபையினரைத் தவிர, ஏனைய சகல சபைப் பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் ஞானஸ்நானத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்துள்ளனர். எனினும் சகல சபைப்பிரிவினரும் ஞானஸ்நானத்தின் அவசியத்தைச் சரியான விதத்தில் அறிந்திருக்கின்றனர் என்று கூறுவதற்கில்லை. தற்காலத்தில் பல சபைகளில் ஞானஸ்நானம் ஒரு சடங்காசாரமாக மாத்திரமே உள்ளது. இதனால், ஞானஸ்நானம் பெற்றவர்களும் தாங்கள் எதற்காக ஞானஸ்நானம் பெற்றோம் என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். எனவே, ஞானஸ்நானத்தின் அவசியத்தை அறிந்துகொள்வதற்காக

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதைத் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## (1) இயேசுகிறிஸ்துவின் அறிவுறுத்தலாய் உள்ளது

கிறிஸ்தவ மார்க்கத்தில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமான ஒரு புனிதக் காரியமாக இருப்பதற்கான காரணம், இது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு கொடுத்துள்ள உன்னதமான ஒரு கட்டளையாக இருப்பதேயாகும். எனவே, நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும்? என்னும் கேள்விக்கான பதில், நாம் இயேசுகிறிஸ்து வின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதாகவே உள்ளது. இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த உன்னதக் கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உப தேசம்பண்ணுங்கள் (மத்.28:19-20).

இயேசுகிறிஸ்துவின் இக்கட்டளையில், மக்களைச் சீஷராக்கி ஞானஸ் நானம் கொடுக்கும்படி நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். இதனால் நாம் ஞானஸ்நானம் பெறவேண்டியவர்களாய் இருக்கின்றோம். உண் மையில், நாம் தேவனுக்கு கீழ்ப்படிவதை வெளிப்படையாகக் காண்பிக் கும் ஒரு செயலாக நம்முடைய ஞானஸ்நானம் உள்ளது. நாம் தேவனை விசுவாசிக்கிறோம், அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறோம் என்று கூறுபவர்களாய் இருந்தால், நாம் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்களாகவே இருப் போம். ஞானஸ்நானம் பெறாமல் நாம் தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகின்றோம் என்று கூறுவது முழுமையான ஒரு பொய்யாகவே இருக்கும். எனவே, “இயேசுகிறிஸ்து நம்முடைய கர்த்தர் என்று நாம் அறிக்கையிடுபவர்களாயிருந்தால், அவருடைய

கட்டளைக்கு கீழ்ப்படிந்து நாம் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும்."[1] கிறிஸ்தவனாயிருப்பவன் இயேசுகிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியவனாக இருக்கின்றான். "நாம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவினுடைய கட்டளையாக இருப்பதனால், இக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக நாம் ஞானஸ் நானம் பெறவேண்டியது நமது கடமையாக உள்ளது."[2] உண்மையில், "ஞானஸ்நானம் பெறாமலிருப்பது இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படியாமல் இருப்பதையே காண்பிக்கும்."[3] ஏனெனில், "இயேசு கிறிஸ்துவின் கட்டளையின்படி ஞானஸ்நானம் பெறுவது, அவருக்குக் கீழ்ப்படிவதைக் காண்பிக்கும் செயலாக உள்ளது."[4]



**இயேசுகிறிஸ்து நம்முடைய கர்த்தராயிருந்தால், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாம் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும்.**



இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காகவே நாம் ஞானஸ் நானம் பெறவேண்டும் என்பதை அவருடைய வாழ்க்கையே நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. இயேசுகிறிஸ்து மனிதனாக வாழ்ந்தபோது "நாம் பின்பற்றவேண்டிய மாதிரியை வைத்துப் போனார்" என்று 1பேதுரு 2:21 கூறுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி இவ்வுலகில் வாழ்ந்த இயேசுகிறிஸ்து (யோவா.4:34, 6:38), தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காகவே ஞானஸ்நானம் பெற்றார் என்பதை மத்தேயு 3:15 அறியத்தருகின்றது. இதனால்தான் அவர் ஞானஸ்நானம் பெறுவ தற்காக யோவான் ஸ்நானகனிடத்தில் வந்தபோது, "இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று கூறினார் (மத்.3:15). "தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு ஒருவன் செய்யவேண்டிய சகல காரியங்களையும் குறிப்பிடுவதற்கே 'எல்லா நீதியையும் நிறைவேற்றுவது' என்னும் சொற்பிரயோகத்தை இயேசு

[1] M.Green, *Baptism: Its Purpose and Power*, pp. 40-41.
[2] S.Gaukroger, *Being Baptized*, p. 30.
[3] R.C.Sproul, *Truths We Confess Volume III*, p. 126.
[4] J.H.Armstrong, ed., *Understanding Four Views of Baptism*, p. 13.

கிறிஸ்து உபயோகித்துள்ளார்."[5] இது, "தேவன் மனிதரிடம் எதிர்பார்க்கும் நீதியான வாழ்க்கை முறையாக உள்ளது."[6] எனவே, "தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்காகவே இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுள்ளார்."[7] இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை நாம் பின்பற்ற வேண்டிய மாதிரியாக இருப்பதனால் (1பேது.2:21), நாமும் அவரைப் போல தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறவேண்டும்.



## (2)
## இரட்சிக்கப்பட்டவனின் அடுத்தசெயலாய் உள்ளது

நாம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பது இயேசுகிறிஸ்துவினுடைய உன்னதக் கட்டளையாயிருப்பதனால் மாத்திரமல்ல (மத்.28:19), இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டவன் செய்யவேண்டிய அடுத்த முக்கியமான காரியமாக ஞானஸ்நானம் இருப்பதனாலும்,


---

[5] C.L.Blomberg, *Matthew: The New American Commentary*, p. 81. "நீதி" என்னும் சொல் பவுலினுடைய நிருபங்களில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவனுக்குத் தேவனால் அருளப்படும் நீதியாக உள்ளபோதிலும், மத்தேயுவினுடைய சுவிசேஷத்தில் இச்சொல் மனிதரிடத்தில் தேவன் எதிர்பார்க்கும் நீதியான வாழ்க்கை முறையையே குறிக்கின்றது. தேவனுக்கு முன்பாக சரியான விதத்தில் வாழ்வதையே மத்தேயுவின் சுவிசேஷத்தில் நீதி என்னும் சொல் குறிக்கின்றது (B.Przybylski, *Righteousness in Matthew and His World of Thought*, pp. 78-99; R.Mohrlang, *Matthew and Paul: A Comparison of Ethical Perspectives*, pp. 113-114). பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் நீதி என்னும் சொல்லுக்கு இருந்த அர்த்தத்திலேயே மத்தேயுவும் இச் சொல்லை உபயோகித்துள்ளார். எனவே, இது தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து வாழும் நீதியான வாழ்க்கை முறையாகவே உள்ளது (D.Hill, *Greek Words and Hebrew Meanings*, p. 127).


[6] R.T.France, *Matthew: The New International Commentary on the NT*, p. 119.

[7] M.Anderson, *See, Here is Water: A Case for Believer's Baptism*, p. 24. தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற இயேசுகிறிஸ்து, ஞானஸ்நானத்தின் மூலம் பாவிகளோடு தம்மை இனங்கண்டுள்ளார். ஏனெனில், யோவான் ஸ்நானகன் கொடுத்த மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தையே இயேசுகிறிஸ்து பெற்றார். அதாவது யோவானின் பிரசங்கத்தைக் கேட்டு தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பியவர்களே, மனந்திரும்பியதற்கான அடையாளமாக யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றனர். ஆனால் இயேசுகிறிஸ்து பூரண பரிசுத்தராக இருந்ததினால், அவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டியவராக இருக்கவில்லை.

நாம் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயுள்ளது. உண்மை யில், இரட்சிப்பைத் தொடர்ந்து வரும் செயலாகவே ஞானஸ்நானம் உள்ளது. ஐந்திற்குப் பிறகு ஆறு வருவது போல இரட்சிப்பைத் தொடர்ந்து வருவது ஞானஸ்நானமாகும். இதனால்தான், இயேசுகிறிஸ் துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டவர்கள் அனைவரும் உடனடியாக ஞானஸ்நானம் பெற்றுள்ளதாக அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு, அவனுடைய செய்தியைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் அன்றைய தினமே ஞானஸ்நா னம் பெற்றார்கள் (அப்.2:38-41). இதைப்போலவே கொர்நேலியுவின் வீட்டிலும் நடைபெற்றது (அப்.10:44-48). மேலும், தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப்.8:12). இதைப்போலவே, பிலிப்பி பட்டணத்தில் லீதியாளின் வீட்டாரும் சிறைச்சாலைக்காரனின் வீட்டாரும் சுவிசேஷத்தைக் கேட்டு இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக ஞானஸ்நானம் பெற்ற னர் (அப்.16:14-15, 31-33). பிலிப்புவின் மூலம் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்து அவரை விசுவாசித்த எத்தியோப்பிய மந்திரி, "இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடை என்ன?" என்று கேட்டதோடு, உடனடியாக ஞானஸ்நானம் பெற்றான் (அப்.8:35-38). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள இச்சம்பவங்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் உடனடியாக செய்ய வேண்டிய அடுத்த காரியம் ஞானஸ்நானம் பெறுவது என்பதை அறியத்தருகின்றன.



ஞானஸ்நானம் பெறாமலிருப்பது இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதையே காண்பிக்கும்.



இரட்சிக்கப்பட்டவன் அடுத்துச் செய்யவேண்டிய காரியம் ஞானஸ் நானம் பெறுவதாக இருப்பதினாலேயே வேதாகமத்தில் இரட்சிப்பும்

ஞானஸ்நானமும் ஒன்றோடொன்று தொடர்புள்ள காரியங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையில், "புதிய ஏற்பாட்டில் இவைகள் பிரிக்கமுடியாத விதத்தில் இணைக்கப்பட்டுள்ளன."[8] இதனால்தான், மாற்கு 16:16ல் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைத் தொடர்ந்து வரும் செயலாக ஞானஸ் நானம் இருப்பதை இவ்வசனம் அறியத்தருகின்றதே தவிர, சிலர் தர்க்கிப்பதுபோல, ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் இரட்சிக்கப்படலாம் என்று இவ்வசனம் கூறவில்லை. ஏனெனில், மூலமொழியில் இவ்வசனத் தில் விசுவாசத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, எப்படிப்பட நிலையில் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதையே இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது. அதாவது, விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதையே இவ்வசனம் அறியத்தருகின் றது. இதனால்தான் அடுத்த வாக்கியத்தில் ஞானஸ்நானத்தைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. "விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கப்படுவான்" என்றே இவ்வசனம் முடிவடைகிறது. எனவே, "ஞானஸ்நானம் பெறாமலிருப்பது அல்ல, விசுவாசியாமலிருப்பதே ஆக்கினைத் தீர்ப்புக்கான காரணமாய் உள்ளது."[9] மேலும், "ஒருவன் ஞானஸ்நானம் பெற்றும், இயேசுகிறிஸ்துவை விசுவாசியாதவனாக இருந்தால் அவனுக்கு இரட்சிப்பு இல்லை என்பதையும் இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது."[10] மனிதனுடைய இரட்சிப்பு அவன் பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது (யோவா.3:15, 3:18, 3:36, 5:24, அப்.2:21, 10:43).[11]

---

[8] P.Masters, *Baptism: The Picture and its Purpose*, p. 3.

[9] M.J.Erickson, *Christian Theology*, p. 1098.

[10] W.W.Wiersbe, *Be Diligent*, p. 154.

[11] "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட் டாயிற்று" (யோவா.3:18) என்றும், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்றும் (யோவா.3:36) யோவான் குறிப்பிட்டுள்ளார். "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" என்று அப்போஸ்தலர் 2:21லும், "அவரை விசுவாசிக்கிற வன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவா னென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்"

புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய அறுபது இடங்களில் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு இடத்தில்கூட ஞானஸ்நானத் தைப்பற்றி நாம் வாசிப்பதில்லை.[12] இரட்சிப்பைத் தொடர்ந்துவரும் செயலாகவே ஞானஸ்நானம் உள்ளது. இதனால்தான், ஞானஸ்நான மும் இரட்சிப்பும் ஒன்றோடொன்று தொடர்புள்ள செயல்களாக வேதாக மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. உண்மையில், "ஞானஸ்நானமானது இரட்சிப்பை வெளிப்படுத்தும் செயலாக, அல்லது இரட்சிப்பின் விளைவா கவே உள்ளது."[13] இரட்சிப்பின் பின்னர் அதனைத் தொடர்ந்துவரும் செயலாக ஞானஸ்நானம் இருப்பதனால், ஞானஸ்நானம் மனிதரை இரட்சிக்கும் செயல் என்று கூறுவது அர்த்தமற்றது.[14] எனினும், இரட்சிப்பைத் தொடர்ந்துவரும் செயலாக ஞானஸ்நானம் இருப்பத னால், இரட்சிக்கப்பட்டவர்கள் கட்டாயம் ஞானஸ்நானம் பெறவேண்டும்.



ஐந்திற்குப் பிறகு
ஆறு வருவதுபோல
இரட்சிப்பைத் தொடர்ந்து வருவது
ஞானஸ்நானமாகும்.



உண்மையில், ஞானஸ்நானம் பெறுவது அல்ல இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதே ஒருவன் இரட்சிப்படைவதற்கு செய்யவேண்டிய ஒரே ஒரு காரியமாக இருப்பதாக வேதாகமம் கூறுகிறது. இதனால்தான், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்ட மனிதனுக்குப் பவுல், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று கூறினார் (அப்.16:30-31). "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று

---

என்று அப்போஸ்தலர் 10:43லும் குறிப்பிடப்பட்டுள்ளது. "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா.5:24) என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார்.

[12] G.A.Boyd, *Oneness Pentecostals & the Trinity*, p. 136.

[13] M.J.Erickson, *Christian Theology*, p. 1099.

[14] P.Masters, *Baptism: The Picture and Its Purpose*, p. 3.

உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோ.10:9) என்றே வேதாகமம் கூறுகிறது. உண்மையில், மனிதர் இரட்சிக்கப்படு வதற்கு இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைத் தவிர வேறு வழிகள் எதுவும் இல்லை. "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர் களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12) என்பதே வேதாகமம் நமக்கு அறியத்தரும் சத்தியமாகும். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்ப வனுக்கு தேவன் அருளும் இலவச ஈவாகவே இரட்சிப்பு உள்ளது. இதை ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் தான், "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே.2:8-9) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, ஞானஸ்நான பெறுவதனால் எவராலும் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால், இரட்சி பைத் தொடர்ந்துவரும் செயலாக, அதாவது, இரட்சிக்கப்பட்டவ அடுத்ததாகச் செய்யவேண்டிய காரியமாக ஞானஸ்நானம் உள்ளது. இதனால்தான், வேதாகம காலத்தில் இரட்சிக்கப்பட்ட உடனேயே விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றனர்.



## (3) இன்றியமையாத அடையாளமாய் உள்ளது

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்படைபவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயிருப்பதற்கான இன்னுமொரு காரணம், "ஞானஸ்நானம் கிறிஸ்தவர்களின் அடையாளமாக இருப்பதாகும்."[16] புதிய ஏற்பாட்டில், கிறிஸ்தவனை வேறுபடுத்திக் காட்டும் சிறப்பம்சமாக ஞானஸ்நானம் உள்ளது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவனே புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவனாக இருக்கின்றான். ஞானஸ்நானம் பெறாதவர்கள் எவருமே அக்கால சபையில் இருக்கவில்லை. உண்மையில், "சபையானது

[16] M.Green, *Baptism: Its Purpose Practice and Power*, p. 41.

ஞானஸ்நானம் பெற்றவர்களின் சமுதாயமாக இருந்தது"[17] இதனால், "ஞானஸ்நானம் பெறாதவன் கிறிஸ்தவனே அல்ல என்னும் நிலையே புதிய ஏற்பாட்டில் உள்ளது."[18] ஆதிக்கிறிஸ்தவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவின் அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்களாகவே இருந்தனர் என்பதைப் புதிய ஏற்பாடு அறியத்தரு கின்றது. இயேசுகிறிஸ்துவின் கட்டளையையும், அப்போஸ்தலர்களின் செயல்முறையையும் அடிப்படையாகக் கொண்டு, இரட்சிக்கப்படுப வர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவின் மீதான தமது விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதைப் புதிய ஏற்பாட்டில் நாம் காணலாம். இதனால், "ஞானஸ்நானம் கிறிஸ்தவனுக்கான சிறப்பான அடையாளமாகவும்,"[19] கிறிஸ்தவனுடைய இன்றியமையாத செயலாகவும் உள்ளது. எனவே, கிறிஸ்தவனாயிருப்பவன் கட்டாயம் ஞானஸ்நானம் பெற்றவனாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்படைபவர்கள், அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறவேண்டி யது அவசியமாயுள்ள போதிலும், இயேசுகிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் பெறாமலேயே பரதீசுக்குச் சென்றமையால் (லூக்.23:43), ஞானஸ்நானம் அவசியமில்லை என்று சிலர் கருதுகின்றனர். ஆனால், அக்கள்ளன் மரிக்கும் நேரத்திலேயே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தான் என்பதை நாம் மறக்கலாகாது. இதனால், அவனால் ஞானஸ்நானம் பெறமுடியாமல் போய்விட்டது. ஆனால், நாம் அந்தக் கள்ளனுடைய நிலையில் இல்லை. எனவே, இச்சம்பவத்தை ஆதாரங்காட்டி, ஞானஸ்நானத்தைத் தவிர்ப்பது அர்த்தமற்றது. ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிவதைக் காண்பிக்கும் அவசியமான செயலாக உள்ளது.



[17] D.F.Wright, *What has Infant Baptism done to Baptism?* p. 36.
[18] S.Gaukroger, *Being Baptized*, p. 25.
[19] J.H.Armstrong, ed., *Understanding Four Views on Baptism*, p. 13.



## இரண்டாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு எப்படிப்பட்டவனாக இருக்கவேணடும் என்பதையும் வேதாகமம் அறியத்தருகின்றது. முதலாவதாக, அவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியைச் சரியானவிதத்தில் புரிந்துகொண்டு, தன்னுடைய பாவ நிலையிலிருந்து மனந்திரும்பவேண்டும். அதாவது, தான் பாவி என்பதை உணரும் நிலையில் அவனுடைய மனம் மாற்றமடையவேண்டும். இரண்டாவதாக, அவன் இயேசுகிறிஸ்துவே மெய்யான தெய்வம் என்பதையும், அவரே தன்னுடைய பாவத்தைப் போக்கும் பலியைச் செலுத்தியவர் என்பதையும் விசுவாசிக்கவேண்டும். மூன்றாவதாக, அவன் இயேசுகிறிஸ்துவின் சீஷனாயிருப்பதற்குத் தன்னை அவரிடம் முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும்.

## இரண்டாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்திற்கான அருகதை

### நாம் எந்நிலையில் ஞானஸ்நானம் பெறவேண்டும்?

கிறிஸ்தவ வாழ்வில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானதாக இருப்ப தனால், ஞானஸ்நானம் பெறுவதற்கான அருகதை, அதாவது தகுதி என்ன என்பதை நாம் அறிந்திருக்கவேண்டியது அவசியம். தற்காலத் தில் பலர் இதை அறியாத நிலையில் ஞானஸ்நானம் பெறுகின்றனர். இதனால் இவர்களுடைய ஞானஸ்நானம் அர்த்தமற்ற வெறும் சடங்கா சாரமாக மாத்திரமே உள்ளது. இன்று பலர் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் பரலோகத்திற்குப் போய்விடலாம் அல்லது தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுவிடலாம் என்னும் எண்ணத்துடன் ஞானஸ்நா னம் பெறுகின்றனர். இன்னும் பலர், கிறிஸ்தவரைத் திருமணமுடிப்பதற் காக ஞானஸ்நானம் பெறுகின்றனர். ஆனால் இத்தகைய காரணங்க ளுக்காக ஞானஸ்நானம் பெறுவது தவறாகும். உண்மையில், இது

ஞானஸ்நானத்தையே இழிவுபடுத்தும் செயலாகவே இருக்கும். எனவே, நாம் ஞானஸ்நானம் பெறுவதற்கு எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும்? என்பதைத் தேவனுடைய வார்த்தையான வேதாகமத்தின் மூலம் அறிந்திருக்கவேண்டும்.



## (1)
## இயேசுகிறிஸ்துவிடம் மனந்திரும்ப வேண்டும்

ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கான அடிப்படைத் தகுதி மனந்திரும்புதலாகும். இதனால்தான், சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிந்துகொண்டவர்கள் "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டபொழுது, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (அப்.2:38) என்று பேதுரு கூறினார். "மனந்திரும்புதல்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல்,[1] "மனம் மாற்றமடைதல்" என்னும் அர்த்தமுடையது.[2] எனினும், புதிய ஏற்பாட்டில் இச்சொல், பாவத்தை விட்டுத் திரும்பி வருவதைக் குறிப்பிடவே உபயோகிக்கப்பட்டுள்ளது.[3] அதாவது, பாவத்தை விரும்பிய மனம், அதை வெறுத்து தேவனிடமாய் வருவதே மனந்திரும்புதலாக உள்ளது.[4] எனவே, "இது பாவ அறிக்கையையும் இருதயத்தின் மாற்றத்தையும் உள்ளடக்கிய செயல்முறையாக

---

[1] "மெட்டநொய்யா" (*metanoia*) என்னும் கிரேக்கச் சொல்.
[2] C.R.Swindoll, ed., *The Theological Wordbook*, p. 297.
[3] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. p. 810. பழைய ஏற்பாட்டில் "நாஹம்" (*naham*) "ஸ்சுப்" (*shub*) என்னும் இரு எபிரேயச் சொற்களும் மனந்திரும்புதலைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளன. இவற்றில் "நாஹம்" என்பது மனந்திரும்புதலுடன் தொடர்புள்ள மனவருத்தத்தை அல்லது மனவேதனையைக் குறிப்பிடும் சொல்லாகும் (தமிழ் வேதாகமத்தில் இச்சொல் பல இடங்களில் மனஸ்தாபம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). "ஸ்சுப்" என்னும் சொல், மனந்திரும்புதலைப்பற்றிய புதிய ஏற்பாட்டு அர்த்தத்தமுடையது. இது, தீமையிலிருந்தும், தீய வழிகளிலிருந்தும், விக்கிரகத்திடமிருந்தும் தேவனிடம் வருவதைக் குறிப்பிட பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளது.
[4] W.E.Vine, M.F.Unger & W.White, *Vine's Expository Dictionary of Biblical Words*, p. 525.
[5] R.N.Longenecker, *Acts: The Expositor's Bible Commentary Volume 9*, p. 283.

உள்ளது."[5] உண்மையில், "இது ஒருவனுடைய வாழ்க்கையை முழுமையாக (அதாவது வாழ்க்கையின் போக்கை அல்லது திசை யையே) மாற்றியமைக்கும் செயலாகும்."[6] எனவே, "மனந்திரும்புதல் மனதின் மாற்றம் மட்டுமல்ல, வாழ்க்கைமுறையின் மாற்றமாகவும் உள்ளது."[7] இதனால், மனந்திரும்பியவனின் நடத்தை, பழக்கவழக்கங் கள், பேச்சு, சிந்தனை பேன்ற சகல காரியங்களும் மாற்றமடைகின்றன. வேதாகமம் கூறுவதுபோல அவன் ஒரு "புதிய சிருஷ்டியாவதினால் அவனுடைய வாழ்க்கையில் பழையவைகள் ஒழிந்துபோய் எல்லாம் புதிதாகின்றன" (2கொரி.5:17). அதாவது, அவன் அதுவரை காலமும் வாழ்ந்தவிதமாக வாழாமல், புதியதோர் வாழ்க்கை முறைக்குள் வருகின்றான். இதுவே ஞானஸ்நானத்திற்கு அவசியமான மனந்திரும்புத லாய் உள்ளது.[8]



ஒருவன் ஞானஸ்நானம்
பெறுவதற்கான அடிப்படைத் தகுதி
அவன் பாவத்திலிருந்து
மனந்திரும்புவதாகும்.



மனந்திரும்பி "பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும்" என்று பேதுரு கூறுவதனால் (அப்.2:38), ஞானஸ்நானத்திற்குப் பாவத்தை மன்னிக்கக்கூடிய வல்லமை இருப்பதாக நாம் கருதலாகாது. ஏனெனில், மூலமொழியில் இவ்வாக்கியம் "பாவமன்னிப்பை அடிப்படை யாகக்கொண்டு ஞானஸ்நானம் பெறுங்கள்" என்னும் அர்த்தத்திலேயே

[6] L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, p. 522.

[7] D.J.W.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 53.

[8] மனந்திரும்புதல் தேவனால் அருளப்படுவதாக அப்போஸ்தலர் 5:31, 11:18, 2தீமோத்தேயு 2:25 போன்ற வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதனால், சுயமாக மனிதரால் மனந்திரும்பமுடியாது என்பதையும் நாம் கருத்திற்கொள்ளவேண் டும் (I.H.Marshall, *Acts: Tyndale New Testament Commentary*, p. 80). உண்மை யில், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் மனிதருக்குப் பாவத்தையும், இயேசுகிறிஸ்துவின் மூலம் அருளப்படும் நீதியையும், பாவத்தின்மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் பற்றி உணர்த்துகின்றார் (யோவா.16:8-11). தேவன் இவ்வாறு பாவியான மனிதரைத் தம் பக்கமாக இழுப்பதனால் மனிதரால் மனந்திரும்பி தேவனிட மாய் வரக்கூடியதாயுள்ளது (யோவா.6:44-45,65). இதனாலேயே மனந்திரும்பு தல் தேவனருளும் வரமாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளது.[9] அதாவது, நீங்கள் பாவமன்னிப்பு பெற்றதினால் ஞானஸ்நானம் பெறுங்கள் என்றே பேதுரு அறிவுறுத்தியுள்ளார். இத்தகைய அர்த்தத்துடனேயே அப்போஸ்தலர் 22:16ல் அனனியாவின் கூற்றும் உள்ளது.[10] இவ்வசனத்தில் அனனியா, "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறியுள்ளார். எனினும், ஞானஸ்நானம் பெறுவது அல்ல, "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்வதே" பாவங்கள் கழுவப்படுவதற்காக நாம் செய்யவேண்டிய காரியமாக இருப்பதை மூலமொழியில் இவ்வசனம் அறியத்தருகின்றது. இதனால் தான், அப்போஸ்தலர் 2:21ல், "கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" என்று குறிப்பிடப் பட்டுள்ளது.[11] திருவிவிலியத்தில் அப்போஸ்தலர் 22:16 மூலமொழிக்கு ஏற்றவிதத்தில், "எழுந்து, அவரது திருப்பெயரை அறிக்கையிட்டு உமது பாவங்களிலிருந்து கழுவப்பெற்றுத் திருமுழுக்குப் பெறும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. லூக்காவின் எழுத்துகளில் (அதாவது, சுவிசேஷத்திலும் அப்போஸ்தலருடைய நடபடிகளிலும்) பாவமன்னிப்பானது ஞானஸ்நானத்துடன் அல்ல மனந்திரும்புதலுடன் தொடர்புப் படுத்தப்பட்டுள்ளதினால் (லூக்.24:47, அப்.3:20, 5:31, 8:22, 26:18, 26:20), பாவமன்னிப்பைப் பெறுவதற்காக ஞானஸ்நானம் பெறும்படி அப்போஸ்தலர் 2:37, 22:16 போன்ற வசனங்கள் கூறுவதாகக் கருதமுடியாது.[12] மேலும், அப்போஸ்தலருடைய நடபடிகளில் ஐந்து தடவைகள் இடம்பெறும் மனந்திரும்பும்படியான அறிவுறுத்தல் (2:38, 3:20, 8:22, 17:30, 26:20), தேவனருளும் பாவமன்னிப்பை எவ்வாறு பெறவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் கட்டளையாகவே உள்ளது.[13] பாவத்திலிருந்து மனந்திரும்புவதே பாவமன்னிப்பைப் பெறுவதற்கான ஆரம்பச் செயலாக இருப்பதனால், மனந்திரும்பியவன் பாவமன்னிப்பைப் பெற்றவனாகவே இருப்பான். எனவே, பாவமன்னிப்பு பெறுவதற்காக அல்ல,

---

[9] A.T.Robertson, *A Grammar of the Greek New Testament in the Light of Historical Research*, p. 592.

[10] R.N.Longenecker, *Acts: The Expositor's Bible Commentary Volume 9*, p. 526.

[11] இவ்வசனங்களில் "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்" என்னும் சொற்பிரயோகம், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதையே குறிக்கின்றது என்பதை ரோமர் 10:9-10 அறியத்தருகின்றது.

[12] J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 117.

[13] D.L.Bock, *Acts: Baker Exegetical Commentary on the New Testament*, p. 141.

மனந்திரும்பி பாவமன்னிப்பைப் பெற்றதினாலேயே கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெறுகின்றனர் என்பதே வேதாகமம் நமக்கு அறியத் தரும் சத்தியமாகும். இயேசுகிறிஸ்துவே நம்முடைய பாவங்களை மன்னிக்கிறவராக இருப்பதனால், ஞானஸ்நானம் பெறுவதற்கு நாம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி அவரிடமாய் வரவேண்டியவர்களாய் இருக்கின்றோம்.



## (2)
## இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும்

மனந்திரும்புகிறவன் பாவமன்னிப்பைப் பெறுகின்றான் என்பது உண்மை என்றாலும், அவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவனாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், மனந்திரும்புகிறவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தால் மாத்திரமே அவனால் பாவமன்னிப்பைப் பெறமுடியும். எனவே, ஞானஸ்நானம் பெறுவதற்கு, மனந்திரும்பியவன் இயேசுகிறிஸ் துவை விசுவாசிப்பவனாக இருக்கவேண்டியதும் அவசியமாயுள்ளது. மனிதருக்கு மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் இயேசுகிறிஸ்துவினா லேயே அருளப்படுவதனால் (அப்.5:31), அவரை விசுவாசியாத நிலை யில் எவராலும் பாவமன்னிப்பைப் பெறமுடியாது. உண்மையில், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக் கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவரு டைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). இதனால்தான், "மனந்திரும்புதலும் பாவமன்னிப் பும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் பிரசங்கிக்கப்பட வேண்டும்" (லூக்.24:46-47) என்றும், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்ற வன் இரட்சிக்கப்படுவான்" (மாற்.16:16) என்றும் வேதாகமம் கூறுகிறது.

மனந்திரும்பும் மனிதன் பாவமன்னிப்பைப் பெறுவதற்கு இயேசுகிறிஸ் துவை எவ்வாறு விசுவாசிக்கவேண்டும் என்பதையும் வேதாகமம் விளக்கமாக அறியத்தந்துள்ளது. நாம் இயேசுவைக் "கிறிஸ்து" என்றும், "தேவனுடைய குமாரன்" என்றும் விசுவாசிக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது (1யோவா.5:1, 5:5).[14] இதனால்தான், "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவா

சிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" என்று யோவான் குறிப்பிட்டுள்ளார் (யோவா.20:31). தற்காலத்தில் நாம் "இயேசுகிறிஸ்து" என்பதைத் தனியொரு பெயராகக் கருதினாலும், இதில் இரண்டு பெயர்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன.[15] உண்மையில், "இயேசு" என்பதே மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த தெய்வத்தின் பெயர் (மத்.1:21). "கிறிஸ்து" என்பது அவருடைய உத்தியோகப் பட்டமாகும். "கிறிஸ்டொஸ்" என்னும் கிரேக்கச் சொல்லே தமிழில் "கிறிஸ்து" என்று எழுதப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் "அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்பதாகும். எபிரேய மொழியில் "மேசியா"[16] என்று அழைக்கப்பட்ட, தேவனால் அபிஷேகம்பண்ணி அனுப்பப்படும் இரட்சகரை அக்கால யூதர்கள் எதிர்பார்த்திருந்தனர் (லூக்.2:25. 2:38, 1:54, 1:68-75, 23:51).[17] இதனால், இயேசுவே அந்த மேசியா என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக, "இயேசுவே கிறிஸ்து" என்று அப்போஸ்தலர்கள் அறிவித்தார்கள் (அப்.5:42, 17:3, 18:5, 18:28).[18] எனினும், பெரும்பாலான யூதர்கள் அரசியல் ரீதியான ஒரு

---

[14] "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" (1யோவா.5:1) என்று கூறும் வேதாகமம், "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (1யோவா.5:5) என்று கேட்கிறது.

[15] கிரேக்க உலகில் "கிறிஸ்து" என்பது மிகவும் பிரபலமான ஒரு பெயராகியதினால், இயேசு என்பதுடன் இப்பெயர் சேர்ந்துவிட்டது (G.L.Borchert, *John 1-11: The New American Commentary*, p.143). "இயேசுவே கிறிஸ்து" என்பது ஆதி சபையின் விசுவாசப்பிரமாணங்களில் ஒன்றாக இருந்தது (O.A.Piper, "1John and the Didache of the Primitive Church" p. 438.

[16] "அபிஷேகம்பண்ணப்பட்டவர்" என்னும் கிரேக்கச் சொல் எபிரேய மொழியில் "மேசியா" என்றே குறிப்பிடப்பட்டது.

[17] L.Morris, *The Lord from Heaven*, pp. 28; L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, pp. 68-72. மேசியாவை எதிர்பார்த்திருந்தவர்கள் "இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்" (லூக்.2:25) என்றும், "எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்தவர்கள்" (லூக்.2:38) என்றும், "தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவன்" (லூக்.23:58) என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, இது, "பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கம்" (லூக்.1:54, 2:68-75) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[18] D.J.Williams, *Acts: New International Biblical Commentary*, p. 113. மேசியாவைப்பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் சொல்லப்பட்டவைகள் அனைத்தும் இயேசுவின் வாழ்விலேயே நிறைவேறியுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டிய அப்போஸ்தலர்கள், இதனால், இயேசுவே பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட மேசியா (கிறிஸ்து) என்று அறிவித்தனர்.

மேசியாவை, அதாவது ரோம ராட்சியத்தின் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவிக்கும் இரட்சகரையே எதிர்பார்த்திருந்தனர் (யோவா. 6:14, அப்.1:6).[19] ஆனால், இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தபோது யூதர்களின் எதிர்பார்ப்பின்படியான ஒரு உலக ராட்சியத்தை ஸ்தாபிக்கவில்லை (யோவா.18:36).[20] அவர் மக்களைப் பாவத்திலிருந்து மீட்டு இரட்சிப்பதற்காகவே இவ்வுலகத்திற்கு வந்தார் (1தீமோ.1:15, மாற்.10:45, லூக்.19:9-10).[21] இதற்காகவே அவர் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார் (லூக்.4:17-21).[22] எனவே, இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசிக்கும்போது (1யோவா.5:1), அவரே நம்மைப் பாவத்திலிருந்து மீட்பவர் என்பதை அறிக்கையிடுபவர்களாக இருக்கின்றோம்.

இயேசுகிறிஸ்துவை சாதாரணமான ஒரு கிறிஸ்துவாக அல்ல, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக விசுவாசிக்கவேண்டும் என்றும்

---

[19] L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, pp. 77-79. இதனால்தான் இயேசுகிறிஸ்து அற்புதங்களைச் செய்தபோது, "மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி" (யோவா.6:14) என்று மக்கள் கூறினார்கள். இதேபோல, பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை எருசலேமில் இருக்கும்படி இயேசுகிறிஸ்து கூறியபோது, "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று சீஷர்கள் கேட்டார்கள் (அப்.1:5-6).

[20] இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும்போது, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவா.18:36) என்று அறிவித்தார்.

[21] "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது" (1தீமோ. 1:15) என்று வேதாகமம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும்போது, தாம் "அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார்" (மாற்.10:45) என்றும், "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" (லூக்.19:10) என்றும் தெரிவித்துள்ளார்.

[22] இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்" என்னும் பகுதியை வாசித்து, "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" என்பதைச் சுட்டிக்காட்டினார் (லூக்.4:17-21).

வேதாகமம் கூறுகிறது (யோவா.20:31, 1யோவா.5:5). வேதாகமத்தில் "தேவனுடைய குமாரன்" என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்து "தேவனுக்குப் பிறந்தவர்" அல்லது "தேவனுடைய பிள்ளை" என்னும் அர்த்தத்தில் உபயோகிக்கப்படவில்லை.[23] யூதர்களுடைய மொழிவழக்கில் ஒருவருக்குப் பிறக்காதவர்களையும் பிள்ளைகளாகக் குறிப்பிடும் முறை இருந்தது (1சாமு.3:16, 26:17, 1ராஜா.20:35, 2ராஜா.16:7).[24] மேலும், ஒன்றின் தன்மையை அல்லது குணாதிசயத்தைக் குறிப்பிடுவதற்கும் "குமாரன்" என்னும் சொல் அக்காலத்தில் உபயோகிக்கப்பட்டது. இதனால்தான், தீமையான மனிதன் "நியாயக்கேட்டின் மகன்" என்றும் (சங்.89:22), மற்றவர்களுக்கு ஆறுதலாயிருந்தவன் "ஆறுதலின் மகன்" என்றும் (அப்.4:36) அழைக்கப்பட்டுள்ளனர். இவ்விதமாகவே இயேசுகிறிஸ்து "தேவனுடைய குமாரன்" என்பது, அவர் தேவத் தன்மையுடையவர் என்னும் அர்த்தமுடைய பெயராக உள்ளது.[25] தேவனே இயேசு என்னும் பெயரில் மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்ததாக வேதாகமம் கூறுகிறது (1தீமோ.3:16, யோவா.1:1,14).[26] அவர் தேவன் என்பதைத் தீத்து 2:13, ரோமர்.9:5, 1கொரிந்தியர் 2:8, 1யோவான் 5:20, அப்போஸ்தலர் 20:28, கொலோசெயர் 2:9, பிலிப்பியர் 2:6 என்னும் வசனங்கள் நேரடியாகவே குறிப்பிட்டுள்ளன.[27] உண்மை

---

[23] இதைப்போலவே, இயேசுகிறிஸ்து "தாவீதின் குமாரன்" என்று வேதாகமம் கூறுவதனால் (மத்.1:1), அவர் தாவீதுக்குப் பிறந்தவர் என்று நம்மால் கூறமுடியாது. இயேசுகிறிஸ்து தாவீதின் வம்சத்தில் வந்தவர் என்பதை அறியத்தருவதற்காகவே அவர் தாவீதின் குமாரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். அக்காலத்தில் இயேசுவை அரசியல்ரீதியான மேசியாவாகக் கருதியவர்கள் அவரைத் தாவீதின் குமாரன் என்றே அழைத்தனர் (L.Morris, *New Testament Theology*, p. 126; G.Dalman, *The Words of Jesus*, pp. 319-324).

[24] இதனால்தான் ஆசாரியனாகிய ஏலி சாமுவேலை "என் மகனே" என்றும் (1சாமு.3:16), இஸ்ரவேலின் அரசன் சவுல் தாவீதை "என் குமாரனாகிய தாவீதே" என்றும் (1சாமு.26:17) அழைத்தனர். யூதாவின் அரசன் ஆகாஸ் அசீரிய ராஜாவிடம் தான் அவனுடைய குமாரனாய் இருப்பதாகவும் (2ராஜா. 16:7) குறிப்பிட்டுள்ளான். மேலும், தீர்க்கதரிசியின் சீஷர்கள் "தீர்க்கதரிசியின் புத்திரர்" (1ராஜா.20:35) என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

[25] J.McDowell & B.Larson, *Jesus: A Biblical Defence of His Deity*, p. 75.

[26] 1தீமோத்தேயு 3:16 "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்று கூறுகிறது. யோவான் 1:1ல் குறிப்பிடப்பட்டிருக்கும் தேவனாயிருக்கும் வார்த்தையே அவ்வதிகாரத்தின் 14ம் வசனத்தின்படி மாம்சமாகி மனிதர்கள் மத்தியில் வாசம் பண்ணியுள்ளார்.

[27] தீத்து 2:13ல் இயேசுகிறிஸ்து "மகாதேவன்" என்றும், ரோமர் 9:5ல், "என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்"

யில், "தேவனுடைய குமாரன் என்னும் பெயர் இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தையே அறியத்தருகின்றது."[28]



**இயேசுகிறிஸ்து "தேவனுடைய குமாரன்" என்பது, அவர் தேவத் தன்மையுடையவர் என்னும் அர்த்தமுடைய பெயராக உள்ளது.**



ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் அவரே உண்மையான தேவன் என்பதையும், பாவிகளாகிய நம்மை மீட்டு இரட்சிப்பதற்காகவே அவர் மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதையும் அறிந்திருக்கவேண்டும். பாவிகளை இரட்சிப்பதற்காக

---

என்றும், 1கொரிந்தியர் 2:8ல் "மகிமையின் கர்த்தர்" என்றும், 1யோவான் 5:20ல் "மெய்யான தேவன்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலுவையில் இரத்தம் சிந்தியவர் தேவன் என்பதை அப்போஸ்தலர் 20:28 அறியத்தருகிறது. "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாய் இருந்ததை" கொலோசெயர் 2:9 சுட்டிக்காட்டுகிறது. பிலிப்பியர் 2:6 "இயேசுகிறிஸ்து தேவனுடைய ரூபமாயிருந்தார்" என்று கூறுகிறது. இவ்வசனத்தில் "ரூபம்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், மாற்றமடையாத உட்புறத்தன்மையைக் குறிக்கின்றது. எனவே, இயேசுகிறிஸ்து தேவத் தன்மையுடையவராய் இருந்தார் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும்.

[28] L.Morris, *Jesus is the Christ: Studies in the Theology of John*, pp. 89-106; C.Vaughan, *1,2,3 John: Bible Study Commentary*, p. 118; இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரனாகவும், தேவனைத் தம்முடைய பிதாவாகவும் குறிப்பிட்டபோது, தேவனும் இயேசுகிறிஸ்துவும் தகப்பன் மகன் உறவு முறையில் இருப்பவர்கள் என்று அவர் கூறுவதாக யூதர்கள் கருதவில்லை. அவர் தம்மைத் தேவன் என்று கூறுகிறார் என்றே அவர்கள் விளங்கிக் கொண்டனர். இதனால்தான், இயேசுகிறிஸ்து தாம் தேவனுடைய குமாரன் என்று கூறியபோது, "நீ மனுஷனாயிருக்க, உன்னைத் தேவன் என்று சொல்லி இவ்விதமாகத் தேவதூஷணம் சொல்லுகிறபடியினால், உன்மேல் கல்லெறிகிறோம்" என்று யூதர்கள் அவர்மீது குற்றஞ் சாட்டினார்கள். உண்மையில், இயேசுகிறிஸ்து நேரடியாக நான் தேவன் என்று கூறவில்லை. தேவனுடைய குமாரனாகவே அவர் தம்மை அறிமுகப்படுத்தியிருந்தார். இதனால்தான் அவர், "நான் என்னைத் தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே, தேவதூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?" என்று கேட்டார் (யோவா.10:33-36). இயேசுகிறிஸ்து தம்மைத் தேவனுடைய குமாரன் என்று கூறியது, யூதர்களுக்குத் தேவதூஷணமாகவே இருந்தது. ஏனெனில், இயேசுகிறிஸ்து இதன் மூலம் தாம் தேவன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மனிதனாக வந்த தெய்வமான இயேசுகிறிஸ்து, உலக மனிதர் அனைவரினதும் பாவங்களை நீக்குவதற்காகத் தம்மையே சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தார். இதனால்தான், "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1யோவா.2:2) என்று வேதாகமம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தபோது உலக மனிதர் அனைவரினதும் பாவங்களைத் தம்மீது சுமந்து தீர்த்தார் (யோவா. 1:29).[29] "பாவத்தைச் சுமந்து தீர்த்தல்" என்னும் சொற்பிரயோகம் வேதாகமத்தில் "பாவத்தை நீக்குதல்" என்னும் அர்த்தமுடையது.[30] இதனால்தான், ஆங்கில வேதாகமத்தில் இச்சொல் பாவத்தை "எடுத்துச் செல்லுதல்" (takes away) என்றும், புதிய தமிழ் மொழிபெயர்ப்பில் "பாவத்தைப் போக்குதல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உண்மையில், "இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் மானிட பாவத்தைப் போக்கும் பலியாயுள்ளது."[31] ஏனெனில், இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போது, மனிதரின் பாவங்களைத் தம்மீது சுமந்தவராக மரித்தார் (எபி.9:28, 1பேது.2:24, கலா.3:13, 2கொரி.5:21).[32] இதனால், இயேசுகிறிஸ்து மரிக்கும்போது மனிதருடைய பாவங்கள் அவர்களிலிருந்து எடுக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவின்மீது சுமத்தப்பட்டன. அவர் தம்முடைய மரணத்தினாலே மானிட பாவத்தை நீக்கியுள்ளார் (எபி. 9:26).[33] எனவே, இயேசுகிறிஸ்துவிடமாய் மனந்திரும்பி வருபவன், தன்னுடைய பாவங்களையும் இயேசுகிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்று விசுவாசிக்கும்போது, அவனுடைய பாவம் அவனிலிருந்து நீக்கப்பட்டு அவன் சுத்திகரிக்கப்படுகின்றான் (1யோவா.1:7,

---

[29] யோவான் இயேசுகிறிஸ்துவைக் கண்டபோது "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவா.1:29) என்றான்.

[30] R.C.H.Lenski, *The Interpretation of St. John's Gospel*, p. 127.

[31] G.M.Burge, *John: The NIV Application Commentary*, p. 74.

[32] இயேசுகிறிஸ்து "அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டார்" என்று எபிரேயர் 9:28லும், "அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" என்று 1பேதுரு 2:24லும், "பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்று 1கொரிந்தியர் 5:21லும், "கிறிஸ்து நமக்காகச் சாபமாகினார்" என்று கலாத்தியர் 3:13லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[33] "அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக் காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்" (எபி.9:26)

வெளி.1:6).[34] இவ்வாறு இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மூலம் பாவங்கள் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டவனே ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியானவனாய் இருக்கின்றான்.



## (3) இயேசுகிறிஸ்துவின் சீஷனாக வேண்டும்

ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவன் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவே தன்னுடைய பாவத்தைப் போக்கும் பலியாக மரிப்பதற்காக மனிதனாக இவ்வுலகத்திற்கு வந்த தெய்வம் என்பதை விசுவாசித்து அவரிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதோடு, அவன் இயேசுகிறிஸ்துவின் சீஷனாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், ஞானஸ்நானத்தைப் பற்றிய கட்டளையில், "சகல ஜாதிகளையும் சீஷராக்கி" அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியுள்ளார் (மத்.28:19). இயேசுகிறிஸ்துவும் மக்களைச் "சீஷராக்கிய பின்பே" அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளதினால் (யோவா.4:1), தம்முடைய மாதிரியைப் பின்பற்றி மக்களைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கும்படி அவர் கட்டளையிட்டுள்ளார் (மத்.28:19). ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் சீஷர்களுக்கானது என்பதைப் புதிய ஏற்பாடு தெளிவாகக் காண்பிக்கின்றது. உண்மையில், இயேசுகிறிஸ்துவின் சீஷனாகுவதன் ஒரு அம்சமாகவே ஞானஸ்நானம் உள்ளது. இதனால், இயேசுகிறிஸ்துவின் சீஷராகியவர்களே ஞானஸ்நானம் பெற்றுள்ளதை அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் அறியத் தருகின்றது.

புதிய ஏற்பாட்டின் சுவிசேஷப் புத்தகங்களில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் சீஷர்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர் (லூக்.10:1, 10:17, யோவா.6:61, 6:66). ஏனெனில், சீஷன் என்பதற்கு மூலமொழி

[34] "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது" என்பதை 1யோவான் 1:7 அறியத்தருகின்றது. இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அவருடைய சிலுவைப் பலியையே குறிக்கின்றது (C.G.Kruse, *The Letters of John: The Pillars New Testament Commentary*, p. 64). இயேசுகிறிஸ்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவியுள்ளதாக வெளிப்படுத்தல் 1:6 கூறுகிறது.

யில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் "பின்பற்றுபவன்" என்னும் அர்த்தமுடையது.[35] அக்காலத்தில், "இராணுவத் தலைவனைப் பின்தொடர்ந்து செல்லும் வீரர்களும், எஜமானுடைய கட்டளைகளுக் குக் கீழ்ப்படிந்து செயற்படும் அடிமைகளும், குருவினுடைய போதனை யை அல்லது அறிவுரையைப் பின்பற்றுபவர்களும் சீஷன் என்னும் சொல்லினாலேயே அழைக்கப்பட்டனர்."[36] இதனால், இயேசுகிறிஸ்து வின் போதனைகளைக் கேட்டு அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்ப டிந்து அவரைப் பின்பற்றிச் சென்ற அனைவரும் சீஷர்கள் என்றே சுவிசேஷப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். உண்மையில், "கிறிஸ்தவன்" என்னும் சொல் உருவாகும் வரை, இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் அனைவரும் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டனர். "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" என்பதை அப்போஸ்தலர் 11:26 அறியத்தரு கின்றது.[37] அதுவரை காலமும் கிறிஸ்தவர்கள் அனைவரும் சீஷர்கள் என்றே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர் (அப்.6:1, 9:25, 9:38, 13:52, 14:20, 18:27, 19:30, 20:7). எனவே, சீஷராகி ஞானஸ்நானம்

---

[35] இயேசுகிறிஸ்துவுக்குப் பல சீஷர்கள் இருந்ததினால், அவர் இவர்களில் பன்னிருவரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார் (லூக்.6:13). கிறிஸ்தவ உலகில் இவர்களே இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாக அறியப்பட்டுள்ளபோதிலும், இவர்கள் மாத்திரமல்ல, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் அனைவருமே புதிய ஏற்பாட்டில் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர்.

[36] W.Barclay, *New Testament Words*, pp. 41-42.

[37] இவர்கள் எப்பொழுதும் கிறிஸ்துவைப்பற்றியே பேசிக்கொண்டிருந்ததினால், மற்றவர்கள் இவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்தனர் (F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p. 228). புதிய ஏற்பாட்டில் இதைத்தவிர இன்னும் இரண்டு இடங்களில் மட்டுமே கிறிஸ்த வர்கள் என்னும் பெயர் உள்ளது (அப்.26:28, 1பேது.4:16). மேலும், இம்மூன்று இடங்களிலும், கிறிஸ்தவரல்லாதவர்களினாலேயே இப்பெயர் உபயோகிக்கப் பட்டுள்ளது. இதிலிருந்து, ஆரம்பத்தில் இப்பெயர் கிறிஸ்தவர்களினால் உபயோகிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது (J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 273). யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ், மற்றும் ரோம ஆசிரியர்கள் ப்லினி, டசிட்டஸ், லூசியன் என்போரின் நூல்களில் கிறிஸ்தவர்கள் என்னும் சொல் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன (F. Josephus, *Antiquities of the Jews*, 18.64; Tacitus, *Annals*, 15.44; Pliny, *Epistles*, 10.96-97; Lucian, *Alexander*, 25.38). கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, 2ம் நூற்றாண்டில் அந்தியோகியாவின் பிஷப்பாகப் பணியாற்றிய இக்னேஷியஸ் என்பவருடைய நூல்களிலேயே கிறிஸ்தவர்கள் என்னும் சொல் அதிகமாக இடம்பெற்றுள்ளது.

பெறுதல் என்பது, கிறிஸ்தவனாகி ஞானஸ்நானம் பெறுவதாகவே உள்ளது. ஒருவன் கிறிஸ்தவனாகுவதற்கு அவன் இயேசுகிறிஸ்து வைத் தனிப்பட்ட ரீதியாக அறிந்திருக்க வேண்டும். இதற்கு அவன் இயேசுகிறிஸ்துவே உண்மையான தேவன் என்பதையும், பாவியாகிய தன்னை மீட்பதற்காகவே அவர் இவ்வுலகத்திற்கு வந்தார் என்பதையும், அவருடைய சிலுவைப்பலி தன்னுடைய பாவங்களை நீக்கித் தன்னைச் சுத்திகரித்துள்ளது என்பதையும் அறிந்திருப்பது மாத்திரமல்ல, அவரை விசுவாசிப்பதன் மூலம் கிறிஸ்தவனாகியிருக்க வேண்டும். வேதாகம காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கிறிஸ்தவராகிய வர்கள் மாத்திரமே ஞானஸ்நானம் பெற்றனர். இதனால் தற்காலத்திலும் பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவராகுபவர்கள் மாத்திரமே ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியானவர்களாக உள்ளனர். இப்படிப்பட்டவர்களுக்கு ஞானஸ் நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியுள்ளார் (மத். 28:19-20).



பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவராகுபவர்களே ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியானவர்கள்.



இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கிறிஸ்தவராகுபவர்களே ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்பதனால், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அர்த்தமற்ற ஒரு செயலாகவே உள்ளது. ஏனெனில், குழந்தைகளினால் தங்கள் பாவங் களிலிருந்து மனந்திரும்பவோ, இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கவோ முடியாது. அப்படியிருந்தும், தற்காலத்தில் சில சபைகள் குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவருகின்றன. வேதாகமத்தில் குறிப் பிடப்படாத இப்பழக்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவ சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் வேதாகமத்தில் இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாததினால், பல சபைகள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதில்லை. இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கொண் டுவரப்பட்ட சிறு பிள்ளைகளை ஆசீர்வதித்தாரே தவிர, அவர் அவர்க

ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை (மாற்.10:13-16).[38] உண்மை யில், இயேசுகிறிஸ்து மக்களை சீஷராக்கிய பின்பே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (யோவா.4:1). இதனால், இவ்விதமா கவே நாமும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று அவர் கட் டளையிட்டுள்ளார் (மத்.28:19). எனவே, தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவைத் தங்களுடைய பாவம்போக்கும் பலியாகவும், தங்களைப் பாவத்தின் தண்டனையிலிருந்து மீட்கும் இரட்சகராகவும் தங்களுடைய வாழ்வின் தெய்வமாகவும் ஏற்றுக் கொண்டு, அவருடைய சீஷர்களாயிருப்பவர்களே ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாய் இருக்கின்றனர். இத்தகைய தகுதி இல்லாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இதனால்தான், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட் டுள்ள ஞானஸ்நான சம்பவங்கள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசித்தவர்களுக்கே அக்காலத்தில் ஞானஸ் நானம் கொடுக்கப்பட்டுள்ளதை அறியத்தருகின்றன. அதேபோல, ஞானஸ்நானத்தைப் பற்றிய புதிய ஏற்பாட்டு வசனங்கள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின்மீதான விசுவாசத்துடனேயே தொடர்புபடுத்தப்பட் டுள்ளன. இதனால் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசிக் கமுடியாத நிலையில் உள்ள குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அர்த்தமற்ற ஒரு செயலாகவே உள்ளது. (குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆறாம் அத்தியாயத்தைப் பார்க்கவும்).



[38] மாற்கு 10:13-16ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "அப்பொழுது, சிறு பிள்ளைகளை அவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடை யது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்ப தில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்."

## ஒரு சம்பவத்தில் ஒரு சத்தியம்

பாக்கிஸ்தான் நாட்டுக்கு மிஷனரியாகச் சென்ற ஒருவர் அந்நாட்டு மனிதன் ஒருவனைத் தன்னுடைய வீட்டில் சமையற்காரனாக வைத்திருந்தார். அவர் அவனை வேலைக்கு அமர்த்தும்போது, "நீ வெள்ளிக்கிழமைகளில் இறைச்சி சமைக்கக்கூடாது, தேவையென்றால் மீன் சமைக்கலாம்" என்று அறிவுறுத்தியிருந்தார்.

அன்றாடம் இறைச்சி சாப்பிட்டுப் பழகியிருந்த சமையற்காரன் வெள்ளிக்கிழமைகளில் சாப்பிடுவதற்கு மிகவும் சிரமப்பட்டான். இதனால், ஒரு வெள்ளிக்கிழமை, மிஷனரியினுடைய கட்டளையையும் மீறி இறைச்சி சமைக்கத் தொடங்கினான். இறைச்சிக் கறியின் மணம் மிஷனரியின் அறை வரை சென்றதனால், அவர் கோபத்துடன் அவனிடம், "இன்றைக்கு வெள்ளிக்கிழமை என்பது உனக்குத் தெரியாதா? என் கட்டளையை மீறி ஏன் இறைச்சி சமைக்கிறாய்?" என்று கேட்டார்.

சமையற்காரனோ மிகவும் நிதானமாக, "நான் மீன் தான் சமைக்கிறேன்" என்றான். ஆனால், மிஷனரியோ, மீன் கறிக்கும் இறைச்சிக் கறிக்கும் எனக்கு வித்தியாசம் தெரியாது என்று நினைக்கிறாயா? நீ இறைச்சி தான் சமைக்கிறாய்" என்றார். ஆனால் சமையற்காரனோ, தான் மீன் சமைப்பதாகவே மறுபடியும் கூறினான். இதனால் இருவருக்கும் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

கடைசியில் பெறுமையிழந்த மிஷனரி, நீ எப்படி மீன் சமைக்கிறாய்?" என்று கேட்டார். சமையற்காரனோ மிகவும் நிதானமாக, "சில நாட்களுக்கு முன்பு நீங்கள் ஒரு மனிதனை அழைத்துக் கொண்டு வந்து, அவனைத் தண்ணீரில் அமிழ்த்தி, நீ இனிமேல் அப்துல்லா இல்லை, இன்றிலிருந்து நீ தாவீது" என்று சொன்னீர்கள். இதைப் போலவே நானும், இறைச்சியைத் தண்ணீரில் அமிழ்த்தி, நீ இனிமேல் இறைச்சி அல்ல, மீன் என்று சொல்லி மீன் கறி சமைக்கிறேன்" என்றான்.

நம்முடைய ஞானஸ்நானம் இத்தகைய ஒரு முழுக்காகவா இருக்கின்றது. மனமாற்றம் இல்லாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித பயனும் இல்லை. பெயர் மாற்றம் அல்ல, மனமாற்றமே ஞானஸ்நானத்திற்கு அவசியமாயுள்ளது.



## மூன்றாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

தற்காலத்தில் வித்தியாசமான முறைகளில் ஞானஸ்நானம் கொடுக்கப்படுகின்றபோதிலும், வேதாகமமோ, நாம் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றே கூறுகிறது. வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள ஞானஸ்நான சம்பவங்களில் மனிதர்கள் தண்ணீரில் மூழ்கியே ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். மேலும், நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும் வேதாகமம் கூறுவதோடு, ஞானஸ்நானமானது, இயேசுகிறிஸ்து நம்முடைய வாழ்வில் ஏற்படுத்திய மாற்றத்தை வெளிப்படையாகக் காண்பிக்கும் அடையாளமாக இருப்பதனால், அம்மாற்றம் வெளிப்படையாகத் தெரியும் விதத்தில் வாழ்வதற்கு நம்மை அர்ப்பணிக்கவேண்டும் என்றும் கூறுகிறது.

## மூன்றாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்தின் அணுகுமுறை

## நாம் எப்படி ஞானஸ்நானம் பெறவேண்டும்?

கிறிஸ்தவ மார்க்கத்தில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானது என்பதைப் பொதுவாகக் கிறிஸ்தவர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும், நாம் எப்படி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பது அதிக சர்ச்சைக்குரிய விஷயமாகவே உள்ளது. தற்காலத்தில், தண்ணீரைத் தெளித்து, தண்ணீரை ஊற்றி, தண்ணீரைப் பூசி, அல்லது தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கும் வித்தியாசமான முறைகள் கிறிஸ்தவர்கள் மத்தியில் உள்ளன. மேலும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுப்பவர்களும், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பவர்களும் நம் மத்தியில் உள்ளனர். அதேசமயம், ஞானஸ்நானத்தை ஒரு சாதாரண சடங்காசாரமாக மாத்திரம் கருதுபவர்களும் நம் மத்

தியில் இருக்கின்றனர். இதனால், நாம் எப்படி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை சரியானவிதத்தில் அறிந்திருக்கவேண்டியது அவசியமாயுள்ளது.



## (1)
## தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும்

நாம் எப்படி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதற்கு வேதாகமம் தரும் பதில், தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதாகும். ஏனெனில், ஞானஸ்நானத்தைப்பற்றிய வேதாகமச் சம்பவங்கள் அனைத்தும், அக்காலத்தில் மனிதர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதாகவே உள்ளன. சுவிசேஷப் புத்தகங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானச் சம்பவத்தில் அவர் "ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறியதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது (மத்.3:16, மாற்.1:10). ஆனால் மூலமொழியில் இவ்வாக்கியம், அவர் "தண்ணீரிலிருந்து மேலே வந்தார்" என்றே உள்ளது. இதனால், புதிய தமிழ் மொழிபெயர்ப்புகளில் இவ்வாக்கியம் "தண்ணீரைவிட்டு வெளியேறினார்"[2] என்றும், "நீரிலிருந்து மேலெழுந்து வந்தார்"[3] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமங்களிலும் இவ்வாக்கியம் இத்தகைய அர்த்தத்திலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[4] எனவே, "இயேசுகிறிஸ்து தண்ணீரிலிருந்து மேலே வந்ததினால் அவர் தண்ணீரில் மூழ்கியே ஞானஸ்நானம் பெற்றுள்ளார்"[5] என்பது தெளிவாகின்றது. மேலும், யோவான் ஸ்நானகன் யோர்தான் நதியில் தண்ணீர் அதிகமாக இருந்த இடத்தில் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததும் (யோவா.3:23) அவர் மக்களைத் தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுத்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில்,

---

[2] திருவிவிலியம், இலகு தமிழ் மொழிபெயர்ப்பு, ராஜரீகம் மொழிபெயர்ப்பு என்பவற்றில் இவ்வாறு உள்ளது.

[3] பரிசுத்த பைபிளின் மொழிபெயர்ப்பு.

[4] ஆங்கில வேதாகமத்தின் NIV மொழிபெயர்ப்பில் he went up out of the water என்றும், NKJVல் came up immediately from the water என்றும், NASBல் went up immediately from the water என்றும், NRSVல் he came up from the water, என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[5] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism,* p. 34.

“ஒருவர்மீது தண்ணீரைத் தெளித்து அல்லது ஊற்றி ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அதிக தண்ணீருள்ள இடத்தைத் தெரிவுசெய்யவேண்டி யதில்லை.”[6] சரியான விதத்தில் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு யோவானுக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்பட்டுள்ளது.[7] எனவே, யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தண்ணீரில் மூழ்கியே ஞானஸ்நானம் பெற்றுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. மேலும், அண்மைக் காலங்களில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பழைய எருசலேம் நகரத்தில் கண்டுபிடித்துள்ள நூற்றுக்கணக்கான ஆழமான சடங்காசாரக் குளங்கள், அக்காலத்தில் மக்களுக்கு முழுக்கு ஞானஸ் நானமே கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரமாயுள்ளன.[8]



**ஞானஸ்நானத்தைப்பற்றிய வேதாகமச் சம்பவங்கள் அனைத்தும் மனிதர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதாகவே உள்ளன**



அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அக்காலத்தில் ஞானஸ்நானம் எவ் வாறு கொடுக்கப்பட்டது என்பதை மக்கள் நன்கு அறிந்திருந்ததினால், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவர்களுக்கு எவ்வாறு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்பதுபற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் விபரமாக எதுவும் எழுதப்படவில்லை. ஆனால், 8ம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள எத்தியோப்பிய மந்திரியின் ஞானஸ் நானம், அவன் தண்ணீரில் மூழ்கியே ஞானஸ்நானம் பெற்றுள்ளான் என்பதை அறியத்தருகின்றது. இதனால்தான் பிலிப்புவுடன் இரதத்தில் சென்று கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரி, மூழ்கி ஞானஸ்நானம் பெறக்கூடிய அளவுக்குத் தண்ணீருள்ள இடத்தைக் கண்டபோதே

[6] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 60.
[7] M.Anderson, *See Here is Water: A Case for Believer's Baptism*, p. 34.
[8] D.Bridge & D.Phypers, *The Water that Divides: Two Views of Babtism Explored*, p. 20. விபரங்களுக்கு *Biblical Archaeology Review* சஞ்சிகையின் ஜனவரி–பெப்ரவரி 1987, மே–ஜுன் 1992 மார்ச்–ஏப்ரல் இதழ்களைப் பார்க்கவும்.

“இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன?” என்று கேட்டான் (அப்.8:36). தண்ணீரைத் தெளித்து அல்லது ஊற்றி ஞானஸ்நானம் பெறுவதே எத்தியோப்பிய மந்திரியின் எண்ணமாயிருந்திருந்தால் அவன் தண்ணீர் உள்ள இடம் வரும்வரை காத்திருந்திருக்க மாட்டான். அவன் மந்திரி என்பதனால், வனாந்திரத்தில் பிரயாணம் செய்த அவனுடைய இரதத்தில் போதியளவு குடிநீர் இருந்திருக்கும். அத்தண்ணீரை உபயோகித்து தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி அவன் பிலிப்புவிடம் கேட்டிருப்பான்.[9] எத்தியோப்பிய மந்திரி அதிக தண்ணீருள்ள இடத்தில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதினாலேயே, அவனும் அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பிலிப்புவும் “தண்ணீரில் இறங்கினார்கள்” என்றும், பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த பின் அவர்கள் இருவரும் “தண்ணீரிலிருந்து கரையேறியதாகவும்” அப்போஸ்தலர் 8:38-39ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[10] மத்தேயு 3:16ஐப்போலவே இங்கும் “தண்ணீரிலிருந்து கரையேறுதல்” என்னும் வாக்கியம் மூலமொழியில் “தண்ணீரிலிருந்து வெளியே வந்தார்கள்” என்றே உள்ளது. புதிய தமிழ் மொழிபெயர்ப்புகளில் இவ்வாக்கியம், “நீரிலிருந்து வெளிவந்தார்கள்”[11] என்றும், “தண்ணீரிலிருந்து வெளியேறினார்கள்”[12] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில், “எத்தியோப்பிய மந்திரி தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுள்ளதையே இவ்வாக்கியம் அறியத்தருகின்றது.”[13] ஞானஸ்நானம் பெறுவதற்கு மந்திரி தண்ணீருக்குள் சென்றானே தவிர, அவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காகத் தண்ணீர் அவனிடம் கொண்டுவரப்

[9] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 60; D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 310.

[10] பிலிப்புவும் மந்திரியும் பிரயாணம் செய்த வனாந்திரத்தில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய அளவுக்குத் தண்ணீர் இருந்திருக்காது என்றும், இதனால் முழுக்கு ஞானஸ்நானம் மாத்திரமே வேதம் போதிக்கும் ஞானஸ்நானம் என்று கூறமுடியாது என்றும் சிலர் கருதுகின்றனர் (R.C.Sproul, *Truth We Cofess: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 119). ஆனால், “தண்ணீரில் இறங்கினார்கள்” “தண்ணீரிலிருந்து கரையேறினார்கள்” என்னும் சொற்பிரயோகங்கள், மந்திரிக்கு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளதையே சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் கூறுவதுபோல “அங்கு கொஞ்சம் தண்ணீர்” இருந்தது என்று அப்போஸ்தலர் 8:36-39ல் குறிப்பிடப்படவில்லை.

[11] பரிசுத்த பைபிளின் மொழிபெயர்ப்பு

[12] திருவிவிலியத்தின் மொழிபெயர்ப்பு

[13] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 61.

படவில்லை.[14] உண்மையில், "தண்ணீரில் இறங்குதல்" "தண்ணீரிலிருந்து வெளியேறுதல்" என்னும் சொற்பிரயோகங்கள் முழுக்கு ஞானஸ்நானத்தின் செயல்முறையைக் குறிப்பிடுவதற்கே ஆதிசபையினரால் உபயோகிக்கப்பட்டன.[15] அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் ஏனைய ஞானஸ்நானங்கள் எவ்வாறு கொடுக்கப்பட்டன என்பது பற்றி விளக்கமாக எழுதப்படாவிட்டாலும், "ஞானஸ்நானத்திற்காகத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. தண்ணீருள்ள இடத்திற்கே மனிதர் ஞானஸ்நானம் பெறுவதற்காகச் சென்றுள்ளனர்."[16] இதிலிருந்து, தண்ணீரில் முழுக்கியே அக்காலத்தில் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளது தெளிவாகின்றது.



கிரேக்கமொழியின் வரலாற்றில் ஞானஸ்நானம் என்னும் சொல்லுக்குத் "தண்ணீரில் மூழ்குதல்" என்னும் அர்த்தமே எப்பொழுதும் இருந்துள்ளது



வேதாகம காலத்தில் மக்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதினாலேயே ஞானஸ்நானம் என்பதற்கு மூலமொழியில் "பெப்டிஸ்சோ" (*baptizo*) என்னும் கிரேக்கச் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் இச்சொல் கிறிஸ்தவ மார்க்கத்தின் சிறப்பான ஒரு வார்த்தையாக உள்ளபோதிலும், கிரேக்கர்கள் மத்தியில் இன்று வரை மக்களுடைய அன்றாட வாழ்வில் உபயோகிக்கப்படும் ஒரு சொல்லாகவே உள்ளது. திண்மப்பொருள் திரவத்தினுள் வைக்கப்படுவதைக் குறிப்பிடுவதற்குக் கிரேக்கர்களினால் உபயோகிக்கப்படும் இச்சொலின் அர்த்தம், "தண்ணீருக்குள் மூழ்குதல்" என்பதாகும்.[17] இச்சொல் சாதாரண மொழிவழக்கில் மனிதர்கள் தண்ணீருக்குள் மூழ்குவதையும், கடலில் கப்பல் அமிழ்ந்து போவதையும், சாயத்திரவத்

[14] M.Anderson, *See Here is Water: A Case for Believer's Baptism*, p. 34.

[15] H.F.Stander & J.B.Louw, *Baptism in the Early Church*, p. 37.

[16] T.R.Schreiner & S.D.Wright,ed., *Believer's Baptism*, p. 61.

[17] இக்கிரேக்கச் சொல்லிலிருந்தே "பெப்டிஸம்" (baptism) என்னும் ஆங்கில சொல் உருவாகியுள்ளது.

தினுள் துணிகளைத் தோய்த்து எடுப்பதையும் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படுகின்றது.[18] கிரேக்கமொழியின் வரலாற்றில் இச்சொல்லுக்குத் "தண்ணீரில் மூழ்குதல்" என்னும் அர்த்தமே எப்பொழுதும் இருந்துள்ளது.[19] வேதாகமத்தில் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடும்போது இச்சொல் "முழுமையாகத் தண்ணீரில் நனைத்தல்" அல்லது "முழுமையாகத் திரவத்தினால் மூடுதல்" என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[20] எனவே, "தண்ணீரில் அமிழ்த்துதல்" அல்லது "தண்ணீரில் முழுக்குதல்" என்பதே ஞானஸ்நானம் என்னும் சொல்லின் அர்த்தமாயுள்ளது.[21] வேதாகமம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட காலத்தில் கிறிஸ்தவ சபைகளில் குழந்தைகளுக்கு தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கப்படும் முறையே இருந்ததினால், "பெப்டிஸ்சோ"

---

[18] G.Kittel & G.Friedrich, ed., *Theological Dictionary of the NT Volume 1*, p. 520.

[19] A.Carson, *Baptism in its Modes and Subjects*, p. 19.

[20] *Strong's Exhaustive Concordance of the Bible: Compact Edition*, p. 18. Baker, 1997. தண்ணீரைத் தெளித்து அல்லது பூசி ஞானஸ்நானம் கொடுப்பவர்கள், ஞானஸ்நானம் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல் எப்பொழுதும் தண்ணீரில் முழுக்குதல் என்னும் அர்த்தத்துடன் வேதாகமத்தில் உபயோகிக்கப்படவில்லை என்று கூறுவது வழக்கம். இதற்கு ஆதாரமாக மாற்கு 10:38-39, லூக்கா 12:50, மத்தேயு 3:11, லூக்கா 3:16 போன்ற வசனங்களை இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (D.F.Wright,ed., *Baptism: Three Views*, p. 61). இவ்வசனங்களில் "பெப்டிஸ்சோ" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ளது உண்மை என்றாலும், இச்சொல் சொல்லர்த்தமாக அல்ல உருவகமாகவே உபயோகிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மாற்கு 10:38-39லும் லூக்கா 12:50லும் இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தையே ஸ்நானம் என்று குறிப்பிட்டுள்ளார். மத்தேயு 3:11லும் லூக்கா 3:16லும் ஆக்கினைத் தீர்ப்பையே அக்கினியினால் பெறும் ஞானஸ்நானமாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஞானஸ்நானம் என்னும் சொல் உருவகமாக உபயோகிக்கப்பட்டுள்ள வசனங்களை ஆதாரமாகக் கொண்டு, இச்சொல்லின் அர்த்தத்தை வரையறை செய்வது தவறாகும். சொல்லர்த்தமாக இச்சொல் உபயோகிக்கப்படும்போது "தண்ணீரில் முழுக்குதல்" என்னும் அர்த்தம் மாத்திரமே உள்ளது. வேதாகமத்தில் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடும் சந்தர்ப்பங்களில் இச்சொல் சொல்லர்த்தமாகவே உபயோகிக்கப்பட்டுள்ளது. மேலும், ஞானஸ்நானத்தைக் குறிப்பிடும் வசனங்களில் "தண்ணீர் ஊற்றப்படுதல்" என்று மொழிபெயர்க்கக் கூடிய விதத்தில் "பெப்டிஸ்சோ" என்னும் சொல் "செயப்பாட்டு வினையாகத்" (passive voice) தண்ணீர் என்னும் எழுவாய்ச் சொல்லுடன் (subject) தொடர்புபடுத்தப்படவில்லை (A.H.Strong, *Systematic Theology*, p. 935; F.A.Malone, *The Baptism of Disciples Alone*, p. 207).

[21] W.Bauer, W.F.Arndt and F.W.Gingrich, ed., *A Greek – English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, pp. 131-132; H.G.Liddell & R.Scott, *A Greek English Lexicon Volume 1*, pp. 305-306; C.Brown, ed., *New International Dictionary of New Testament Theology Volume 1*, 144.

என்னும் கிரேக்கச் சொல்லை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து "தண்ணீ ரில் முழுக்குதல்" என்று அர்த்தம் தரும் விதத்தில் "இம்மர்ஷன்" (immersion) என்று குறிப்பிடாமல் அதை அப்படியே "பெப்டிஸம்" (baptism) என்று எழுதியுள்ளனர்.[22] ஆனால் தமிழ் வேதாகமங்களில் இச்சொல் மூலமொழியின் அர்த்தத்தை அறியத்தரும் விதத்தில் "ஞானஸ்நானம்" அல்லது "திருமுழுக்கு" என்றே குறிப்பிடப்பட்டுள் ளது.[23] ஞானஸ்நானம் என்பதற்கு கிரேக்க மொழியில் உபயோகிக்கப் பட்டுள்ள சொல் தண்ணீரில் முழுக்குதல் என்னும் அர்த்தமுடையதாக இருப்பதனாலேயே கிரேக்க மொழியை நன்கு அறிந்துள்ள "கிரேக்க ஓர்த்தடொக்ஸ் சபை" (Greek Orthodox Church) குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போதும் அவற்றைத் தண்ணீரில் முழுக்கியே ஞானஸ்நானம் கொடுக்கின்றது.[24] ஞானஸ்நானத்தைக் குறிப்பிட "தெளித்தல்" "ஊற்றுதல்" என்னும் அர்த்தமுள்ள சொற்கள் வேதாகமத் தில் உபயோகிக்கப்படவில்லை. இதனால், "தண்ணீரில் மூழ்கிப் பெறுவதே வேதாகமம் போதிக்கும் ஞானஸ்நானமாயுள்ளது."[25]

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஞானஸ்நா னம் என்னும் சொல்லைத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுதல் என்னும் அர்த்தத்திலேயே உபயோகித்துள்ளனர்.[26] முதலாம் நூற்றாண் டைச் சேர்ந்த யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பவருடைய நூல்களில் பல தடவைகள் இடம்பெறும் "பெப்டிஸ்சோ" என்னும் சொல், தண்ணீரில் அல்லது திரவத்தில் முழுக்குதல் என்னும் அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது.[27] மேலும், தண்ணீரில் மூழ்கி எழும் ஞானஸ்நான முறையை அடிப்படையாகக்கொண்டே

---

[22] M.Anderson, *See Here is Water: A Case for Believer's Baptism*, p. 33.

[23] பழைய ஏற்பாடு கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டபோது 2ராஜாக்கள் 5:14ல் பெப்டிஸ்சோ என்னும் சொல் உபயோகிக்கப்பட்டது. இதற்குக் கார ணம், நாகமான் யோர்தானில் ஏழு தரம் முழுகியதைக் குறிப்பிட கிரேக்கத்தில் இதுவே பொருத்தமான சொல்லாக இருந்தது.

[24] M.Anderson, *See Here is Water: A Case for Believer's Baptism*, pp. 50-51; D.F.Wright, ed., *Baptism: Three Views*, p. 23; J.H.Leith, ed., *The Westminster Confession in Current Thought*, p. 84.

[25] A.H.Strong, *Systematic Theology Volume 3*, p. 993; J.Gill, *A Complete Body of Doctrinal and Practical Divinity, Volume 3*, pp. 307-308.

[26] C.Brown, *New International Dictionary of the New Testament Vol. 1*, p. 144.

[27] F.Josephus, *The Antiquities of the Jews*, 9:10:12, 15:3:3.

ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலில் இணைக்கப்படும் அனுபவமாக இருப்பதாகப் பவுல் ரோமர் 6:3-5லும் கொலொசெயர் 2:12லும் குறிப்பிட்டுள்ளார்.[28] அதாவது, ஞானஸ்நானத்தில் தண்ணீரில் மூழ்குவது மரிப்பதையும், தண்ணீருக்குள் இருப்பது அடக்கத்தையும், தண்ணீரிலிருந்து வெளியே வருவது உயிர்த்தெழுதலையும் உருவகிக்கின்றது.[29] "ஒருவர்மீது தண்ணீரைத் தெளித்து, அல்லது ஊற்றி கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தில் இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் அடக்கத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்படும் செயலை அடையாளப்படுத்த முடியாது."[30] பிற்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவும், வயோதிபருக்கும் வியாதியஸ்தருக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதில் ஏற்பட்ட சிரமங்களினாலும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் உருவானதாலும் முழுக்கு ஞானஸ்நானத்தைக் கிறிஸ்தவ சபை கைவிட்டபோதிலும், வேதாகமக் காலத்தில் தண்ணீரில் முழுக்கியே மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.[31] இரண்டாம் நூற்றாண்டிலும் தண்ணீரில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கும் முறையே கிறிஸ்தவ சபையில் இருந்துள்ளதை அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் அறியத்தருகின்றன. இந்நூல்களில் ஞானஸ்நானமானது, "தண்ணீருக்குள் கீழே சென்று மேலே வருவதாகச்" சித்தரிக்கப்பட்டுள்ளது.[32] தண்ணீர் அரிதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில் தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கப்படலாம் என்று இரண்டாம் நூற்றாண்டில் சபைத் தலைவர்கள் கூறினாலும்,[33] முழுக்கு ஞானஸ்நானமே அக்கா

---

[28] C.K.Barrett, *Romans: Black's New Test ment Commentary*, p. 115; A.Carson, *Baptism in its Modes and Subjects*, pp. 14_-143; A.H.Strong, *Systematic Theology Volume 3*, pp. 940-941; A.Booth, *Peadobaptism Examined*, pp. 162-163; A.G.Patzia, *Ephesians, Colossians, Philemon: International Biblical Commentary*, p. 56.

[29] O.Cullmann, *Baptism in the New Testament*, p. 14; C.H.Dodd, *The Epistle of Paul to the Romans*, p. 87; G.R.Beasley-Murray, *Baptism in the NT*, p. 133.

[30] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 82.

[31] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 325; F.A.Malone, *The Baptism of Disciples Alone*, p. 210.

[32] *The Epistle of Barnabas*, 11:11; *Shepherd of Hermas*, 4:31.

[33] *The Didache*, Chapter 7. தெளிப்பு ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்பு இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "டிடாக்கி" என்னும் நூலில் உள்ள போதிலும், இக்குறிப்பை நாம் தவறாக வியாக்கியானம் செய்யக்கூடாது. ஓடும் தண்ணீரில், அதாவது ஆற்றுத் தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி அறிவுறுத்தும் இந்நூல், இத்தகைய தண்ணீர் இல்லாவிட்டால்

லத்தின் ஞானஸ்நான முறையாயிருந்தது. கி.பி. 2ம் 3ம் நூற்றாண்டுக ளில் எழுதப்பட்ட கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடைய நூல்களிலும் தண்ணீரில் முழுக்கிக் கொடுக்கப்படும் முறையிலேயே ஞானஸ்நானம் சித்தரிக்கப்பட்டுள்ளது.[34] கி.பி. 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சபையின் சட்டத்திலும் தண்ணீரில் முழுக்கியே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.[35] மேலும், 3ம் 4ம் நூற்றாண்டுக ளில் கட்டப்பட்ட ஞானஸ்நானத் தொட்டிகளின் நீள அகலங்களைக் கருத்திற்கொள்ளும்போது, அக்காலத்தில் முழுக்கு ஞானஸ்நானமே கொடுக்கப்பட்டுள்ளது தெளிவாகின்றது.[36] எனவே, நாமும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதே ஞானஸ்நானத்திற்கான சரியான முறையாக உள்ளது.



## (2)
## திரியேகத் தேவநாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும்

தண்ணீரில் மூழ்கிப் பெறும் ஞானஸ்நானத்தை நாம் திரியேகத் தேவனின் நாமத்தில் பெறவேண்டும். ஏனெனில், இவ்விதமாக ஞானஸ் நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். "சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங் கள்" (மத்.28:19) என்பதே இயேசுகிறிஸ்துவின் கட்டளையாக உள் ளது. ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்த வர்கள் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்" ஞானஸ்நானம் பெற்றுள்ளதி

---

தண்ணீர் தேங்கி இருக்கும் குளங்களில் அல்லது தொட்டிகளில் ஞானஸ்நா னம் கொடுக்கும்படி கூறுகிறது. முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடிய அளவுக்குத் தண்ணீர் இல்லாவிட்டால் மாத்திரமே தண்ணீரைத் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கும்படி இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தண் ணீர் பற்றாக்குறையாக இருந்த வறண்ட பிரதேசங்களில் ஞானஸ்நானம் கொடுப்பதற்கு கி.பி.2ம் நூற்றாண்டில் கைக்கொள்ளப்பட்ட நடைமுறையாகவே உள்ளது (F.A.Malone, *The Baptism of Disciples Alone*, p. 210).

[34] H.F.Stander & J.B.Louw, *Baptism in the Early Church*, p. 25.

[35] *Apostolic Constitutions*, 7.2.22.

[36] F.Buhler, *Archaeological, Historical & Biblical Aspects of Baptism*, pp. 17,20.

[37] H.Kosmala, "The Conclusion of Matthew" in *Annual of the Swedish Theological Institute*. 4 (1965) pp. 132-147.

னால் (அப்.2:38, 8:15, 10:48, 19:5), பிற்காலத்திலேயே திரித்துவ தேவனின் நாமம் ஞானஸ்நானக் கட்டளையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர்.[37] சில வேதப்புரட்டுக் குழுக்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுத்து வருகின்றன.[38] ஆனால், ஞானஸ்நானக் கட்டளையில் திரித்துவ தேவனின் நாமம் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. முதலாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியி லேயே திரித்துவத் தேவனின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட் டுள்ளது பற்றிய குறிப்புகள் உள்ளன.[39] இதனால், இது மத்தேயுவினால் எழுதப்பட்ட இயேசுகிறிஸ்துவின் கூற்றாகவே உள்ளது.[40] உண்மை யில், சுவிசேஷத்தின் இறுதியிலுள்ள இயேசுகிறிஸ்துவின் கட்டளை முழு புத்தகத்துடனும் தொடர்புள்ள விதத்திலேயே உள்ளது.[41] இத னால், திரித்துவ தேவனின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து கட்டளையிட்டுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.[42]

திரித்துவ தேவனின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசு கிறிஸ்து கட்டளையிட்டுள்ளபோதிலும், அவருடைய சீஷர்கள் "இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்" ஞானஸ்நானம் கொடுத்துள்ளது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத் தார்கள்" என்பது (அப்.2:38, 8:15, 19:5), "இயேசுகிறிஸ்துவின் அறி வுறுத்தலின்படி அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள்" என்பதையே அறிபத்தருகின்றது. ஏனெனில், அப்போஸ்தலருடைய நடபடிகள்

---

[38] D.J.Hesselgrave, *Dynamic Religious Movements*, pp. 223-245. இயேசுவின் நாமத்தினால் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்கும் வேதப் புரட்டுக்குழுக்கள், பிதா குமாரன், பரிசுத்த ஆவி என்பன இயேசுகிறிஸ்துவின் வித்தியாசமான பெயர்கள் என்று கூறுகின்றனர்

[39] D.Hill, *Matthew: The New Century Bible Commentary*, p. 362.

[40] J.D.Kingsbury, "The Composition and Christology of Matthew 28:16-20" in *Journal of Biblical Literature*. 93 (1974), pp. 573-574; G.D.Kilpatrick, *The Origins of the Gospel According to St. Matthew*, pp. 48-49; D.J.Bosch, *Transforming Mission: Paradigm Shifts in Theology of Mission*, p. 57.

[41] O.S.Brooks, "Matthew xxviii 16-20 and the Desigh of the First Gospel" in *Journal for the Study of the New Testament*. 10 (1981), pp. 2-18; D.P.Scaer, "The Relation of Matthew 28:16-20 to the Rest of the Gospel" in *Catholic Biblical Quarterly*. 55 (1991), pp. 245-246.

[42] R.H.Mounce, *Matthew: New International Biblical Commentary*, p. 268.

புத்தகத்தில் "நாமம்" என்னும் சொல் "அதிகாரத்தை" அல்லது "வல்லமையையே" குறிக்கின்றது.[43] இதனால்தான் அப்போஸ்தலர்கள் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்" வியாதிகளைச் சுகப்படுத்தியதாகவும், பிசாசுகளைத் துரத்தியதாகவும் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, இயேசுகிறிஸ்து கொடுத்த அதிகாரத்தினால் முடவனைக் குணப்படுத்திய பேதுரு, "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் அவனை எழுந்திருக்கும்படி" கட்டளையிட்டுள்ளார் (அப்.3:6). இதைப் போலவே, இயேசுகிறிஸ்து கொடுத்த அதிகாரத்தில் பிசாசைத் துரத்திய பவுல் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்" (அப்.16:18) என்று குறிப்பிட்டுள்ளார். ஆலோசனைச் சங்கத்தினர், "எந்த வல்லமையினால், எந்த நாமத்தினால் இவ்வாறு செய்தீர்கள்?" என்று அப்போஸ்தலரிடம் கேட்டுக்கும்போது (அப்.4:7), எவருடைய அதிகாரத்தினால் இவ்வாறு செய்தீர்கள் என்றே கேட்டனர்.[45] அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், "இயேசுவின் நாமத்தில் செயற்படுவது அவரது அதிகாரத்திலும் வல்லமையிலும் செயற்படுவதாகவே உள்ளது."[46] எனவே, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுப்பது, அவர் கொடுத்த அதிகாரத்தில் ஞானஸ்நானம் கொடுப்பதாகவே உள்ளது. உண்மையில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படியான அதிகாரத்தையே இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார் (மத்.28:19). அவர்கள் இயேசுகிறிஸ்து தங்களுக்கு கொடுத்த அதிகாரத்தில் மற்றவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததினாலேயே அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



## (3)
## முழுமையாக அர்ப்பணித்து ஞானஸ்நானம் பெறவேண்டும்

கிறிஸ்தவர்களாகிய நாம் தண்ணீரில் மூழ்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது, நம்மை முழுமையா

[43] W.Grudem, *Systematic Theology: Introduction to Biblical Doctrine*, p. 379.
[45] F.F.Bruce, *Acts: New International Commentary on the New Testament*, p. 92.
[46] J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 128.

கத் தேவனிடம் அர்ப்பணித்து ஞானஸ்நானம் பெறவேண்டும். ஏனெனில், ஞானஸ்நானம் "தேவனைப்பற்றும் நல்மனசாட்சியின் உடன்படிக்கை யாக உள்ளது" (1பேது.3:21). அதாவது, "ஞானஸ்நானம் நாம் தேவனுடன் செய்யும் ஒரு ஒப்பந்தமாக உள்ளது."[47] இதனால், கத்தோலிக்க வேதாகமத்தில் இவ்வாக்கியம், "நல்ல மனசாட்சியுடன் கடவுளுக்குத் தரும் உறுதி வாக்காகும்" என்று விளக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்ததினால் நம்முடைய வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் காண்பிக்கும் செயலாகவே ஞானஸ்நானம் இருப்பதனால், நாம் ஞானஸ்நானம் பெறும்போது இயேசுகிறிஸ்து நம்மில் ஏற்படுத்திய மாற்றத்தை வெளிப்படையாகக் காண்பிக்கும் விதத்தில் வாழ்வதற்கு நம்மை அர்ப்பணிக்கவேண்டியது அவசியமாயுள்ளது. இது இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்வதற்கான அர்ப்பணிப்பாகும். ஏனெனில், "பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இயேசுகிறிஸ்துவுடனான புதிய வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் அதிரடிச் செயலாகவே புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் உள்ளது."[48]



**இயேசுகிறிஸ்துவுடனான புதிய வாழ்வுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் அதிரடிச்செயலாகவே புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் உள்ளது**



நாம் ஞானஸ்நானம் பெறும்போது இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் நம்மை இனங்காண்பவர்களாக இருக்கின்றோம் (ரோ.6:3-5).[49] இயேசுகிறிஸ்துவின் மரணம் நம்முடைய

---

[47] J.N.D.Kelly, *Epistles of Peter: Black's New Testament Commentary*, p. 163.

[48] T.George, *Galatians: The New American Commentary*, p. 276.

[49] "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?... அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" என்று ரோமர் 6:3-5 கூறுகிறது.

பாவங்களுக்கான பலியாக உள்ளது (1யோவா.2:2).[50] இதனால், அவர் மரிக்கும்போது நம்முடைய பாவங்களைத் தம்மீது சுமந்து தீர்த்தார் (யோவா.1:29).[51] எனவே, ஞானஸ்நானத்தில் நாம் அவருடைய மரணத்தில் நம்மை இனங்காணும்போது, நம்முடைய பாவ வாழ்வு மரணமடைவதைக் காண்பிக்கின்றோம். மரித்த இயேசுகிறிஸ்து அடக் கம்பண்ணப்பட்ட செயல், அவர் உண்மையிலேயே மரித்தார் என்பதை உறுதிப்படுத்துகிறது. எனவே, ஞானஸ்நானத்தில் இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் அடக்கத்திலும் இணைக்கப்படும் நாம், நம்முடைய பழைய வாழ்வு முழுமையாக மரித்துவிட்டதை உறுதிப்படுத்துகிறோம். அதேபோல, அவருடைய உயிர்த்தெழுதலிலும் நாம் நம்மை இனங் காண்பதனால், ஞானஸ்நானம் பெறும்போது, நம்முடைய பழைய வாழ்க்கை மரணமடைந்து புதியதொரு வாழ்வுக்குள் உயிர்ப்பிக்கப்படு கின்றோம். உண்மையில், "ஞானஸ்நானம் பழைய வாழ்வின் கல்லறை யாகவும், புதிய வாழ்வின் கருவறையாகவும் உள்ளது."[52] அதாவது, ஞானஸ்நானம் நம்முடைய "பழைய வாழ்க்கையின் மரண ஆராதனை யாக மட்டுமல்ல, புதிய வாழ்வின் ஆரம்பமாகவும் உள்ளது."[53] இத னால், "ஞானஸ்நானம் பெறுபவர், பழைய வாழ்க்கை முடிவடைந்து விட்டது என்பதையும், புதியதொரு வாழ்க்கைக்குள் வந்துள்ளதையும் பகிரங்கமாக அறிவிப்பவராக இருக்கின்றார்."[54] எனவே, நாம் ஞானஸ்நா னம் பெறும்போது, இதுவரையில் வாழ்ந்த பாவ வாழ்க்கையைத் துறந்து, தேவனுடைய கற்பனைகளின்படி பரிசுத்தமாக வாழ்வதற்கு நம்மை முழுமையாக அவரிடம் அர்ப்பணிக்கவேண்டியது அவசியம்.

ஞானஸ்நானம் பெறுபவர்கள் இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் தங்களை இணைத்துக்கொள்வதனால், அவர்கள்

---

[50] "நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" என்று 1யோவான் 2:2 கூறுகிறது.

[51] இதனால்தான் யோவான் ஸ்நானகன் இயேசுகிறிஸ்துவைக் கண்டபோது "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினான் (யோவான் 1:29).

[52] J.B.Lightfoot, *St.Paul's Epistles to the Colossians and Philemon*, p. 184.

[53] G.B.Wilson, *New Testament Commentaries Volume 2: Philippians to Hebrews and Revelation*, p. 98.

[54] F.F.Bruce, *Colossians, Philemon and Ephesians: The New International Commentary on the New Testament*, p. 105.




**ஞானஸ்நானம்**
**பழைய வாழ்வின் கல்லறையாகவும், புதிய வாழ்வின் கருவறையாகவும் உள்ளது**



தங்களுடைய பழைய பாவ வாழ்க்கையைத் துறந்தவர்களாகவும், கிறிஸ்துவுக்குள்ளான புதியதோர் வாழ்வை ஆரம்பிப்பதற்காகத் தங்களைத் தேவனிடம் அர்ப்பணிப்பவர்களாகவும் இருக்கின்றனர். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ஞானஸ்நானம் பெறுபவர்கள் இதை ஒரு அடையாளச் செயலின் மூலம் காண்பித்தனர். ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் தாம் அணிந்திருக்கும் பழைய ஆடையைக் கழற்றும் அவர்கள், ஞானஸ்நானம் பெற்ற பின் புதிய ஆடைகளை அணிந்து கொள்வது வழக்கம்.[55] ஞானஸ்நானத்தின் பின்னர் தாம் புதிய மனிதர், பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின என்பதைக் காண்பிப்பதற்காக அக்காலத்தில் இத்தகைய நடைமுறை இருந்தது. அதேசமயம், ஞானஸ்நானத்தின் பின் அவர்கள் அணிந்துகொள்ளும் புதிய ஆடை இயேசுகிறிஸ்துவை அடையாளப்படுத்தும் ஆடையாக இருந்தது. இதனால்தான், "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருப்பதாகக்" கலாத்தியர் 3:27ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, ஞானஸ்நானம் பெற்றவர்கள் இயேசுகிறிஸ்துவை ஒரு ஆடையாக அணிந்து கொண்டிருப்பதாக இவ்வசனம் கூறுகிறது. அக்காலத்தில் ஆடைகள் மனிதருடைய சமுதாய நிலையை வெளிப்படுத்தும் அடையாளமாக இருந்தது. அத்தோடு, சிறப்பான வைபவங்களுக்குப் பிரத்தியேகமான ஆடைக ளும் இருந்தன.[56] கலாத்தியர் 3:27ல் ஆடை என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள சொல், அக்காலத்தில் மனிதர் பருவ வயதை அடையும்போது அணியும் ஆடையயைக் குறிக்கின்றது. இவ்வாடை, இனி நாங்கள் சிறுவர்கள் அல்ல என்பதை சமுதாயத்திற்குக் காண்பிக்கும் அடையாளமாக இருந்தது.[57] இதைப்போ

[55] T.George, *Galatians: The New American Commentary*, p. 280.
[56] F.H.Wight, *Manners and Customs of Bible Lands*, pp. 91-102; *R.Gower, The New Manners and Customs of Bible Times*, pp. 12-21.

லவே, ஞானஸ்நானத்தின் போது பழைய ஆடைகளைக் களைந்து இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளும் கிறிஸ்தவர்கள், இனிமேல் கிறிஸ்துவுக்குள் தாங்கள் புதிய சிருஷ்டிகள், பழியவைகள் எல்லாம் ஒழிந்துபோயின, இனிமேல் இயேசுகிறிஸ்துவைப்போல வாழப்போகின் றோம் என்பதை பகிரங்கமாக அறிவிப்பவர்களாகவும், இவ்விதமாக வாழ்வதற்காகத் தங்களைத் தேவனிடம் அர்ப்பணிப்பவர்களாகவும் இருக்கின்றனர்.





## நான்காம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

தற்காலத்தில் பல கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் மனிதரை இரட்சிக்கும் செயல் என்று கருதுகின்ற போதிலும், வேதாகமம் இதை ஒரு அடையாளச் செயலாகவே குறிப்பிட்டுள்ளது. அதாவது, இயேசுகிறிஸ்துவினால் நம்முடைய வாழ்வில் ஏற்படுத்தப்படும் உள்ளான ஆவிக்குரிய மாற்றத்திற்கான வெளிப்படையான அடையாளமாகவே ஞானஸ்நானம் உள்ளது. இதனால், ஞானஸ்நானமானது இயேசுகிறிஸ்து நமக்கு அருளும் இரட்சிப்புக்கும், அவருடைய மரணம் உயிர்த்தெழுதல் என்பவற்றில் நாம் இணைவதற்கும், அவர் நம்முடன் செய்துள்ள உடன்படிக்கைக்கும் அடையாளமாக உள்ளது.

# நான்காம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்தின் அர்த்தம்

## ஞானஸ்நானம் என்றால் என்ன?

கிறிஸ்தவ மார்க்கத்தில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமான ஒரு புனித காரியமாக இருந்தாலும், தற்காலத்தில் பெரும்பாலானவர்கள் ஞானஸ்நானம் என்றால் என்ன என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். கிறிஸ்தவத்திற்குள் வருவதற்கான அல்லது கிறிஸ்தவனாகுவதற்கான ஒரு புனித சடங்காகவே பலர் ஞானஸ்நானத்தைக் கருதுகின்றனர். இரட்சிக்கப்படுவதற்கான அல்லது பரலோகம் செல்வதற்கான செயல்முறையாக ஞானஸ்நானத்தைக் கருதுபவர்களும் நம் மத்தியில் உள்ளனர். இவர்கள் ஞானஸ்நானத்தின் சரியான அர்த்தத்தை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். இதனால், பலருக்கு ஞானஸ்நானம் அர்த்தமற்ற ஒரு பாரம்பரிய சடங்காசார செயல்முறையாகவும், ஏனையவர்களுக்கு இரட்சிக்கப்படுவதற்காக ஒருவன் செய்யவேண்டிய காரியமாகவும் உள்ளது. ஆனால், வேதாகம உபதேசத்தின்படி ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாகவே

உள்ளது. அதாவது, ஞானஸ்நானம் கிறிஸ்தவ அனுபவத்தினதும் உபதேசத்தினதும் சில சிறப்பம்சங்களை உவமிக்கும் ஒரு அடையாளச் செயலாக உள்ளது.



**இயேசுகிறிஸ்துவினால் நம்முடைய வாழ்வில் ஏற்படுத்தப்படும் ஆவிக்குரிய அனுபவத்திற்கான அடையாளமே ஞானஸ்நானம்.**



வேதாகம கால மக்களுடைய கலாசாரம் அடையாளச் செயல்களினால் நிறைந்திருந்ததினால், சிறப்பான காரியங்களை விளக்குவதற்கு அவர்கள் குறிப்பிட்டவிதமான செயல்களைச் செய்தனர். உதாரணத்திற்கு சந்தோஷத்தை வெளிப்படுத்துவதற்குத் தலைக்கு எண்ணெய் வைக்கும் அவர்கள், துயர காலங்களில் தாம் அணிந்திருக்கும் ஆடைகளைக் கிழித்து,[1] சணல்நூல் ஆடைகளைத் தரித்து,[2] தலையில் மண்ணை அல்லது சாம்பலைப் போட்டுக்கொள்வது வழக்கம் (யோபு.2:12, எஸ்.4:1).[3] இதைப்போன்ற பல அடையாளச் செயல்கள் வேதாகம கால மக்கள் மத்தியில் இருந்தன. இதனால் மனிதர்களுக்கு சில முக்கிய செய்திகளை அறிவிப்பதற்குத் தேவனும் தீர்க்கதரிசிகளைச் சில காரியங்களைச் செய்யும்படி கட்டளையிட்டதைப் பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கலாம் (ஏசா.20:2-3, எரே.27:2-7). இதைப்போலவே, ஞானஸ்நானமும் ஒரு அடையாளச் செயலாக உள்ளது. இது யூத கலாசாரத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ள ஒரு அடையாளச் செயலாகும்.

ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாக இருப்பதை யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் சிறப்பான விதத்தில்

---

[1] வேதாகம கால மக்கள் கடும் துயரத்தை வெளிப்படுத்த ஆடைகளைக் கிழித்துக் கொள்வது வழக்கம். இதை ஆதியாகமம் 37:34, 2சாமுவேல் 1:11, ஏசாயா 3:24, 15:3, எசேக்கியேல் 27:30-33, தானியேல் 9:3 போன்ற வசனங்களில் நாம் காணலாம்.

[2] சணல்நூல் ஆடையே வேதத்தில் "இரட்டுடை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[3] M.Gruber, *Aspects of Nonverbal Communication in the Ancient Near East*, pp. 412, 417-418, 446, 457, 460.

அறியத்தருகின்றனர். தன் கால மக்கள் மனந்திரும்பவேண்டும் என்பதே யோவானுடைய பிரசங்கமாயிருந்தது (லூக்.3:8, மத்.3:2).[4] அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டுத் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பியவர் களே யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றனர் (மத்.3:6).[5] இதனால் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் "மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம்" என்று அழைக்கப்பட்டது (மத்.3:11, அப்.19:4).[6] யோவானுடைய பிரசங்கத்தைக் கேட்டு மனந்திரும்பியவர்கள், தாங்கள் மனந்திரும்பியிருக்கின்றோம் என்பதை வெளிப்படையாகக் காண்பிப்பதற் காகவே அவனிடம் ஞானஸ்நானம் பெற்றனர். அதாவது, அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை (மனந்திரும்புதலை) ஞானஸ்நானத்தின் மூலம் வெளிப்படையாகக் காண்பித்தார்கள். இதைப்போலவே கிறிஸ்தவ ஞானஸ்நானமும் இயேசுகிறிஸ்துவினால் நம்முடைய வாழ்வில் ஏற்படுத்தப்படும் உள்ளான ஆவிக்குரிய அனுப வத்திற்கான வெளிப்படையான அடையாளமாயுள்ளது. இதைச் சரியா னவிதத்தில் அறிந்துகொள்வதற்கு ஞானஸ்நானம் எவற்றிற்கான அடையாளச் செயலாக இருக்கின்றது என்பதை வேதாகமத்தின் மூலம் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.



## (1).இரட்சிப்பின் அனுபவத்திற்கான அடையாளமாயுள்ளது

ஞானஸ்நானம் இரட்சிப்பின் அனுபவத்திற்கான அடையாளமாயுள்ளது. நாம் ஏற்கனவே பார்த்தபடி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதே மனிதர் இரட்சிப்படைவதற்கான ஒரேயொரு வழியாக உள்ளது (ரோ.

[4] யோவான் ஸ்நானகன், "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" (லூக்.3:8), "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்" (மத்.3:2).

[5] மக்கள் "தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவ னால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" என்பதை மத்தேயு 3:6 அறியத்தருகின்றது.

[6] தன்னுடைய ஞானஸ்நானத்தைப்பற்றி விளக்கும்போது, "மனந்திரும்புதலுக் கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்" என்றே யோவான் தெரிவித்துள்ளார் (மத்.3:11). இதைப்பற்றி பவுல் குறிப்பிடும் போது, "யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும் புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தான்" என்றார் (அப்.19:4).

10:9, அப்.16:30-31, எபே.2:8-9).[7] உண்மையில், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்புக்கான அடையாளமாகவே ஞானஸ்நானம் உள்ளது. இதை நாம் சரியானவிதத்தில் புரிந்துகொள்வதற்கு, இரட்சிப்பு என்றால் என்ன என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். இரட்சிப்பு என்பதற்கு வேதாகமத்தின் மூலமொழிகளில்[8] உபயோகிக்கப்பட்டுள்ள சொற்கள் "காப்பாற்றுதல்" அல்லது "விடுவித்தல்" என்னும் அர்த்தமுடையவை.[9] வேதாகமத்தில் இச்சொற்கள் "ஆபத்திலிருந்து தப்புவிக்கப்படுதல்" என்னும் அர்த்தத்துடனேயே உபயோகிக்கப்பட்டுள்ளன.[10] இதனால், எதிரியிடமிருந்து பாதுகாக்கப்படுதல், அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுதல், வியாதியிலிருந்து சுகமடைதல் போன்றவை அனைத்தும் இரட்சிப்பு என்றே வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[11] எனினும், மனிதருடைய ஆவிக்குரிய வாழ்வோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் இரட்சிப்பானது இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மூலம் பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் விடுவிக்கப்படுவதாக உள்ளது.[12] சகல மனிதரும் பிறவியிலேயே பாவிகளாக இருப்பதனால், தேவனுடைய நீதியான தீர்ப்பின்படி நாம் அனைவரும் அவருடைய கடுமையான தண்டனைக்கு உட்பட்டவர்களாகவே இருக்கின்றோம். "பாவத்தின் சம்பளம் மரணம்"



பாவத்தின் தண்டனையான நரக ஆக்கினையிலிருந்து விடுவிக்கப்படுவதே இயேசுகிறிஸ்து நமக்கு அருளும் இரட்சிப்பாக உள்ளது



[7] "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோ.10:9) என்றும், "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்றும் கூறும் வேதாகமம் (அப்.16:30-31), "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே.2:8) என்பதை அறியத்தருகிறது.

[8] வேதாகமத்தின் பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

[9] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 849.

[10] L.O.Richards, *Expository Dictionary of Bible Words*, pp. 540-541.

[11] W.Barclay, *New Testament Words*, pp. 268-270.

[12] C.R.Swindoll, ed., *The Theological Wordbook*, pp. 313-314.

(ரோ.6:23) என்பது தேவனுடைய நீதிச்சட்டமாக இருப்பதனால், பிறவியிலேயே பாவிகளாயிருக்கும் நாம் அனைவரும் மரண ஆக்கினைக்கு உட்பட்டவர்களாக இருக்கின்றோம்.[13] வேதாகம மொழிவழக்கில் மரணம் என்பது பிரிவாக இருப்பதனால், பாவத்தின் விளைவான மரணம், தேவனுடன் நிரந்தரமாகப் பிரிந்திருக்கும் நரக ஆக்கினையாகவே உள்ளது.[14] இந்த நரக ஆக்கினையிலிருந்து விடுவிக்கப்படுவதே இயேசுகிறிஸ்து நமக்கு அருளும் இரட்சிப்பாக உள்ளது. இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவன் இந்த நரக ஆக்கினைக்கு உட்படாதபடி விடுவிக்கப்படுவான் (ரோ.8:1).[15] வேதாகமம் இதைப்பற்றி பின்வருமாறு கூறுகிறது:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு

---

[13] உலக மாந்தர் அனைவரும் ஆதாமின் வம்சத்தினராய் இருப்பதனால் (அப்.17:26), அனைவரும் பாவிகளாகவே பிறக்கின்றனர். இதைப்பற்றி வேதாகமம் கூறும்போது, “ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது” (ரோ.5:12) என்றும், “ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன் மூலமாய் மரணம் ஆண்டுகொண்டிருக்கிறது” (ரோ.5:17) என்றும், “ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது” (ரோ.5:18) என்றும் கூறுகிறது. சங்கீதக்காரன் தன்னுடைய பிறப்பைப் பற்றி கூறும்போது, “இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்” (சங்.51:5) என்று குறிப்பிட்டுள்ளான். இவ்வசனத்தில், “தான் கருத்தரிக்கப்பட்ட செயல்முறை தவறானது என்று சங்கீதக்காரன் கூறுவில்லை. மாறாக, நான் பாவியான பெற்றோருக்குப் பிறந்தவன். இதனால் நான் பாவியாக இருக்கின்றேன் என்பதையே அவன் இவ்வாறு அறிக்கையிட்டுள்ளான்” (G.A.F.Knight, *Psalms Volume 1: The Daily Study Bible*, p. 243).

[14] வேதாகமம் மூன்று விதமான மரணங்களைப்பற்றி கூறுகிறது. ஒன்று “ஆவிக்குரிய மரணம்.” இது, தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான பிரிவாக உள்ளது. பாவம் தேவனையும் மனிதரையும் பிரிப்பதனால் (ஏசா.59:1-2), அவர்கள் அக்கிரமத்திலும் பாவத்திலும் மரித்தவர்களாயிருப்பதாக வேதம் கூறுகிறது (எபே.2:1,4). இரண்டாவது “சரீர மரணம்.’ இது, மனிதனுடைய சரீரத்திலிருந்து அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் பிரிவடைவதாகும். மூன்றாவது “நித்திய மரணம்.” இது, தேவனுடன் நிரந்தரமான பிரிவாக, நரக ஆக்கினையாக உள்ளது. இது பற்றிய முழுமையான விளக்கத்திற்கு எனது ***மரணத்தின் மறுபக்கம்*** என்னும் நூலைப் பார்க்கவும்.

[15] “கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை” என்பதை ரோமர் 8:1 அறியத்தருகின்றது.

> கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவா.3:16-18)

இவ்வசனங்களில் "ஆக்கினைத்தீர்ப்பு" நரக ஆக்கினையாகவும், இதிலிருந்து தப்புவிக்கப்படுதல் "நித்திய ஜீவனாகவும்" குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இவை இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதையும் விசுவாசியாததையும் அடிப்படையாகக்கொண்டு மனிதருக்குக் கொடுக்கப்படும் தேவனுடைய தீர்ப்பாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, இரட்சிப்பானது இயேசுகிறிஸ்துவின் மூலம் நரக ஆக்கினையிலிருந்து தப்புவிக்கப்படுவதாகவே உள்ளது (1தெச.1:10). இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனால் நமக்கு கிடைக்கும் இந்த இரட்சிப்புக்கான அடையாளமாகவே ஞானஸ்நானம் உள்ளது. இதைப்பற்றி 1பேதுரு 3:20-21லும் 1கொரிந்தியர் 10:1-2லும் நாம் வாசிக்கலாம். இவ்விரு வேதப் பகுதிகளும் பழைய ஏற்பாட்டுக்கால சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, ஞானஸ்நானத்தை இரட்சிப்புக்கான அடையாளமாகக் குறிப்பிட்டுள்ளன. 1பேதுரு 3:20-21ல் பின்வருமாறு நாம் வாசிக்கலாம்:

> அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது, கீழ்ப்படியாமற்போனவைகள். அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (1பேது.3:20-21).

வேதாகமத்திலேயே அதிக சர்ச்சைக்குரிய வசனங்களின் முடிவுரையாக இப்பகுதி உள்ளது. இப்பகுதியில் இயேசுகிறிஸ்து "காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது

(1பேது.3:19). இந்த ஆவிகள் யாருடையவைகள் என்பதையே 20ம் வசனம் அறியத்தருகின்றது.[17] இவைகள் நோவாவினுடைய காலத்தில் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஜலப்பிரளயத்தில் அழிந்துபோன மனிதர்களுடைய ஆவிகள் என்று இவ்வசனம் கூறுகிறது. நோவாவின் காலத்தில், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்த நோவாவும் அவனுடைய குடும்பத்தினரும் மாத்திரமே ஜலப்பிரளய அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். ஏனையவர்கள் அனைவரும் ஜலப்பிரளயத்தில் அழிந்து போனார்கள் (ஆதி.6-9). இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனால் மனிதருக்கு கிடைக்கும் இரட்சிப்புக்கு அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பதை விளக்குவதற்காகப் பேதுரு இச்சம்ப வத்தை ஒரு உதாரணமாக உபயோகித்துள்ளார்.[18] இதனால்தான், ஞானஸ்நானம் இச்சம்பவத்திற்கு "ஒப்பனையாக இருப்பதாக" 21ம் வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம், "நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தின் தண்ணீரைத் தற்காலத்தில் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறும் தண்ணீருடன் பேதுரு ஒப்பிட்டுள்ளார்."[19] இதனால், 20ம் வசனத்தில் "எட்டுப்பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள்" என்னும் வாக்கியம் மூலமொழியில், "எட்டுப்பேர் மத்திரம் ஜலத்திற்கு ஊடாகக் காக்கப்பட்டார்கள்" என்றுள்ளது.[20] மேலும் மூலமொழியில், 21ம் வசனத்தில் "இந்த ஜலம்" அதாவது 20ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜலப்பிரளயத்தின் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு ஒப்பனையாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலகு தமிழ் மொழிபெயர்ப் பில் இவ்வாக்கியம், "இந்தத் தண்ணீர் இப்பொழுது உங்களை இரட்சிக்கிற ஞானஸ்நானத்திற்கு அடையாளமாயிருக்கிறது" என்று மூலமொழிக்கு ஏற்றவிதத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

---

[17] இப்பகுதியின் சர்ச்சைகளை அறிந்துகொள்வதற்கு எனது ***மரணத்தின் மறுபக்கம்*** என்னும் நூலைப் பார்க்கவும்.

[18] சில வேதஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தில் பேதுரு ஆவியின் ஞானஸ்நானத்தைப்பற்றியே குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர். ஆனால் இது தவறாகும். தண்ணீர் ஞானஸ்நானத்தைப்பற்றியே இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (E.D.Hiebert, *The First Epistle of Peter*, p. 247).

[19] J.N.D.Kelly, *The Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, pp. 160-161; E.A.Blum, *1,2 Peter: The Expositor's Bible Commentary Volume 12*, p. 243.

[20] இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வாக்கியம், "எல்லாமாக எட்டுப் பேராகிய சிலரே தண்ணீருக்கூடாகக் காப்பாற்றப்பட்டனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, "நோவாவின் காலத்தில் பாவத்தின்மீதான தேவனுடைய தண்டனையாகவே ஜலப்பிரளயம் இருந்ததினால், ஞானஸ்நானத்தில் தண்ணீர், பாவத்தின் மீதான தேவனுடைய தண்டனைக்கான அடையா ளமாய் இருப்பதாகப் பேதுரு கூறுகின்றார்."[21] மேலும், "ஞானஸ்நானம் தண்ணீருக்குள் மூழ்குவதாக மாத்திரம் இராமல் (அதாவது மரிப்பதாய் மாத்திரம் இராமல்) தண்ணீரிலிருந்து வெளியே வருவதாகவும் இருப்பத னால், இது பாவத்திற்கான தேவ தண்டனையான மரணத்திலிருந்து (ரோ.6:23)[22] தப்புவிக்கப்படுவதையும் உருவகிப்பதாகப் பேதுரு விளக் கியுள்ளார்."[23] அதாவது, "நோவாவின் குடும்பத்தினர் தேவ தண்டனை யான ஜலப்பிரளய அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டதுபோல, இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்புவிக்கப்படுகின்றனர்."[24] இந்த இரட்சிப்புக்கான அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பதாகப் பேதுரு இவ்வசனங்களில் சுட்டிக்காட்டி உள்ளார். பேதுரு இவ்வசனங்களில் சொல்லும் விஷயத்தைப் பவுல் 1கொரிந்தியர் 10:1-2ல் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.[25] இவ்வசனங்க ளில் பின்வருமாறு நாம் வாசிக்கலாம்:

> இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டும் என்றிருக்கிறேனென்றால், நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட் டார்கள் (1கொரி.10:1-2).

இவ்வசனங்களில், இஸ்ரவேல் மக்கள் செங்கடலைக் கடந்து வந்த சம்பவத்தைப் (யாத்.14:21-22) பவுல் ஞானஸ்நானத்துடன் ஒப்பிட்டுப் பேசுகின்றார். இதனால், "இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப் பட்டது அவர்களுடைய இரட்சிப்பாக இருக்கையில், அவர்கள் செங்கட லைக் கடந்துசென்றது அவர்களுடைய ஞானஸ்நானமாக உள்ளது."[26]

---

[21] T.R.Schreiner, *1,2 Peter, Jude: The New American Commentary*, pp. 193-194.
[22] பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை ரோமர் 6:23 அறியத்தருகின்றது.
[23] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 162-163
[24] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism,* p. 69.
[25] P.H.Davids, *1Peter: New International Commentary on the NT*, pp. 143-144.
[26] D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary*, pp. 450-451.

மேலும், தேவனை விசுவாசித்த இஸ்ரவேல் மக்களைக் காப்பாற்றிய செங்கடலின் தண்ணீர், தேவனை விசுவாசியாத எகிப்தியரை அழித்து விட்டது. நோவாவின் கால ஜலப்பிரளயத்தில் தண்ணீர் தேவ தண்டனையாக இருந்ததைப்போலவே, செங்கடல் எகிப்தியருக்குத் தேவ தண்டனையாக இருந்தது. எனினும், எகிப்தியருக்கு அழிவை ஏற்படுத்திய செங்கடல் இஸ்ரவேல் மக்களை இரட்சித்தது. “கிறிஸ்தவ ஞானஸ்நானத்தில், தண்ணீர் பாவத்தின் மீதான தேவனுடைய தண்டனைக்கான அடையாளமாயுள்ளது. ஞானஸ்நானம் பெறுபவன் தண்ணீரிலிருந்து வெளியே வருவது, அவன் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதை உருவகிக்கின்றது. இவ்விதமாக ஞானஸ்நானம் இரட்சிப்புக்கான அடையாளமாய் உள்ளது.”[27]



**இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன்மூலம் கிடைக்கும் இரட்சிப்புக்கான அடையாளமாக ஞானஸ்நானம் உள்ளது**



[27] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 82. இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் கிடைக்கும் இரட்சிப்புக்கான அடையாளமாகவே ஞானஸ்நானம் உள்ளபோதிலும், சில கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானமே மனிதருக்கு இரட்சிப்பை அருள்வதாகக் கருதுகின்றனர். ஆரம்ப காலத்தில் இத்தகைய உபதேசம் குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் கத்தோலிக்க சபை, இதன் மூலம் இரட்சிக்கும் கிருபை மனிதருக்கு அருளப்படுவதாகவும், இதனால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதாகவும் போதிக்கின்றது (M.J.Erickson, *Christian Theology*, p. 1090). கிருபை அருளப்படுவதற்கு ஞானஸ்நானம் பெறுபவனுக்கு விசுவாசம் இருக்கவேண்டும் என்று கூறும் லூத்தரன் சபை, குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதனால், குழந்தைகளுக்கும் உணர்வற்ற நிலையில் விசுவாசம் இருப்பதாகவும், பெற்றோருடைய விசுவாசத்தின் அடிப்படையில் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதாகவும் கூறுகின்றனர் (F.Pieper, *Christian Dogmatics Volume 2*, pp. 448-449; *Volume 3*, p. 285). வேதாகம ஆதாரம் இல்லாத கி.பி 3ம் நூற்றாண்டில் உருவான குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி இந்நூலின் ஆறாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. வேதாகம உபதேசத்தின்படி, மனிதர் ஞானஸ்நானம் பெறுவதினால் அல்ல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனாலேயே இரட்சிப்படைகின்றனர் (ரோமர் 10:9, எபேசியர் 2:8-9 பார்க்கவும்). இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனால் கிடைக்கும் இரட்சிப்புக்கு அடையாளமாயுள்ள ஞானஸ்நானம் மனிதருக்கு அருளும் ஆசீர்வாதங்கள் அடுத்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.



# (2).இயேசுகிறிஸ்துவுடன் இணைவதற்கான அடையாளமாயுள்ளது

இரட்சிப்புக்கு அடையாளமாக இருக்கும் ஞானஸ்நானம், இரட்சிப்பை நமக்கருளும் இயேசுகிறிஸ்துவுடன் நாம் இணைவதற்கான அடையாள மாகவும் உள்ளது. "ஞானஸ்நானம் பெறும்போது இயேசுகிறிஸ்துவு டன், குறிப்பாக அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவற்றுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளதை வெளிப்படையாகக் காண்பிக்கின்றோம்."[28] பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற் றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையி னாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்க ளானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட் டிருப்போம் (ரோ.6:3-5).

இவ்வசனங்களில் "இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனை வரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்" பெற்றிருப்ப தாகக் கூறும் பவுல், "அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நா னத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்" என்பதை அறியத்தருகின்றார். அதேசமயம் ஞானஸ்நானத்தின் மூலம் "அவரு டைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். இதிலிருந்து, நாம் இயேசுகிறிஸ்து

[28] H.C.Thiessen, *Lectures in Systematic Theology*, p. 324.

வின் மரணத்திலும் அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் இணைக்கப் படுவதற்கான அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பது தெளிவாகின் றது. இதனால்தான், ஞானஸ்நானத்தைப் பவுல் இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதைப்பற்றி கொலோ செயர் 2:12ல் பின்வருமாறு பவுல் விளக்கியுள்ளார்:

> ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்க ளாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனு டைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ.2:12).

இயேசுகிறிஸ்துவுடன் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடுகூட உயிர்த்தெழும் அனுபவத்திற்கான அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பதை ரோமர் 6:3-5லும் கொலொசெயர் 2:12லும் பவுல் விளக்கியுள் ளார். கொலொசெயரில் மரணத்தைப்பற்றி குறிப்பிடப்படாதபோதிலும், அடக்கம் என்னும் சொல், மரணத்தை உறுதிப்படுத்தும் குறிப்பாகவே உள்ளது.[29] இரட்சிப்பின் அனுபவமானது, பாவத்தில் மரித்திருக்கும் மனிதனுடைய உயிர்த்தெழுதலாக உள்ளபோதிலும் (எபே.2:1,4), இது இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அடிப்படையாகக்கொண்டு கிறிஸ்தவனுக்கு கிடைக்கும் உன்னத அனுபவமாகவே உள்ளது. அதாவது, மானிட பாவத்திற்கான பலியாக இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததினாலேயே பாவத்தில் மரித்தி ருக்கும் மனிதர் அவரை விசுவாசிப்பதன் மூலம் உயிர்த்தெழக்கூடிய தாயுள்ளது (1கொரி.15:17).[30] உண்மையில், இயேசுகிறிஸ்துவை விசுவா சிப்பதன் மூலம் இரட்சிக்கப்படுபவன், அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் தன்னுடையதாக்கிக்கொள்கின்றான். அதாவது, இயேசுகிறிஸ்து தன்னுடைய பாவத்திற்கான பலியாக மரித்து உயிர்த் தெழுந்தார் என்பதை அறிக்கையிடுபவனாக அவன் இருக்கின்றான். ஞானஸ்நானம் இதை வெளிப்படுத்திக் காண்பிக்கும் அடையாளச் செயலாக உள்ளது. "ஞானஸ்நானத் தண்ணீர் பாவத்தின் மீதான

---

[29] F.F.Bruce, *Colossians, Philemon and Ephesians: The New International Commentary on the New Testament*, p. 105.

[30] "கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" என்று 1கொரி.15:17 கூறுகிறது.

தேவ தண்டனைக்கான அடையாளமாக இருப்பதனால், ஞானஸ்நானத்தில் தண்ணீருக்குள் மூழ்குபவன், தன்னுடைய பாவத்திற்கான தண்டனையை இயேசுகிறிஸ்து பெற்றுக்கொண்டதை அனுபவிக்கின்றான்."[31] அதாவது, அவன் தன்னுடைய பாவத்திற்கான தண்டனையைப் பெற்றவனாக மரணமடைகின்றான்.[32] இதேபோலவே, தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது, பாவத்தின் தண்டனையான மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, புதிய மனிதனாக மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து வருவதைக் காண்பிக்கின்றான். இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனால் இரட்சிக்கப்படுபவன் இவ்விதமாக அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்படுவதை ஞானஸ்நானத்தின் மூலம் காண்பிப்பவனாக இருக்கின்றான்.



## (3).இறைவனுடனான உடன்படிக்கையின் அடையாளமாயுள்ளது

இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்படுவதன் மூலம் நமக்குக் கிடைக்கும் இரட்சிப்புக்கு அடையாளமாக உள்ள ஞானஸ்நானம் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலம் மனிதருடன் செய்த புதிய உடன்படிக்கையின் (மத்.26:28) அடையாளமாகவும் உள்ளது. உடன்படிக்கை என்பது இரு நபர்களுக்கு இடையில் அல்லது இரு குழுக்களுக்கு இடையில் செய்யப்படும் ஒப்பந்தமாகும். இத்தகைய ஒப்பந்தங்களில், உடன்படிக்கை செய்பவரின் வாக்குறுதிகளும், உடன்படிக்கைக்கு உட்படுபவர் செய்யவேண்டிய கடமைகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும். வேதாகம கால உடன்படிக்கைகள் பெரும்பாலும் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர் தாழ்ந்த நிலையில் இருப்பவருடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களாகவே இருந்தன (யோசு.9:6-16). இதனால், ஒப்பந்தத்தில் உயர்ந்தவர் வாக்களிக்கும் ஆசீர்வாதங்களைத் தாழ்ந்தவர் பெற்றுக்கொள்வதற்கு, உயர்ந்தவர் விதிக்கும் அறிவுறுத்தல்களின்படியும் நிபந்தனைகளின்படியும் தாழ்ந்தவர் செயற்பட வேண்டியதாயிருந்தது. வேதாகமத்தில் மனிதர்களுக்கிடையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மாத்திரமல்ல (ஆதி.21:27-30, 31:44-54,

[31] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 82.
[32] L.Morris, *Romans: The Pillar New Testament Commentary*, p. 247.

1சாமு.11:1, 1நாளா.11:3), தேவன் மனிதர்களுடன் செய்த உடன்படிக்கைகளும் உள்ளன. நோவா, ஆபிரகாம், ஆரோன், தாவீது என்பவர்களுடன் தேவன் செய்த உடன்படிக்கைகள் தனிப்பட்ட நபர்களுடனானவை (ஆதி.6:18, 9:9-13, எண்.18:19, 2சாமு.23:5). எனினும், இவற்றில் குறிப்பிட்ட மனிதர்களுடைய வம்சத்தினரும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். தேவன் மனிதர்களுடன் செய்த உடன்படிக்கைகளில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆபிரகாமின் மூலமாகவும் (ஆதி.15) அதன் பின்னர் மோசேயின் மூலமாகவும் (யாத்.24), புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் முக்கியமானவைகளாகும். இவற்றில், மோசேயின் மூலமான உடன்படிக்கை இஸ்ரவேல் மக்களுடனான ஒப்பந்தமாகும். ஆனால், ஆபிரகாம் இயேசுகிறிஸ்து என்போர் மூலமாகச் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் முழு உலகத்தினரையும் உள்ளடக்கிய உன்னத ஒப்பந்தங்களாக உள்ளன.[33]



பழைய உடன்படிக்கைக்கு விருத்தசேதனத்தைப்போல, புதிய உடன்படிக்கைக்கு ஞானஸ்நானம் அடையாளமாக உள்ளது.



தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கைக்கு உட்பட்ட இஸ்ரவேல் மக்களுடன் பிற்காலத்தில் அவர் மோசேயின் மூலமாக இன்னுமொரு உடன்படிக்கை செய்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேல் மக்களுடனான தேவனுடைய சகல நடவடிக்கைகளும் இவ்வுடன்படிக்கைக்கு உட்பட்டதாகவே இருந்தன. மேலும், இந்த உடன்படிக்கைக்கு உட்படும் மக்கள் விருத்தசேதனம் செய்யவேண்டியவர்களாகஇருந்தனர் (யாத்.12:44, 12:48). உண்மையில், விருத்தசேதனம் செய்யப்பட்டவர்களே இவ்வுடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெறக்கூடியவர்களாக இருந்தனர். ஆனால், புதிய ஏற்பாட்டுக்கால கிறிஸ்தவர்களான நாம் இந்த உடன்படிக்கையின்கீழ் இல்லை. ஏனெனில், மோசேயின் காலத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கை

[33] L.Morris, *The Atonement: Its Meaning & Significance*, pp. 14-22.

இயேசுகிறிஸ்து மனிதனாக இவ்வுலகத்திற்கு வரும்வரைக்குமே செல்லுபடியாகக்கூடியதாய் இருந்தது (லூக்.16:16, கலா.3:24-25).[34] அதன் பின்னர், இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவைப் பலியின் மூலம் புதியதோர் உடன்படிக்கையைச் செய்துள்ளார் (லூக்.22:20, 1கொரி. 11:25).[35] தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் (ஆதி.15, 17:4,7) நிறைவேறுதலாகவே இயேசுகிறிஸ்துவின் மூலமான உடன்படிக்கை உள்ளபோதிலும் (லூக்.1:55-56, 1:68-73),[36] அதற்கு அடையாளமாக இருந்த விருத்தசேதனம் இதில் இல்லை. "புதிய ஏற்பாட்டுக் காலத்தில் விருத்தசேதனம் யூத இனத்தின் சிறப்பான அடையாளமாக மாறிவிட்டதனால்,[37] இயேசுகிறிஸ்துவின் உடன்படிக்கைக்கு வேறொரு

---

[34] "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கிவந்தது" (லூக்.16:16) என்பதை வேதாகமம் அறியத்தருகின்றது.

[35] இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களோடு பங்கேற்ற இறுதிப் பந்தியில் அவர் திராட்சைரசப் பழரசப் பாத்திரத்தை எடுத்து "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" (லூக்.22:20, 1கொரி.11:25) என்று கூறினார்.

[36] R.C.Sproul, *Truths We Confess*, p. 111. இயேசுகிறிஸ்துவின் பிறப்பைப்பற்றி அவருடைய தாய் மரியாளும், இயேசுகிறிஸ்துவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட யோவான் ஸ்நானகனின் தகப்பன் சகரியாவும் பரித்த ஆவியினால் நிரப்பப்பட்டு இயேசுகிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கையில் குறிப்பிட்டவைகள், தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையின் நிறைவேறுதலாகவே இயேசுகிறிஸ்துவின் பிறப்பு இருப்பதை அறியத்தருகின்றது. தேவனை மகிமைப்படுத்தும் மரியாளும், "நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்" என்று குறிப்பிட்டுள்ளாள் (லூக்.1:55-56). இதைப்போலவே, சகரியா தீர்க்கதரிசனம் உரைக்கும்போது, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும், தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி: உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று, அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும், ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே, தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்" என்று குறிப்பிட்டுள்ளார் (லூக்.1:67-75).

[37] பழைய ஏற்பாட்டுக் காலத்தில், இஸ்ரவேல் மக்கள், தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்ட அவருடைய ஜனங்கள் என்பதற்கான அடையாள

அடையாளம் அவசியப்பட்டது. இதனால், அதுவரைகாலமும் உடன்ப டிக்கைக்கு அடையாளமாக இருந்த விருத்தசேதனத்துக்குப் பதிலாகப் புதியதோர் அடையாளமாக ஞானஸ்நானம் அறிமுகப்படுத்தப்பட்டது."[38] மேலும், "இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்தின் மூலம் செய்த உடன்படிக்கை புதியதாய் இருந்ததினாலும் இதற்குப் புதிய தோர் அடையாளம் அவசியப்பட்டது. இதனால்தான் ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசுகிறிஸ்து கட்டளையிட்டுள்ளார்."[39] உண்மையில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய உடன்படிக்கைக்கு விருத்தசேதனம் அடையாளமாக இருந்ததைப்போல புதிய ஏற்பாட்டு உடன்படிக்கைக்கு ஞானஸ்நானம் அடையாளமாக உள்ளது. இதைப் பற்றி கொலொசெயர் 2:11-12ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத் துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்க ளாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனு டைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ.2:11-12).

இவ்விரு வசனங்களும் ஞானஸ்நானத்தைப்பற்றிய மிகவும் முக்கிய மான வேதப் பகுதியாக இருப்பதோடு, ஞானஸ்நானத்தை விருத்தசேத னத்துடன் தொடர்புபடுத்தும் புதிய ஏற்பாட்டுக் குறிப்பாகவும் உள்ளது.

---

மாகவே விருத்தசேதனம் இருந்தது. ஆனால், இரு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தின் பின்னர், யூதர்கள் விருத்தசேதனத்தைத் தங்களுடைய இனத்தைக் குறிக்கும் தேசிய அடையாளமாகக் கருதினார்கள் (J.D.G.Dunn, *Colossians and Philemon: The New International Greek Testament Commentary*, p. 154). வேறு இனத்தவரோடு தாங்கள் கலந்துவிடாமல் இருப்பதற்காகவே தேவன் தங்களுக்கு விருத்தசேதனக் கட்டளையைக் கொடுத்துள்ளதாக முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் குறிப்பிட் டுள்ளார் (F.Josephus, *Antiquities of the Jews*. 1:192).

38 O.Cullmann, *Baptism in the New Testament*, pp. 56-57; R.C.H.Lenski, *The Interpretation of St.Paul's Epistles to the Colossians... and to Philemon*, p. 105; T.K.A.Abbott, *Colossians: International Critical Commentary*, p. 250; E.Lohse, *Colossians and Philemon*, pp. 102-103; P.Pokorny, *Colossians: A Commentary*, p. pp. 124-125; M.MacDonald, *Colossians: Sacra Pagina*, pp. 99-100.

39 R.C.Sproul, *Truths We Confess*, p. 111.

எனினும், "இயேசுகிறிஸ்து அருளும் இரட்சிப்புக்கு அடையாளமாயுள்ள கிறிஸ்தவ ஞானஸ்நானம் ஆவிக்குரிய விருத்தசேதனமாகவே உள் ளது."[40] இதனால், இவ்வேதப் பகுதியில், 11ம் வசனத்திற்கான விளக்கமாகவே 12ம் வசனம் உள்ளது.[41] அதாவது, 11ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத் துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து, கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெறுதல்" என்பது இரட்சிப்பைப்பற்றிய குறிப்பாக உள்ளது.[42] ஏனெனில், புதிய ஏற்பாட்டில் சரீரத்தில் விருத்த சேதனம் செய்தவர்கள் அல்ல,[43] இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பலியின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்களே விருத்தசேதனமுள்ளவர்களாக இருக்கின்றனர் (பிலி.3:3, ரோ.2:28-29).[44] இதனால்தான், விருத்தசேதனம் "மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைவதாகவும்" "கையால் செய்யப்படாததாகவும்" இருப்பதாகப் 11ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது.[45] மேலும், இவ்வசனத்தில் "கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனம்" என்னும் சொற்பிரயோகம் மூலமொழியின்படி, "கிறிஸ்துவினால் செய்யப் படும் விருத்தசேதனம்" ஆகும்.[46] அதாவது, இரட்சிப்பின்போது பாவ

---

[40] G.H.P.Thompson, *Ephesians, Colossians and Philemon: The Cambridge Bible Commentary*, p. 145; F.F.Bruce, *Colossians: The New International Commentary on the New Testament*, p. 103.

[41] A.G.Patzia, *Ephesians, Colossian, Philemon: New International Biblical Commentary*, p.56.

[42] D.J.Moo, *Colossians and Philemon: The Pillar New Testament Commentary*, p. 198; M.J.Harris, *Colossians and Philemon: Exegetical Guide to the Greek New Testament*, p. pp. 102-103.

[43] விருத்தசேதனம் என்பது, ஆண் உறுப்பின் நுனித்தோலை வெட்டும் செயலாகும்.

[44] W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2003; J.MacArthur, *The MacArthur Bible Commentary*, p. 1738.

[45] R.W.Wall, *Colossians: The IVP New Testament Commentary*, p. 114.

[46] R.C.H.Lenski, *The Interpretation of St.Paul's Epistles to the Colossians and to Philemon*, p. 105. ஆங்கிலத்தில் NIV, TNIV போன்ற மொழிபெயர்ப்புகளில் the circumcision done by Christ, அதாவது, "கிறிஸ்துவினால் செய்யப்படும் விருத்தசேதனம்" என்று உள்ளது. ஆனால் சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதைக் "கிறிஸ்துவின் விருத்தசேதனம்" என்றே மொழிபெயர்க்கவேண்டும் என்று கூறுகின்றனர். இதனால், KJV, NKJV, NASV, NRSV போன்ற ஆங்கில வேதாகமங்களில் இச்சொற்பிரயோகம் the circumcision of Christ என்று மொழிபெ யர்க்கப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பை ஆதரிப்பவர்களில் சிலர் கிறிஸ்துவின் விருத்தசேதனத்தை அவர் குழந்தையாயிருந்தபோது அவருக்குச் செய்யப்பட்ட விருத்தசேதனமாக விளக்குகையில், ஏனையவர்கள் இதை இயேசுகிறிஸ்து

மாம்சம் களையப்பட்டு, கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைக் கிறிஸ்துவின் மூலம் நாம் பெறுகின்றோம்.[47] இந்த இரட்சிப்பின் அனுபவத்தைச் சித்தரிக்கும் ஒரு அடையாளச் செயலாகவே ஞானஸ் நானம் இருப்பதனால், "பாவ மாம்சம் களையப்பட்டு, கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைப் பெறும்" அனுபவமானது, 12ம் வசனத்தில் "ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுவ தாகவும், அவரோடேகூட எழுந்திருப்பதாகவும்" விளக்கப்பட்டுள்ளது.[48] கி.பி.முதலாம் நூற்றாண்டில், இரட்சிக்கப்படுவதற்கு மோசேயின் நியா யப்பிரமாணத்தின்படி விருத்தசேதனம் செய்யவேண்டும் என்று வேதப் புரட்டர்கள் போதித்து வந்தனர் (அப்.15:1). ஆனால் இது அவசியமற்றது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஞானஸ் நானமே உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனமாக இருப்பதைப் பவுல் இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவனுடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு, அவ்வுடன்படிக்கைக்கு உட்பட்டவர்க ளாக விருத்தசேதனம் பெறவேண்டியதாயிருந்ததுபோல, புதிய ஏற்பாட் டுக் காலத்தில் தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலம் செய்துள்ள உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு நாம் இவ்வுடன் படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானத்தைப் பெறவேண்டும்.



வின் சிலுவை மரணமாகக் கருதுகின்றனர் (J.D.G.Dunn, *Colossians: The New International Greek Testament Commentary*, pp. 157-158; D.E.Garland, *Colossians/Philemon: The NIV Application Commentary*, p. 148). ஆனால் இவ்வ சனங்கள் இயேசுகிறிஸ்துவுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி கூறவில்லை. கிறிஸ்தவர்களுக்கு என்ன நடந்துள்ளது என்பதையே அறியத்தருகின்றன.

47 C.Vaughan, *Colossians: The Expositor's Bible Commentary Volume 11*, p. 200.


48 A.G.Patzia, *Colossian: New International Biblical Commentary*, pp. 55-56.



## ஐந்தாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாக உள்ளபோதிலும், நாம் ஞானஸ்நானம் பெறும் போது சில ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவதாகவும் வேதாகமம் கூறுகிறது. முதலாவதாக, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் பெற்றுக்கொண்ட இரட்சிப்புக்கான அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பதனால், நாம் ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகின்றோம். இரண்டாவதாக, பரிசுத்தஆவியானவரின் சிறப்பான அபிஷேகத்தைப் பெறுகின்றோம். மூன்றாவதாக, இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினராகின்றோம். ஞானஸ்நானத்தில் அருளப்படும் இம்மூன்று ஆசீர்வாதங்களும் ஐந்தாம் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## ஐந்தாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்தின் ஆசீர்வாதம்

### ஞானஸ்நானத்தில் நாம் எவற்றைப் பெற்றுக்கொள்கின்றோம்?

ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாக இருப்பதனால், அதாவது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய அனுபவங்களை அடையாளப்படுத்தும் ஒரு சடங்காசார செயலாக இருப்பதனால், ஞானஸ்நானம் பெறுவதனால் நாம் எவ்வித ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வது இல்லை என்று சிலர் கருதுகின்றனர். அதாவது, ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாக மாத்திரமே இருக்கின்றது என்பதே இவர்களின் எண்ணமாய் உள்ளது. ஆனால், ஞானஸ்நானம் ஒரு அடையாளச் செயலாகவே உள்ளபோதிலும், இதில் நமக்கு சில ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் அருளப்படுகின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. வேதாகமத்தில்

சித்தரிக்கப்பட்டுள்ள ஞானஸ்நானங்களில் இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானம் இவ்வாசீர்வாதங்களை சிறப்பான விதத்தில் அறியத்தரு கின்றது.[1] இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானம் நமக்கான மாதிரியாக இருப்பதனால் (1பேது.2:21),[2] அவருடைய ஞானஸ்நான அனுபவம் நம்முடைய ஞானஸ்நான அனுபவத்திற்கான மாதிரியாகவே உள்ளது. இதனால், அவர் ஞானஸ்நானம் பெற்றபோது அவருக்கு கிடைத்த ஆசீர்வாதங்கள் நம்முடைய ஞானஸ்நானத்தின்போது நமக்கும் கிடைக்கின்றன. இவ்வாசீர்வாதங்கள் எத்தகையவை என்பதை இவ்வத் தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## (1). இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகின்றோம்

ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் முதலாவது ஆசீர்வாதம், இரட்சிப்பின் நிச்சயமாகும். அதாவது, நாம் உண்மையி லேயே இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்னும் நிச்சயம் ஞானஸ்நானத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்றது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதே நாம் இரட்சிப்படைவதற்கான ஒரேயொரு வழியாக இருப்பதும் (அப்.16: 30-31, ரோ.10:9, எபே.2:8),[3] ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் எவரும் இரட்சிக்கப்படுவதில்லை என்பதும் உண்மை என்றாலும்,[4] இயேசுகிறிஸ்

---

[1] மத்தேயு 3:13-17, மாற்கு 1:9-11, லூக்கா 3:21-22ல் இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவான் 1:32-34ல் இயேசு கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானகன் தன்னுடைய அனுபவத்தைத் தெரிவித்துள்ளார்.

[2] "கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுக ளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்பதை 1பேதுரு 2:21 அறியத்தருகின்றது.

[3] "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித் தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோ.10:9) என்றும் "கர்த்தராகிய இயேசுகிறிஸ் துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்றும் கூறும் வேதாகமம் (அப்.16:30-31), "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே.2:8) என்பதை அறியத்தருகிறது.

[4] ஞானஸ்நானம் இரட்சிப்புக்கான அடையாளமாகவே உள்ளது. இது பற்றிய விளக்கத்திற்கு 71 முதல் 77 வரையிலான பக்கங்களைப் பார்க்கவும்.

துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்புக்கான அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பதனால், ஞானஸ்நானம் பெறும் போது நாம் உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்னும் நிச்சயம் நமக்கு ஏற்படுகின்றது. இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது "வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி: நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (லூக்.3:22, மாற்.1:11, மத்.3:17). இதன் மூலம், இயேசுகிறிஸ்து தம்முடைய நேசகுமாரன் என்பதையும், தம்முடைய பிரியம் அவர்மீது இருக்கின்றது என்பதையும் பிதாவாகிய தேவன் உறுதிப்படுத்தினார்.[5] உண்மையில், இயேசுகிறிஸ்துவின் மீதான தேவனுடைய அன்பின் வெளிப்பாடாகவே அவருடைய வார்த்தைகள் உள்ளன.[6] இதேவிதமாகவே நாம் ஞானஸ்நானம் பெறும்போதும், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதையும் அவர் நம்மை நேசிக்கின்றார் என்பதையும் தேவன் நமக்கு உறுதிப்படுத்துகின்றார்.

இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது தேவன் அவரோடு பேசியது போலவே, நம்மில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் (1கொரி.6:19, 2கொரி.1:22, எபே.1:13, கலா.4:6),[7] நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை நமக்கு உறுதிப்படுத்துவதோடு, தேவனுடைய அன்பை நம் உள்ளங்களில் ஊற்றுகிறார். "நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோ.8:16) என்பதை அறியத்தரும் பவுல், "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது"' (ரோ.5:5)

[5] J.R.Edwards, *Mark: The Pillar New Testament Commentary*, p. 39.

[6] M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 143.

[7] "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1கொரி. 3:16) என்றும், "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1கொரி.6:19) என்றும் கேட்கும் வேதாகமம், "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" (எபே.1:13) என்பதையும் "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (2கொரி.1:22) என்பதையும் அறியத்தருகிறது.

என்று கூறுகிறார். நாம் ஞானஸ்நானம் பெறும்போது தேவனுடைய அன்பும், நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை அறியத்தரும் பரிசுத்த ஆவியானவரின் சாட்சியும் சிறப்பான விதத்தில் நமக்கு கிடைக்கின்றது. உண்மையில், நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது தேவனுடைய பிள்ளைகளாகின்றோம் (யோவா.1:12, கலா.3:26).[8] இதுவே நம்முடைய இரட்சிப்பின் அனுபவமாயுள்ளது. ஞானஸ்நானம் இவ்வனுபவத்தின் அடையாளமாய் இருப்பதனால், ஞானஸ்நானம் பெறும்போது, நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாய் இருக்கின்றோம் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்தில் உறுதிப்படுத்துகின்றார். இதைப்பற்றி யோவான் எழுதும்போது, "அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.3:24) என்றும், "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" (1யோவா. 4:13) என்றும் குறிப்பிட்டுள்ளார். உண்மையில், "இயேசுகிறிஸ்துவின் மூலம் தேவன் அருளும் புதிய வாழ்வு தனக்குக் கிடைத்துள்ளது என்னும் நிச்சயம் ஞானஸ்நானம் பெறுபவனுக்கு கிடைக்கின்றது."[9] ஞானஸ்நானம் பெறாவிட்டால் இத்தகைய நிச்சயம் நமக்கு இருக்காது.



## (2). பரிசுத்தஆவியின் நிறைவைப் பெறுகின்றோம்

ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளும் நாம், பரிசுத்த ஆவியானவரின் நிறைவையும் பெறுகின்றோம். இதனால்தான் இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறியவுடனே, பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்தார் (மத். 3:16). இதைப்போலவே நமக்கும் ஞானஸ்நானமானது பரிசுத்த ஆவியா

---

[8] "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவா.1:12) என்று கூறும் வேதாகமம், நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா.3:26) என்பதை அறியத்தருகின்றது.

[9] J.I.Packer, *Concise Theology*, p. 212.

னவர் நம்முடன் சிறப்பான விதத்தில் இடைபடும் உன்னதமான அனுபவமாயுள்ளது. எனினும், ஞானஸ்நானம் பெறும்போதுதான் நாம் முதற் தடவையாகப் பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றோம் என்று எண்ணுவது தவறாகும். ஏனெனில், நாம் இயேசுகிறிஸ்துவை விசுவா சித்துத் தேவனுடைய பிள்ளைகளாகும் போதே (யோவா.1:12) பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்கின்றோம் (எபே.1:13, 2கொரி.1:22).[11] இயேசுகிறிஸ்துவினுடைய வாழ்விலும், ஞானஸ்நானத்திற்கும் முன்பே பரிசுத்தஆவியானவர் அவரோடு இருந்தார். உண்மையில், "மரியாளின் வயிற்றில் கருத்தரித்தது முதல் (மத்.1:18, 1:20, லூக்.1:35) பரிசுத்த ஆவியானவர் அவரில் இருந்தார். ஆனால் அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, ஊழியப்பணியைச் செய்வதற்கான வல்லமையைப் பரிசுத்த ஆவியானவர் அவருக்கு அருளினார்."[12] இது ஏசாயா 11:1-2 42:1, 61:1 என்பவற்றின் நிறைவேறுதலாகவும்,[13] அதாவது இயேசு கிறிஸ்துவின் ஊழியப்பணிக்கான ஆவியின் அபிஷேகமாகவும்,[14] இவரே தேவனால் அனுப்பப்பட்டுள்ள மேசியா என்பதை உறுதிப்படுத் தும் அடையாளமாகவும் (யோவா.1:33-34)[15] இருந்தது.[16] இதைப்போ லவே, கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பத்திலேயே பரிசுத்த ஆவியானவ ரைப் பெற்றுக்கொள்ளும் நாம் (எபே.1:13) ஞானஸ்நானம் பெறும்போது,

---

[11] "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" (எபே.1:13) என்பதையும், "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தை யும் கொடுத்திருக்கிறார்" (2கொரி.1:22) என்பதையும் அறியத்தருகிறது.

[12] R.C.Sproul, *A Walk with God: An Exposition of Luke's Gospel*, pp. 58-59.

[13] D.A.Carson, *Matthew: The Expository Bible Commentary Volume 8*, p. 110. மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்களில் "கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்" (ஏசா.11:2) என்றும், "என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்" (ஏசா.42:1) "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்" (ஏசா.61:1) என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[14] R.T.France, *Matthew: The New International Commentary on the NT*, p. 121.

[15] இயேசுகிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைப்பற்றி யோவான் ஸ்நானகன் கூறும்போது "நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகி றேன் என்றான்" (யோவா.1:33-34).

[16] M.J.Wilkins, *Matthew: The NIV Application Commentary*, p. 142.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தி லும், கிறிஸ்தவ வாழ்வுக்கு அவசியமான வரங்களையும் வல்லமை யையும் அளிக்கும் விதத்திலும் பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிக்கின்றார்.

தற்காலத்தில், ஒருவன் எப்பொழுது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொள்கிறான் என்பதில் கிறிஸ்தவர்கள் மத்தியில் கருத்து முரண்பாடு கள் உள்ளன. சிலர் இரட்சிப்பின் பின்பான இரண்டாவது ஆசீர்வாதமாக இதைக் கருதுகின்றனர். அதாவது, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பத னால் இரட்சிக்கப்படும் மனிதர்கள், அதன்பின்னர் உபவாசத்திலும் ஜெபத்திலும் காத்திருந்து பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர். அப்போஸ்தலர் 2ம் 8ம் 9ம் அதிகாரங்கள் இதற்கு ஆதாரமாக சுட்டிக்காட்டப்படுவது வழக் கம்.[17] ஆனால், பெந்தெகொஸ்தே நாளிலேயே முதற்தடவையாகக் கிறிஸ்தவர்களுக்குப் பரிசுத்தஆவியானவர் அருளப்பட்டதினாலேயே அந்நாள் வரும்வரை இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியான வரைப் பெற்றுக்கொள்வதற்குக் காத்திருக்கவேண்டியவர்களாய் இருந்த னர் (லூக்.24:49, அப்.1:4-5).[18] யோவான் 7:38-39 அறியத்தருவதுபோல,

---

[17] G.P.Duffield & N.M.Van Cleave, *Foundations of Pentecostal Theology*, pp. 305-306; R.M.Riggs, *The Spirit Himself*, p. 110; C.T.Wood, *The Life, Letters and Religion of St.Paul*, pp. 17-22; J.Knox, *Chapters in a Life of* Paul, p. 61; E.M.Blaiklock, *The Acts of the Apostles*, p. 87.

[18] இதனால்தான் இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குச் செல்வதற்கு முன்பு தம்முடைய சீஷர்களிடம் "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்று லூக்கா 24:49லும், "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று" அப்போஸ்தலர் 1:4-5லும் கட்டளையிட்டார். சில கிறிஸ்தவர்கள் யோவான் 20:22ஐ ஆதாரமாகக்கொண்டு, பெந்தெகொஸ்தே நாளுக்கும் முன்பே சீஷர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றார்கள் என்று கருதுகின்றனர். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து "அவர்கள்மீது ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோவா.20:22) என்று கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மூலமொழியில் இவ்வசனத்தில் "அவர்கள்மீது" என்னும் சொல் இல்லை. "ஊதி" என்று மட்டுமே உள்ளது. மேலும், ஊதி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் மூலமொழியில் "சுவாசித்தல்" என்னும் அர்த்தமுடையதாகவே உள்ளது. எனவே, இதற்கு

இயேசுகிறிஸ்து மகிமையடைந்த பின்பே, அதாவது அவர் உயிர்த்தெ ழுந்து பரலோகத்திற்குச் சென்ற பின்பே அவரைப் பின்பற்றியவர்களுக் குப் பரிசுத்தஆவியானவர் அருளப்பட்டார். இதனால்தான், அதுவரைக் கும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு மனிதர்கள் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. ஆனால், பெந்தெகொஸ்தே நாளில் இரட்சிக்கப்பட்ட 3000 பேரும் பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருக் கவில்லை. அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ற தினமே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றனர்.[19] அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று மாத்திரமே அப்போஸ்தலர் 2:41ல் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2:38) என்னும் பேதுருவின் அறிவுறுத்தலின்படி அவர்கள் ஞானஸ்நானம் பெற்றதினால், அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது பாவமன்னிப்பை யும் பரிசுத்த ஆவியையும் பெற்றவர்களாகவே இருந்தனர்.[20] அப்போஸ் தலர் 10ம் அதிகாரத்திலும், கொர்நேலியு என்பவனுடைய வீட்டில் கூடியவர்கள் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றனர் (அப்.10:44).[21] இதைப்போ லவே, அப்போஸ்தலருடைய நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கிறிஸ்தவர்களும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட போதே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டனர். இதனால்தான், பவுல் எபேசு பட்டணத்தில் சந்தித்த மக்களிடம் "நீங்கள் விசுவாசிகளா னபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா" (அப்.19:1-2) என்று கேட்டார். அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டபோதே

---

முன் உள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கூறியபின்னர் சற்று நிறுத்தி ஒரு பெருமூச்சுவிட்டவராகப் "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங் கள்" என்று இயேசுகிறிஸ்து தம் சீஷர்களுக்கு கட்டளையிட்டுள்ளார் (D. A.Carson, *John: The Pillar New Testament Commentary*, pp. 651-652). எனவே, இதுவும் லூக்கா 24:49, அப்போஸ்தலர் 1:4-5ஐப் போல பரிசுத்த ஆவியானவ ரைப் பெற்றுக்கொள்ளும்படியான கட்டளையாகவே உள்ளது (A.J. Kostenberger, *John: Baker Exegetical Commentary on the NT*, p. 574).

[19] J.R.W.Stott, *Baptism and Fulness: Work of the Holy Spirit Today*, pp. 37-38.

[20] J.R.W.Stott, *The Message of Acts: The Ends of the Earth,* p. 79.

[21] அப்போஸ்தலர் 10:44ல், "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக் கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனேயே பவுல் அவர்களிடம் இவ்விதமாகக் கேட்டுள்ளார்.[22] "பரிசுத்த ஆவியானவர் இல்லாத நிலையில் கிறிஸ்தவர்களாக இருந்தவர்களைப் பற்றி நாம் புதிய ஏற்பாட்டில் வாசிப்பதில்லை" (ரோ.8:9, 1கொரி.12:13).[23] வேதாகமச் சத்தியத்தின்படி, "கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பமே பரிசுத்த ஆவியானவரைப் பெறும் அனுபவமாக உள்ளது."[24]

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள சம்பவங்களில் மனிதர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப் படும்போதே பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டுள்ளபோதிலும்,

---

[22] அப்போஸ்தலர் 19:1ல் பவுல் எபேசுவில் சந்தித்தவர்கள் "சீஷர்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதினால் இவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டும் பரிசுத்த ஆவியானவரைப் பெறாதவர்களாக இருந்தவர்கள் என்று சிலர் கருதுகின்றனர் (E.C.Miller, *Pentecost Examined,* p. 51; H.G.Hathaway, *A Sound from Heaven*, p. 32). ஆனால், இவர்கள் யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ் நானத்தைப் பெற்றவர்களாகவும், பரிசுத்த ஆவியானவரைப் பற்றியே கேள்விப் படாதவர்களாகவும் இருந்ததினால் இவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று எவ்விதத்திலும் கூறமுடியாது. இதனால்தான், பவுல் இவர்களுக்கு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டியதைப்பற்றி அறிவித்து ஞானஸ்நானம் கொடுத்தார் (அப்.19:2-5). இவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ் நானம் பெற்றபோதே பரிசுத்தஆவியைப் பெற்றனர். இதனால், இவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டும் பரிசுத்த ஆவியானவரைப் பெறாதவர்களாக இருந்தார்கள் என்று கூறமுடியாது (J.D.G.Dunn, *Baptism in the Holy Spirit*, pp. 88; M.Green, *I Believe in the Holy Spirit*, pp. 174-176; B.Witherington, *Acts of the Apostles: A Socio-Rhetorical Commentary*, p. 570).

[23] I.H.Marshall, *Acts, Tyndale New Testament Commentary*, pp. 305-306. "கிறிஸ் துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோ.8:9) என்று கூறும் வேதாகமம், "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும்" (1கொரி.12:3) சுட்டிக்காட்டுகிறது. 1கொரிந் தியர் 12:3ல் "சொல்லக்கூடாது" என்பது "சொல்லமுடியாது" என்னும் அர்த்தத்திலேயே மூலமொழியில் உள்ளது. இதனால்தான், மோனஹன் என்பவர் மொழிபெயர்த்த தமிழ் வேதாகமத்தில் இவ்வசனம் "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசு ஆண்டவர் என்று ஒருவனும் சொல்லமுடியாதெ னவும் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்" என்றும், பரிசுத்த பைபிளில், "பரிசுத்த ஆவியானவரின் உதவியின்றி ஒருவனும் இயேசுவே கர்த்தர் என்பதைக் கூறமுடியாது" என்றும், புதிய இலகு தமிழ் மொழிபெயர்ப்பில் "பரிசுத்த ஆவியானவரால் மட்டுமன்றி எவனும் இயேசுவே கர்த்தர் என்று அறிக்கை செய்யவும் மாட்டான்" என்றும், திருவிவிலியத்தில் "தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் இயேசுவே ஆண்டவர் என சொல்ல முடியாதே" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[24] J.D.G.Dunn, *Baptism in the Holy Spirit*, pp. 4-5.

8ம் அதிகாரத்தில் சமாரியாவில் இரட்சிக்கப்பட்டவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றிருந்த போதிலும், பேதுருவும் யோவானும் அவர்கள்மீது கைகளை வைத்து ஜெபிக்கும் வரை பரிசுத்த ஆவியானவரைப் பெறாதவர்களாகவே இருந்தனர் (அப்.8:12-17). இவர்களைப் பொறுத்தவரையில் இரட்சிக்கப்படுவதும் ஆவியானவரைப் பெறுவதும் கால இடைவெளியுள்ள இரண்டு அனுபவங்களாகவே உள்ளன. எனினும் இதற்கு சரித்திர ரீதியான காரணங்கள் உள்ளன. இதை அறியாத நிலையில், இரட்சிப்பும் ஆவியானவர் அருளப்படுவதும் கால இடைவெளியுள்ள அனுபவங்கள் என்று கருதுவது தவறாகும்.[25] யூதருக்கும் சமாரியருக்கும் இடையில் நீண்டகாலமாக எவ்விதத் தொடர்புகளும் இராததினால் (யோவா.4:9), எருசலேம் சபையின் தொடர்பற்ற நிலையில் சமாரியர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தால், அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறியதற்குப் பின்பும் அவர்களுக்கும் யூதக்கிறிஸ்தவர்களுக்கும் இடையிலிருந்த பிரிவு தொடர்ந்தும் இருந்திருக்கும். இது, ஆரம்பத்திலேயே கிறிஸ்தவத்தில் இணைக்கப்பட முடியாத பெரியதோர் பிளவு காணப்படும் விதத்தில் இரண்டு வித்தியாசமான சபைகள் உருவாகுவதற்குக் காரணமாய் இருந்திருக்கும். இத்தகைய ஒரு நிலைமை தோன்றாதிருப்பதற்காகவே, எருசலேமிலிருந்து பேதுருவும் யோவானும் வரும்வரைக்கும் சமாரியர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படாதிருந்தார்.[26] மேலும்,

---


[25] கத்தோலிக்க மற்றும் பெந்தெகொஸ்தே சபைகள் இச்சம்பவத்தை, இரட்சிப்பையும் பரிசுத்த ஆவியானவரையும் பற்றிய தங்களுடைய உபதேசத்துக்கு ஆதாரமாக உபயோகிக்கின்றன. கத்தோலிக்க சபையைப் பொறுத்தவரை, சமாரியர்களின் ஞானஸ்நானம் குழந்தை ஞானஸ்நானத்திற்கும், பேதுருவும் யோவானும் சமாரிய விசுவாசிகள்மீது தங்கள் கைகளை வைத்து ஜெபித்த போது பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டது உறுதிப்படுத்தும் பூசைக்கும் வேதஆதாரமாக உள்ளது (G.D.Smith, *The Teaching of the Catholic Church*, p. 816; L.Ott, *Fundamentals of Catholic Dogmas*, p. 362; B.Neunheuser, *Baptism and Confirmation*, p. 19; P.T.Camelot, *New Catholic Encyclopedia Volume IV*, pp. 145, 148). பெந்தெகொஸ்தே சபையினர், இச்சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு, இரட்சிப்பின் பின்பான இரண்டாவது ஆசீர்வாதமாகவே விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதாகக் கருதுகின்றனர் (M.Pearlman, *Knowing the Doctrines of the Bible*, p. 313; R.M.Riggs, *The Spirit Himself*, p. 52; H.M.Ervin, *These are not Drunken as ye Suppose*, pp. 91-94).

[26] G.W.H.Lampe, *The Seal of the Spirit*, pp. 70-72; M.Green, *I Believe in the Holy Spirit*, p. 179; R.E.O.White, *The Biblical Doctrine of Initiation*, 198; A.Richardson, *Introduction to the Theology of the NT*, p. 356; G.B.Caird, *The Apostolic Age*, pp. 71-72; D.Hill, *Greek Words and Hebrew Meanings*, p. 264.

இதைப்போலவே அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவமும் வித்தியா சமானது. இதனால் இவருடைய அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு இரட்சிப்பும் ஆவியானவரைப் பெறுவதும் கால இடைவெளியுள்ள அனுபவங்கள் என்று கூறமுடியாது. உண்மையில், பவுலினுடைய இரட்சிப்பின் அனுபவம் தனித்துவமானது. ஏனெனில் இவரைப்போல எவரும் இதுவரையில் இரட்சிக்கப்பட்டதில்லை. அதாவது, சுற்றிப் பிரகாசித்த ஒளியினால் கண்கள் பாதிக்கப்பட்டு குருடாகியதும், அதனைத்தொடாந்து மூன்று நாட்கள் உணவின்றி ஜெபித்ததும் (அப்.9:3-11), பின்னா் மீன் செதிள்கள் போன்றவை கண்களிலிருந்து விழுந்து பார்வையடைந்து ஞானஸ்நானம் பெற்றதும் (அப்.9:17-18) அவருடைய வாழ்வில் மாத்திரமே சம்பவித்த வித்தியாசமான காரியங்களாக உள்ளன.[27] எனினும், பவுல் இயேசுகிறிஸ்துவைத் தமஸ்கு வீதியில் சந்தித்த நாளில் அல்ல, ஞானஸ்நானம் பெற்றபோதே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பையும் பரிசுத்த ஆவியையும் பெற்றார். இடையிலுள்ள மூன்று நாட்களும் இயேசுகிறிஸ்துவை நேரடியாகச் சந்தித்ததினால் ஏற்பட்ட பாதிப்பிலும், தன்னுடைய மார்க்க பக்தியைப்பற்றிய சிந்தனையிலும், ஜெபத்திலும் அவர் செலவழித்த காலமாயுள்ளது.[28] இதனால், ஏனைய கிறிஸ்தவர்களைப் போலவே பவுலுக்கும் இரட்சிப்பும் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதும் கால இடைவெளியுள்ள இரண்டு அனுபவங்களாக இருக்கவில்லை.



கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பத்தில்
ஆவியானவரைப் பெறும் நாம்,
ஞானஸ்நானத்தின்போது சிறப்பான
அபிஷேகத்தைப் பெறுகின்றோம்.



அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற சம்பவங்களில் இயேசுகிறிஸ்துவினுடைய சீஷர்களினதும் சமாரிய கிறிஸ்தவர்களினதும் அனுபவங்கள் மாத்திரமே வித்தியாசமானதாக உள்ளது. இதற்கு சரித்திரரீதியான

[27] J.R.W.Stott, *The Message of Acts: The Ends of the Earth,* pp. 165-166.
[28] J.B.Polhill, *Acts: The New American Commentary*, p. 217; G.C.Morgan, *The Spirit of God*, p. 175.

காரணங்கள் இருப்பதனால், இவற்றை ஆதாரமாகக்கொண்டு இரட்சிப்பும் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதலும் கால இடைவெளியுள்ள அனுபவங்கள் என்று கருதுவது தவறாகும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்படையும்போதே மனிதர் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்கின்றனர் என்றே வேதாகமம் கூறுகிறது. இதனால்தான் "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளான போது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" என்று எபேசியர் 1:13ல் பவுல் குறிப்பிட்டுள்ளார். ஒருவன் "விசுவாசியாகும்போதே" அதாவது இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படும்போதே பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றான் என்பதையே இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது.[29] எனினும் இவ்வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் முத்திரைபோடுவதாகப் பவுல் கூறுவதனால், இரட்சிப்பின்போது அவர் விசுவாசிக்கு முத்திரை மாத்திரமே போடுகிறார் என்றும், அச்சந்தர்ப்பத்தில் அவர் விசுவாசிக்குள் வருவதில்லை என்றும் சிலர் கருதுகின்றனர். ஆனால், இந்நிருபத்தின் 4ம் அதிகாரம் 30ம் வசனத்தில் "நாம் பரிசுத்த ஆவியானவரையே முத்திரையாகப் பெற்றுள்ளதாகப்" பவுல் குறிப்பிட்டுள்ளதினால், இரட்சிக்கப்படும்போதே பரிசுத்த ஆவியானவர் முத்திரையாக நமக்குள் வருகின்றார் என்பதை அறிந்து கொள்கின்றோம். 2கொரிந்தியர் 1:22ல் பவுல் இதைப்பற்றி எழுதும்போது, "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" என்று குறிப்பிட்டுள்ளார். உண்மையில், "நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்படையும்போது பரிசுத்த ஆவியானவரை அருளும் தேவன், நாம் அவருடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் பரிசுத்த ஆவியானவரையே முத்திரையாகத் தருகின்றார்."[30]

இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்படையும்போதே நமக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவது உண்மை என்றாலும், ஆவியான

---

[29] எபேசியரின் விசுவாசித்தலும், பரிசுத்த ஆவியானவர் முத்திரைபோடுதலும் ஒரே நேரத்தில் நடைபெற்ற சம்பவங்களாக இருக்கின்றதைச் சுட்டிக்காட்டும் விதத்திலேயே மூலமொழியில் இவ்வசனத்தின் இலக்கணம் உள்ளது.
[30] F.F.Bruce, *Ephesians: The New International Commentary on the NT*, p. 265; R.C.Sproul, *The Purpose of God: An Exposition of Ephesians*, pp. 31-32.

வரின் செயல்கள் கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்பத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்படையும்போது நம்மில் வாசமாயிருக்க ஆரம்பிக்கும் பரிசுத்த ஆவியானவர் (எபே.1:13, அப். 19:1-2, கலா.3:1-2, 4:6) அதன் பின்பும் தொடர்ந்து நம்முடைய வாழ்வில் செயல்படுகிறவராய் இருக்கின்றார். இதனால்தான் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் (அப்.2:4) மறுபடியுமாக அப்போஸ்தலர் 4ம் அதிகாரத்தில் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் (அப்.4:31). மேலும், ஆவியினால் நிரப்பப்படும் அனுபவம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. இதை வேறுபடுத்திக் காண்பிப்பதற்காக "நிறைந்திருத்தல்" "நிரப்பப்படுதல்" என்னும் இரண்டு வார்த்தைகள் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளதோடு, மூலமொழியில் இவை இலக்கணரீதியாக வித்தியாசமான முறையில் உள்ளன.[31] "ஆவியினால் நிறைந்திருத்தல் என்பது, எப்பொழுதும் ஆவியானவரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் வாழ்க்கைமுறையாக உள்ளது."[32] இவ்விதமாக இருந்த மனிதர்களைப்பற்றி அப்போஸ்தலர் 6:3, 11:24 அறியத்தருவதோடு, இவ்விதமாக இருக்கும்படி கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம் (எபே.5:18).[33] ஆனால், ஆவியினால் நிரப்பப்படும் அனுபவமானது சடுதியாக ஆவியானவரால் ஆட்கொள்ளப்படும் அனுபவமாகும். இவ்வாறு ஆவியானவரால் மனிதர்கள் ஆட்கொள்ளப்படும்போது, பல்வேறுவிதமான ஆவிக்குரிய அனுபவங்களைப் பெறுகின்றனர். இதனால்தான் பெந்தெகொஸ்தே நாளில் ஆவியினால் நிரப்பப்பட்டு வெவ்வேறு பாஷைகளில் பேசியவர்கள் (அப்.2:4), இன்னுமொரு தடவை சடுதியாக ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டபோது, தேவ வசனத்தை தைரியமாகச் சொன்னார்கள் (அப்.4:31).

---

[31] C.C.Ryrie, *The Holy Spirit*, pp. 157-158; S.Ferguson, *The Holy Spirit*, p. 89; G.Abbott, *A Manual of Greek Lexicon of the New Testament*, pp. 360, 365.

[32] P.T.O'Brien, *Ephesians: The Pillar New Testament Commentary*, p. 366.

[33] எபேசியர் 5:18ல் "துன்மார்க்கத்துக்கு ஏதுவான மதுபானவெறி கொள்ளாமல் ஆவியில் நிறைந்திருக்கும்படி" நாம் அறிவுறுத்தப்பட்டுள்ளோம். இலக்கணரீதியாக இக்கட்டளை நிகழ்காலத்தொடரில் (present continuous tense) இருப்பதனால் இது எப்பொழுதும் தொடர்ச்சியாக இருக்கவேண்டிய நிலையைப் பற்றிய அறிவுறுத்தலாகவே உள்ளது. மேலும் நிறைந்திருத்தல் என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ப்ளேரூ" (*pleroo*) என்னும் கிரேக்கச் சொல், ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதைக் குறிக்கின்றது.

இதைப்போல, வாழ்த்துப் பாடுதல் (லூக்.1:41-42), தீர்க்கதரிசனம் உரைத்தல் (லூக்.1:67), தேவனுடைய வார்த்தையை அறிவித்தல் (அப்.4:8), ஆவியின் வரங்களை உபயோகித்தல் (அப்.13:9) என்பன மனிதர்கள் சடுதியாக ஆவியினால் ஆட்கொள்ளப்படுவதனால் அவர்களில் ஏற்படும் விளைவுகளாக இருப்பதை வேதாகமத்தில் நாம் பார்க்கலாம். இதைப்போலவே, நாம் ஞானஸ்நானம் பெறும்போதும், நம்மில் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரினால் நிரப்பப்பட்டு, அவர் அருளும் வல்லமையையும் வரங்களையும் பெறுகின்றோம்.



## (3). சபையிலிருக்கும் நிலையைப் பெறுகின்றோம்

ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிப்பின் நிச்சயத்தையும் பரிசுத்த ஆவியின் நிறைவையும் பெறும் நாம், இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இருக்கும் நிலையையும் பெறுகின்றோம். உண்மையில், நாம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும்போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒரு அவயவமாக இணைக்கின்றார். அப்போஸ்தலனாகிய பவுல் இதைப்பற்றி 1கொரிந்தியர் 12:13ல் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.

சில கிறிஸ்தவர்கள் “ஆவியின் ஞானஸ்நானத்தைப்” பற்றியே பவுல் இவ்விதமாக எழுதியுள்ளதாகக் கருதுகின்றனர்.[34] ஆனால், இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒருவன் தன்னுடைய கிறிஸ்தவ வாழ்வின்

---

[34] J.Stott, *Baptism and Fulness: The Work of the Holy Spirit Today*, pp. 50-56; A.F.Johnson, *1Corinthians: The IVP New Testament Commentary*, p. 231; R.B.Hays, *1Corinthians: Interpretation – A Bible Commentary for Preaching and Teaching*, p. 214.

ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் அனுபவமே ஆவியின் ஞானஸ்நானமாக உள்ளது. 1கொரிந்தியர் 12:13ல் நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதைப்பற்றி அல்ல, பரிசுத்த ஆவியான வர் நமக்கு என்ன செய்துள்ளார் என்பதையே பவுல் அறியத்தந்துள் ளார். இதனால்தான், "நாம் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளதாகப்" பவுல் குறிப்பிட்டுள்ளார். பரிசுத்த ஆவியானவர் நம்மை இயேசுகிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டுசெல்லும் அனுபவமாகவே இவ்வசனத்தில் ஞானஸ்நானம் சித்தரிக்கப்பட்டுள்ளது.[35] இதனால், இயேசுகிறிஸ்துவின் சரீரத்துடன் இணைக்கப்படுவதற்கான அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானமே (ரோ.6:3-4) அவருடைய சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நா னம் பண்ணப்படும் செயலாக உள்ளது.[36] கலாத்தியர் 3:27ல் தண்ணீர் ஞானஸ்நானமே "கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதாக" இருப்பதனால், 1கொரிந்தியர் 12:13லும் தண்ணீர் ஞானஸ்நானமே "ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுதலாகச்" சித்தரிக் கப்பட்டுள்ளது.[37] மேலும், இவ்வசனம் இடம்பெறும் 1கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில், கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் "கிறிஸ்து வின் சரீரமாகவும் தனித்தனியே அச்சரீரத்தின் அவயவங்களாகவும்" இருப்பதைப் பவுல் சுட்டிக்காட்டியுள்ளார் (1கொரி.12:27). உண்மையில், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதனால் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்பவன் ஞானஸ்நானம் பெறும்போது, பரிசுத்த ஆவியானவர் அவனை இயேசுகிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அவயவமாக்குகிறார் என்பதையே பவுல் 1கொரிந்தியர் 12:13ல் அறியத் தந்துள்ளார்.[38]

---

[35] R.C.H.Lenski, *The Interpretation of I and II Corinthians*, pp. 514-515.

[36] C.K.Barrett, *1Corinthians: Black's New Testament Commentary*, pp. 288-289.

[37] G.R.Beasley-Murray, *Baptism in the New Testament*, p. 169.

[38] சில வேத ஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தின் முதல் வாக்கியத்தை இரட்சிப்பின் அனுபவமாகவும், இரண்டாவது வாக்கியத்தை இரட்சிப்பின் பின்னர் பரிசுத்த ஆவியானவரைப் பெறும் அனுபவமாகவும் விளக்கியுள்ளனர் (R.E.Cottle, "All Were Baptised" in *Journal fo the Evangelical Theological Society*. 17 (1974), pp. 75-80). ஆனால் ஒருவன் இரட்சிக்கப்படும்போதே பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதாகவே பவுல் ஏனைய நிருபங்களில் எழுதியுள்ளதி னால் (எபே.1:13) இவ்வசனத்தை இரண்டு அனுபவங்களாக வியாக்கியானம் செய்யமுடியாது. மேலும், மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையின்படி இவ்வசனத்தின் இரு வாக்கியங்களும் ஒரு விஷயத்தையே விபரிக்கின்றன.

ஞானஸ்நானம் ஒருவனைக் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் கொண்டுசெல்கின்றது என்பதையே பவுல் 1கொரிந்தியர் 12:13ல் அறியத்தருகின்றார்.[39] அதாவது, ஞானஸ்நானம் பெறுபவனைப் பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒரு அவயவ மாக்குகிறார்.[40] ஞானஸ்நானம் பெறுவதனால் நமக்குக் கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதமாக இது உள்ளது. இதனால் கிறிஸ்தவ வாழ்வில் ஞானஸ்நானம் மிகவும் முக்கியமானதாக உள்ளது. நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களாக மாத்திரமல்ல, ஞானஸ்நா னம் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். அப்பொழுது மாத்திரமே நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகவும், அவருடைய சபையின் உண்மையான அங்கத்தவர்களாகவும் இருப்போம். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளையாகினால் (யோவா. 1:12) மாத்திரம் போதும் என்று நாம் எண்ணுவது தவறாகும். ஏனெ னில், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளையாகிய வன் அடுத்து செய்யவேண்டிய காரியம் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெறுவதாகவே உள்ளது.[41] இதனால், இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளையாகியவன் ஞானஸ்நானம் பெற்றவனாகவே இருப்பான். ஞானஸ்நானம் பெறும்படி இயேசுகிறிஸ்துவே கட்டளையிட்டுள்ளதினால் (மத்.28:19-20), ஞானஸ் நானம் பெறாதவன் தேவனுக்குக் கீழ்ப்படியாதவனாகவும் தேவனை விசுவாசியாதவனுமாகவே இருப்பான். உண்மையில், இயேசுகிறிஸ் துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளையாகுவதும் (அதாவது இரட்சிப்படைவதும்) ஞானஸ்நானம் பெற்று அவருடைய சரீரமாகிய சபையின் அங்கமாக மாறுவதும் எவ்விதத்திலும் பிரிக்கமுடியாதபடி ஒன்றோடொன்று தொடர்புடைய ஆவிக்குரிய அனுபவங்களாய் உள் ளன. இதனால்தான், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற்.16:16) என்று இயேசுகிறிஸ்து அறிவு றுத்தியுள்ளார்.

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து, "விசுவாசியாதவனோ ஆக்கினைக்

---

[39] G.R.Beasley-Murray, *Baptism in the New Testament*, p. 167.

[40] D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the NT*, p. 591.

[41] இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு 1ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் (மாற்.16:16). தற்கால சபைகளில் பிறப்பால் பெயரளவில் கிறிஸ்தவர் களாக இருப்பவர்களும், இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளைகளாகியவர்களும் இருக்கின்றனர். அதேசமயம், முழுக்கு ஞானஸ்நானம் பெற்றவர்களிலும் போலியான கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர்.[42] இதனால் தற்கால சபையானது, இயேசுகிறிஸ்து குறிப்பிட்ட விதமாக "தானியமும் களையும்" நன்றாக வளர்ந்துள்ள ஒரு வயலைப் போலவே உள்ளது (மத்.13:24-30).[43] தற்காலத்தில், தானியமும் களையும் ஒன்றாக வளர்வதற்கு அனுமதிக் கும் தேவன், நியாயத்தீர்ப்பு நாளில் இரண்டையும் வெவ்வேறாகப் பிரிப்பார். அப்பொழுது தானியம் களஞ்சியத்தில் சேர்க்கப்படும். களைகள் அக்கினியில் போடப்படும். அதாவது, மெய்க்கிறிஸ்தவர்கள்

---

[42] போலிக்கிறிஸ்தவர்களும் மெய்க்கிறிஸ்தவர்களைப்போலவே இருந்தாலும் தேவனோடு தனிப்பட்டரீதியான உறவற்றவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் பெயரில் அற்புதங்கள் செய்பவர்களாகவும், தீர்க்கதரிசனம் உரைப்பவர்களாகவும் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக அறியாதவர்களாகவே இருப்பார்கள். இயேசுகிறிஸ்து இதைப்பற்றி கூறும் போது, "அந்நாளில் (அதாவது நியாயத்தீர்ப்பு நாளில்) அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறிய வில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்.7:22-23) என்று குறிப்பிட்டுள்ளார்.

[43] ஒரு உவமையின் மூலம் இயேசுகிறிஸ்து இதைப்பற்றி பின்வருமாறு விளக்கியுள்ளார்: "பரலோக ராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்ட போது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்: சத் துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமை யையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளர விடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்" (மத்.13:24-30).

பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். போலிக்கிறிஸ்தவர்கள் நரக ஆக்கினைக்கு உட்படுவார்கள் (மத்.13:38-43).[44] இதனால், நாம் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்ட ரீதியாக விசுவாசிப்பதனால் தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறந்து (யோவா.1:12, 3:3), ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயவங்களாக இருக்கவேண்டியது அவசியம் (1கொரி. 12:13). இல்லையென்றால் நாம் போலிக்கிறிஸ்தவர்களாகவே இருப்போம்.[45]



---

[44] இந்த உவமையை இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு விளக்கும்போது, நிலம் உலகம். நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர். அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு. அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள் (மத்.13:38-43) என்று குறிப்பிட்டுள்ளார்.

[45]ஞானஸ்நானத்தின் மூலம் நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயவங்களாக இருப்பதனால், இதை வெளிப்படையாகக் காண்பிக்கும் விதத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் நாம் சபையாகக் கூடிவர வேண்டியது அவசியம். இதனால்தான், "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்" என்று வேதாகமம் அறிவுறுத்துகிறது (எபி.10:25).



## ஆறாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் நீண்டகாலமாகவே கிறிஸ்தவ சபையில் இருந்துள்ள போதிலும், தற்காலத்தில் இது அதிக சர்ச்சைக்குரிய விஷயமாகியுள்ளது. எனினும், இது கி.பி.3ம் நூற்றாண்டில் உருவான ஒரு பழக்கமாகவே உள்ளது. இதனால், தற்காலத்தில் குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்தும் தர்க்கங்கள் ஆதாரமற்றவையாக உள்ளன. அதாவது. இப்பழக்கம் ஆரம்பத்திலிருந்தே இருந்தது என்னும் தர்க்கத்திற்கு ஆதாரமாக வேதத்திலோ அல்லது ஆதிசபைத் தலைவர்களினுடைய நூல்களிலோ குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. இதனால், வேதவசனங்களையும், ஆதிசபைத் தலைவர்களினுடைய நூல்களையும் திரிபுபடுத்தி நியாயப்படுத்தப்படும் குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய தர்க்கங்கள் ஒன்றையொன்று முரண்படுத்தும் அர்த்தமற்ற அறிவீனமான கருத்துகளாக இருப்பதை இவ்வத்தியாயம் அறியத்தருகிறது.

## ஆறாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்தின் அறியாமை

### குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

ஞானஸ்நானத்தைப்பற்றித் தேவனுடைய வார்த்தையான வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை அறிந்துகொண்ட நாம், வேதாகமத்தில் இல்லாத, ஆனால் நீண்ட காலமாகப் பல பாரம்பரிய சபைகளில் இருந்துவரும் "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைப்" பற்றியும் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாயுள்ளது. ஏனெனில், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகள் இதைப்பற்றி வித்தியாசமான போதனைகளை உருவாக்கி உள்ளன. "குழந்தை ஞானஸ்நானம் நீண்ட காலமாகக் கிறிஸ்தவ சபையில் இருந்துள்ளதினால், ஆரம்ப காலத்தில் இருந்தே இப்பழக்கம் இருந்துள்ளதாகவும், இதுவே ஞானஸ்நானத்திற்கான சரியான முறை என்றும்

பாரம்பரியச் சபைகள் கருதுகின்றன."[1] எனவே, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை எக்காலத்தில் எதற்காக உருவானது என்பதையும், இதை நியாயப்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும் தர்க்கங்களையும் இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.



## (1) குழந்தை ஞானஸ்நானத்தின் ஆதாரமற்ற தர்க்கங்கள்

தற்காலத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை ஆதரிப்பவர்களின் தர்க்கங்கள் எவ்வித ஆதாரமும் அற்றவைகளாகவே உள்ளன. ஏனெனில், ஆரம்ப காலத்திலிருந்தே கிறிஸ்தவ சபையில் இத்தகைய பழக்கம் இருந்தது என்பதே இவர்களின் தர்க்கமாயுள்ளது. புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளதாக இவர்கள் வாதிடுகின்றனர். "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி வேதாகமம் கூறுவதனாலேயே நாம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறோம்"[2] என்று போதிக்கும் இவர்கள், "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்கு எவ்வித காரணங்களும் வேதாகமத்தில் இல்லை"[3] என்றும், "ஞானஸ்நானத்தைப் பற்றிய தேவனுடைய கட்டளை குழந்தைகளையும் உள்ளடக்கியுள்ளது"[4] என்றும் கூறுகின்றனர். ஆனால், குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய அறிவுறுத்தல்கள் எதுவும் வேதாகமத்தில் இல்லை. உண்மையில், குழந்தை ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாக இவர்கள் சுட்டிக்காட்டும் விஷயங்களில் குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை. இதனால், குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய தர்க்கங்கள் எவ்வித ஆதாரமும் அற்றவைகளாக உள்ளன.

முதலாம் நூற்றாண்டில் பாரம்பரியக் கிறிஸ்தவர்கள் எவரும் இருக்கவில்லை. அதாவது, பெற்றோர் கிறிஸ்தவராயிருந்ததினால் குழந்தை

[1] D.F.Wright, *What has Infant Baptism Done to Baptism?*, p. 18.
[2] G.Strawbridge, ed. *The Case for Covenantal Infant Baptism*, pp. 9-10.
[3] J.P.Sartelle, *What Christian Parents Should Know About Infant Baptism*, p. 28
[4] E.Schlink, *The Doctrine of Baptism*, pp. 153-154.

யாக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவர்களாகியவர்கள் எவரும் அக்காலத்தில் இருக்கவில்லை. முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அனைவருமே தனிப்பட்டரீதியாக இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட பக்தர்களாகவே இருந்தனர்.[5] இதனால், குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி வேதாகமத்தில் எதுவும் இல்லை. குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியான அறிவுறுத்தல்களோ, அல்லது, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றிய குறிப்புகளோ வேதாகமத்தில் இல்லை. "புதிய ஏற்பாட்டுச் சபையில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை தற்காலத்தில் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது."[6] வேதாகமத்தில் மாத்திரமல்ல, கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கிறிஸ்தவ நூல்களிலும் குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை. கி.பி.2ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபையின் தலைவர்களாக இருந்தவர் கள், அக்கால சபைகளுக்குப் பல நிருபங்களை எழுதியுள்ளனர். இவற்றில், கி.பி.125ல் எழுதப்பட்ட "பர்னபாவின் நிருபத்தில்" (The Epistle of Barnabas) ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்பு உள்ளபோதி லும், இதில் குழந்தைகளைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதைப்போலவே, கி.பி.150ல் எழுதப்பட்ட "ஹேர்மாஸ்சின் மேய்ப்பன்" (Shepherd of Hermas) என்னும் நூலில் "தண்ணீர் ஞானஸ்நானம் அனைவருக்கும் அவசியமானது" என்னும் அறிவுரை உள்ளபோதிலும், இதில் குழந்தைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதைப் பற்றி எதுவும் சொல் லப்படவில்லை. கி.பி. 107ல் மரணமடைந்த "இக்னேஷியஸ்" (Ignatius) என்னும் சபைத் தலைவர் எழுதிய ஏழு நிருபங்களில் ஒன்றில்கூட குழந்தைகள் ஞானஸ்நானத்தைப்பற்றி எதுவும் இல்லை. இரண்டாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ சபையின் போதனைத் தொகுப்பாகக் கருதப் படும் "டிடாக்கி" (Didache) என்னும் நூலில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைப் பற்றிய விரிவான விளக்கங்கள் உள்ளபோதிலும், இதிலும் குழந்தைகள் ஞானஸ்நானத்தைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. இரண்டாம் நூற்றாண்டில் "ஜஸ்டின் மாட்டர்" (Justin Martyr) என்னும் சபைத் தலைவருடைய எழுத்துகளில், சிறு பிராயத்திலேயே ஞானஸ்

[5] F.M.Buhler, *Archaeological, Historical and Biblical Aspects of Baptism*, p. 10.
[6] D.F.Wright, "The Origins of Infant Baptism – Child Believer's Baptism?" in *Scottish Journal of Theology*. 40 (1987), p. 3.

நானம் பெற்ற பெண்களைப்பற்றிய குறிப்பு உள்ளது.[7] சிலர் இதை குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய முதலாவது குறிப்பாகக் கருது கின்றனர்.[8] ஆனால், இதில் "சிறுபிராயம்" என்பதற்கு உபயோகிக்கப்பட் டுள்ள சொல்லைக் குழந்தைகள் என்று மொழிபெயர்க்கமுடியாது. இதனால் ஜஸ்டின் மாட்டருடைய குறிப்பைக் குழந்தை ஞானஸ்நானத் தைப்பற்றிய உதாரணமாக விளக்கமுடியாது.[9] சிறுபிராயம் என்னும் சொல்லைக் குழந்தைகளைக் குறிப்பிட ஜஸ்டின் மாட்டர் உபயோகிக்க வில்லை என்பதை அவருடைய நூல்களே அறியத்தருகின்றன.[10]



**குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படியான அறிவுறுத்தல்களோ, ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றிய குறிப்புகளோ வேதாகமத்தில் இல்லை**



கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்களில் உள்ள ஞானஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகள், அக்காலத்தில் குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்து கின்றன. அக்கால கிறிஸ்தவ சபையின் போதனைகளின் தொகுப்பாக இருந்த "டிடாக்கி" என்னும் நூலில், எவ்வாறு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று விளக்கப்பட்டுள்ளது. ஞானஸ்நானம் பெறுபவர் ஒன்று அல்லது இரண்டு நாட்கள் உபவாசம் இருக்கவேண்டும் என் னும் அறிவுறுத்தல் இந்நூலில் உள்ளது.[11] உண்மையில், இது குழந்தைகளுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றதாகவே உள்ளது. மேலும், ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கே திருவிருந்து கொடுக்க வேண்டும் என்னும் அறிவுறுத்தலும் இந்நூலில் உள்ளது.[12] ஆனால், குழந்தைகளுக்கு எவரும் திருவிருந்து கொடுப்பதில்லை என்பதனால், அக்காலத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானமும் கொடுக்கப்பட வில்லை என்பதை எவ்விதத்திலும் மறுக்கமுடியாதுள்ளது. அக்காலத்

---

[7] J.Martyr, *First Apology*, 15:6.
[8] G.W.Bromiley, *The Baptism of Infants*, p. 1.
[9] L.Woods, *Lectures on Infant Baptism*, p. 112.
[10] W.Wall, *History of Infant Baptism*, p. 64.
[11] *The Didache* 7:4
[12] *The Didache* 9:5.

தில் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கான சிறப்பான அறிவுறுத்தல்களும் இந்நூலில் இடம்பெற்றிருக்கும். இத்தகைய அறிவுறுத்தல்கள் எதுவும் இந்நூலில் இராததினாலும், ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கான அறிவுறுத்தல்கள் குழந்தைகளுக்குப் பொருத்தமற்றவைகளாக இருப்பதனாலும், அக்காலத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இதைப்போலவே, இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஏனைய நூல்களிலும் ஞானஸ்நானம் பெறுபவருக்கான அறிவுறுத்தல்கள் குழந்தைகளுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்றவைகளாகவே உள்ளன.[13] இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் "ஜஸ்டின் மாட்டர்" என்னும் சபைத் தலைவர் எழுதிய நூலிலும், ஞானஸ்நானம் பெறுபவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவமன்னிப்புக்காக உபவாசித்து ஜெபிக்கவேண்டும் என்றும், கிறிஸ்தவ உபதேசங்கள் உண்மையானவை என்பதை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ்பவராக இருக்க வேண்டும் என்றும் விளக்கப்பட்டுள்ளது.[14] இவை குழந்தைகளால் கைக்கொள்ளமுடியாத காரியங்களாக இருப்பதோடு, அக்காலத்தில் குழந்தைகளுக்கு அல்ல, கிறிஸ்தவ விசுவாசிகளாக இருப்பவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுள்ளதை அறியத்தரும் குறிப்புகளாகவும் உள்ளன.[15] உண்மையில், "குழந்தை ஞானஸ்நானம் ஆதிக் கிறிஸ்தவர்கள் அறிந்திராத ஒரு விஷயமாகவே உள்ளது."[16]

கி.பி.3ம் நூற்றாண்டிலேயே குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகள் கிறிஸ்தவ சபைத் தலைவர்களுடைய நூல்களில் உள்

---

[13] K.Aland, *Did The Early Church Baptize Infants?* p. 54.

[14] J.Martyr, *First Apology* 61:2.

[15] T.R.Schreiner & S.D.Wright, *Believers Baptism: Sign of the New Covenant in Christ*, p. 171; குழந்தைகளும் உணவில்லாமல் இருக்கக்கூடியவை என்றும், இதனால் அவர்களுக்கும் அக்காலத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்றும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் கூறுவதோடு, இதற்கு ஆதாரமாக யோனா 3:5-8, யோவேல் 2:15-16 போன்ற வசனங்களை சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால், ஆதி சபைத் தலைவர்களின் நூல்களில், உபவாசம் என்பது சாப்பிடாமல் இருப்பதை மாத்திரமல்ல, தனிப்பட்ட ஆவிக்குரிய ஆயத்த செயல்களையும் உள்ளடக்கியதாக இருப்பதனால், குழந்தைகளும் உபவாசமிருந்து ஞானஸ்நானம் பெற்றன என்று தர்க்கிப்பது அர்த்தமற்றது (H.F.Stander & J.P.Louw, *Baptism in the Early Church*, p. 23).

[16] L.Lange, *History of Protestantism*, 221.

என. இதற்கு முற்பட்ட காலத்தில் குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகள் எதுவும் கிறிஸ்தவ நூல்கள் எதிலும் இல்லை.[17] மேலும், குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய முதலாவது குறிப்பு அதற்கு எதிரான கடுமையான விமர்சனமாகவே உள்ளது. அதாவது, கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்டுள்ள குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய முதலாவது குறிப்பில் "டேர்ட்டுளியன்" (Tertullian) என்னும் சபைத் தலைவர், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதிலிருந்து, அக்காலத்திலேயே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை ஆரம்பமாகியுள்ளது தெளிவாகின்றது. ஏனெனில், "தன்னுடைய காலத்தில் உருவான குழந்தை ஞானஸ்நானத்தை எதிர்ப்பதற்காகவே குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி டேர்ட்டுளியன் எழுதியுள்ளார்."[18] எனினும், அக்காலத்தில், சகல குழந்தைகளுக்கும் அல்ல, மரிக்கும் தருவாயில் இருக்கும் குழந்தைகளுக்கே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவ வாழ்வில் ஞானஸ்நானம் முக்கியமானது என்பதை அறிந்திருந்த கிறிஸ்தவர்கள், வியாதிப்படும் தங்களுடைய குழந்தைகள் மரிக்கும் நிலையை அடைந்தால், அவற்றிற்கு ஞானஸ்நானம் கொடுத்தனர்.[19] ஆனால், இத்தகைய குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமில்லை என்பதையே டேர்ட்டுளியனின் நூல்கள், சுட்டிக்காட்டுகின்றன. ஏனெனில், பாவங்களிலிருந்து மனந்திரும்பி, நீதியான முறையில் வாழ்வதற்குத் தங்களை அர்ப்பணிப்பவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்பதை அறியத்தரும் டேர்ட்டுளியன், மனந்திரும்புதலும் அர்ப்பணிப்பும் குழந்தைகளினால் செய்யமுடியாத காரியங்களாய் இருப்பதனால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமற்றது என்று தெரிவித்துள்ளார்.[20] மேலும், ஞானஸ்நானம் பெறுபவர், முழங்காலை மடித்து உபவாசத்திலும் ஜெபத்திலும் தரித்திருக்கவேண்டும் என்றும், இரவு முழுவதும் விழித்திருந்து கடந்தகால பாவங்கள் அனைத்தையும் அறிக்கையிடவேண்டும் என்றும் டேர்ட்டுளியன் அறிவுறுத்தியுள்ளார்.[21] உண்மையில்,

---

[17] K.Aland, *Did The Early Church Baptize Infants?* p. 101; H.F.Stander & J.P.Louw, *Baptism in the Early Church*, p. 184.

[18] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believers Baptism*, p. 173.

[19] E.Ferguson, "Inscriptions and the Origin of Infant Baptism" in *Journal of Theological Studies*. 30 (1979), pp. 37-46 *Early Christians Speak*, pp. 55-65.

[20] Tertullian, *On Baptism* 18, in *Ante-Nicene Fathers Volume 3.* [21] *Ibid*. 20.

இத்தகைய அறிவுறுத்தல்கள் குழந்தைகளினால் கைக்கொள்ள முடியாதவைகளாக இருப்பதோடு, குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நடைமுறைகளாகவே உள்ளன.



**குழந்தை ஞானஸ்நானம் ஆதிக் கிறிஸ்தவர்கள் அறிந்திராத ஒரு விஷயமாகவே உள்ளது.**



கி.பி.3ம் நூற்றாண்டில், டேர்ட்டுளியன் என்னும் சபைத் தலைவர் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை எதிர்த்தாலும், அக்காலத்தில் சில சபைத் தலைவர்கள் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தனர். இதனால்தான், 3ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் "ஹிப்போலிட்டஸ்" (Hippolytus) என்னும் சபைத் தலைவரினால் எழுதப்பட்ட "அப்போஸ்தல பாரம்பரியம்" (Apostolic Tradition) என்னும் நூலில், சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுப்பதைப் பற்றிய அறிவுறுத்தல்கள் உள்ளன.[22] ஆரம்பகாலத்தில், குழந்தைகள் பாவம் செய்யாதவர்கள் என்னும் கருத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்ததினால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதில்லை என்று சபைத் தலைவர்கள் கருதினார்கள்.[23] ஞானஸ்நானம் இரட்சிப்புக்கான அடையாளமாக இருந்ததினால், இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசித்து இரட்சிக்கப்படமுடியாத நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கு முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை. ஆனால் கி.பி.3ம் நூற்றாண்டில், ஞானஸ்நானத்தின் மூலமே பாவமன்னிப்பும் இரட்சிப்பும் மனிதருக்கு அருளப்படுகின்றன என்னும் தவறான எண்ணம் கிறிஸ்தவ சபையில் ஏற்பட்டதினால் வியாதிப்பட்டு மரிக்கும் நிலையை அடைந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.[24] கி.பி.4ம் நூற்றாண்டில், மரிக்கும் நிலையிலுள்ள குழந்தைகளுக்கு மாத்திரமல்ல கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்

[22] Hippolytius, *Apostolic Tradition*, 42-43.
[23] T.R.Schreiner & S.D.Wright, *Believers Baptism*, p. 171.
[24] H.F.Stander & J.P.Louw, *Baptism in the Early Church*, p. 184.

கப்பட்டது.[25] எனினும், நான்காம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தங்களுடைய குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பெற்றோர்கள், குழந்தைகளாக இருந்தபோது ஞானஸ்நானம் பெற்றவர்கள் அல்ல. குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய போதனையை உருவாக்கிய சபைத் தலைவர் ஒகஸ்டீன் என்பவர்கூட குழந்தையாக இருந்தபோது ஞானஸ்நானம் பெறாதவராகவே இருந்தார்.[26] உண்மையில், ஒகஸ்டீனுடைய காலத்திற்குப் பின்பே கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் அனைவருக்கும் கட்டாயம் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்னும் போதனை கிறிஸ்தவ சபையை முழுமையாக ஆக்கிரமித்தது.[27] கி.பி.4ம் நூற்றாண்டுவரை இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கக்கூடிய வயதுடையவர்களுக்கு மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்னும் போதனையே கிறிஸ்தவ சபையில் இருந்தது.[28] எனவே, முதலாம் நூற்றாண்டிலிருந்தே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் கிறிஸ்தவ சபையில் இருந்தது என்பது எவ்வித ஆதாரமும் அற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது.



## (2)
## குழந்தை ஞானஸ்நானத்தின் அர்த்தமற்ற தர்க்கங்கள்

கி.பி.முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபை உருவாகிய காலத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை இருந்தது என்று வாதிடுபவர்களுடைய தர்க்கங்கள் ஆதாரமற்றவைகளாக இருப்பதனால் அவைகள் அர்த்தமற்றவைகளாகவும் உள்ளன. இவர்கள் வேதவசனங்களைத் தங்களுடைய உபதேசத்துக்கு ஏற்றவிதத்தில் வியாக்கியானம் செய்து, குழந்தை ஞானஸ்நானம் வேதாகமத்தில் இருப்பதாகக் காண்பிக்க முற்படுகின்றனர். இதனால் இவர்கள், புதிய ஏற்பாட்டில் "ஒருவனுடைய வீட்டார்" ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றிய குறிப்புகளைத் தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கின்றனர். அதாவது, "வீட்டார்" என்னும் சொல்லில் குழந்தைகளும்

[25] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 43.
[26] R.Anthony, ed., *Baptism, the New Testament and the Church*, pp. 352-355.
[27] D.Lewis & A.McGrath, *Doing Theology for the People of God*, p. 57.
[28] D.F.Wright, ed., *Baptism: Three Views*, p. 49.

உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் கூறும் இவர்கள், ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது அவனுடைய வீட்டிலிருந்த குழந்தைகளுக் கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வாதிடுகின்றனர்.[29] அப்போஸ்த லர் 16:15ல், "லீதியாளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றதா கக்" குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போலவே, 1கொரிந்தியர் 1:16ல், "ஸ்தேவானுடைய வீட்டாருக்குப்" பவுல் ஞானஸ்நானம் கொடுத்துள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், கொர்நேலியுவின் வீட்டாரும் (அப். 10:2,47,48), கிறிஸ்பு என்பவனுடைய வீட்டாரும் (அப்.18:8) ஞானஸ் நானம் பெற்றுள்ளனர். எனினும், "வீட்டார்" என்னும் சொல்லில் குழந்தைகளும் உள்ளடக்கப்படலாம் என்பது உண்மை என்றாலும், இவ்வேதப் பகுதிகளில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் தேவவசனத்தைக் கேட்டவர்களாகவும் (அப்.10:44, 11:17), பாவத்திலிருந்து மனந்திரும்பிய வர்களாகவும் (அப்.11:18) தேவனை விசுவாசித்தவர்களாகவும் (அப். 18:8, 1கொரி.1:16), தேவனுக்குப் பயந்தவர்களாகவும் (அப்.10:2), பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்த வர்களாகவும் (1கொரி.16:15) இருந்தனர். குழந்தைகளினால் இத்தகைய காரியங்களைச் செய்யமுடியாததினால், வேதாகமத்தில் ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது அவனுடைய வீட்டிலிருந்த குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்று கூறமுடி யாது.[30] அக்காலத்தில் ஒருவனுடைய வீட்டிலிருந்தவர்கள் சிறுவர்க ளாயிருந்தாலும், அவர்களும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிகளான பின்பே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.[31] அப்போஸ்த லருடைய நடபடிகள் புத்தகத்தில், ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நா னம் பெற்றபோது, இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசிக்க

---

[29] J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, pp. 19-24; G.Strawbridge, *The Case for Covenantal Infant Baptism*, ed., pp. 81-83; R.C.Sproul, *Truth We Cofess: A Layman's Guide to the Westminster Confession of Faith*, p. 122.

[30] ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது அக்குடும்பத்திலிருந்த குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றனர் என்றால், அவனுடைய வீட்டார் செய்த ஏனைய காரியங்களையும் அதாவது வசனத்தைக் கேட்டல், இயே சுவை விசுவாசித்தல், போன்ற அனைத்து காரியங்களையும் அவ்வீட்டிலிருந்த குழந்தைகளும் செய்திருக்கவேண்டும். இது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதனால், ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது அவ்வீட்டிலி ருந்த குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றனர் என்று கூறமுடியாது (G.R. Beasley-Murray, *Baptism in the New Testament*, p. 315).

[31] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 160.

முடியாத நிலையில் இருந்த குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக் கப்படவில்லை. ஏனெனில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் ஞானஸ் நானம் பெற்றவர்கள் அனைவரும் தனிப்பட்டரீதியாக இயேசுகிறிஸ் துவை விசுவாசித்தவர்களாகவே இருந்தனர்.[32]



அப்போஸ்தலருடைய நடபடிகளில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அனைவரும் தனிப்பட்டரீதியாக இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவர்களாகவே இருந்தனர்



புதிய ஏற்பாட்டில் ஒருவனுடைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றதைச் சுட்டிக்காட்டும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள், அக்காலத்தில் குடும்ப உறவு உறுதியானதாக இருந்ததினால், குடும்பத் தலைவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அக்குடும்பத்திலுள்ள அனை வரும் அவனுடைய வழியைப் பின்பற்றுவது வழக்கம் என்றும், இத னால், குடும்பத் தலைவன் ஞானஸ்நானம் பெற்றபோது குழந்தைகள் உட்பட அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறுகின்றனர்.[33] பழங்காலத்தில் குடும்ப உறவு உறுதி யாக இருந்தது என்பது உண்மை என்றாலும், குடும்பத்தில் ஒருவர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது அவருடைய குடும்பத்தி னர் அனைவரும் கிறிஸ்தவர்களாகினார்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை. உண்மையில், "பழைய ஏற்பாட்டுக் காலத் தில் யூதகுடும்ப அமைப்பு இருந்தவிதமாகப் புதிய ஏற்பாட்டு கிரேக்க உலகில் குடும்ப அமைப்பு முறை இருக்கவில்லை."[34] புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசித்தவர் களே கிறிஸ்தவர்களாகக் கருதப்பட்டனர். மேலும், ஒருவனுடைய விசுவாசம் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் இரட்சிப்புக்குள் கொண்டுவரும் என்னும் கருத்தை முரண்படுத்தும் விதத்திலேயே

[32] D.F.Wright, *What has Infant Baptisn Done to Baptism*, p. 36.
[33] W.F.Flemington, *The New Testament Doctrine of Baptism*, pp. 131; P.C.Marcel, *The Biblical Doctrine of Infant Baptism*, p. 195; R.D.Richardson, "The Mystics and the Sacrements" in *The Modern Churchman*. XVI (1926-27), pp. 358-359; J.Jeremias, *Infant Babtism in the First Four Centuries*, pp. 22-23.
[34] G.R.Beasley-Murray, *Baptism in the New Testament,* pp. 316-317

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் உள்ளன. ஏனெனில், குடும்பத்தில் ஒருவர் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற ஆரம்பிக்கும்போது, ஏனையவர் கள் அவருக்கு விரோதிகளாக மாறுவார்கள் என்றே இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளார் (மத்.10:34-36, லூக்.12:51-53). உண்மையில், இயேசு கிறிஸ்து சுட்டிக்காட்டியதுபோல, அவரைப் பின்பற்றுவது குடும்ப அங்கத்தினர்களுக்கு இடையில் பிரிவினைகளையே ஏற்படுத்தியது. அக்காலத்தில் பல குடும்பங்களில் கணவன் அல்லது மனைவி மாத்திரமே இரட்சிக்கப்பட்டவர்களாய் இருந்தனர் (1கொரி.7:14-16). "கணவன் இரட்சிக்கப்பட்டும் மனைவி இரட்சிக்கப்படாதவளாக, அல் லது மனைவி இரட்சிக்கப்பட்டு கணவன் இரட்சிக்கப்படாதவனாகப் பல குடும்பங்கள் அக்காலத்தில் இருந்ததினால், ஒருவன் இயேசுகிறிஸ் துவை விசுவாசித்தபோது அவனுடைய வீட்டார் அனைவரும் கிறிஸ்த வர்களானார்கள் என்று கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை."[35]

ஒருவனுடைய விசுவாசம் அவனுடைய முழுக்குடும்பத்தையும் இரட் சிப்புக்குள் கொண்டுவரும் என்பதற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் வேதவசனம் அப்போஸ்தலர் 16:31 ஆகும். இவ்வசனத்தில் "கர்த்தரா கிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்று பிலிப்பி பட்டண சிறைக்காவல் அதிகாரி யிடம் பவுல் தெரிவித்துள்ளார். எனினும், மூலமொழியில் இவ்வசனத்தின் இரண்டாவது வாக்கியம், ஒருவனுடைய விசுவாசம் அவனுடைய வீட்டாரையும் இரட்சிக்கும் என்னும் அர்த்தம் தருவதாயில்லை. "உன்னைப் போலவே உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவார்கள்" என்றே இவ்வாக்கியம் மூலமொழியில் உள்ளது. அதாவது, பிலிப்பி பட்டண சிறைக்காவல் அதிகாரி எப்படி இரட்சிக்கப்படுவானோ அதேவி தமாகவே அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்றே பவுல் குறிப்பிட்டுள்ளார்.[36] இதனால்தான், சிறைக்காவல் அதிகாரிக்கும் அவனுடைய வீட்டாருக்கும் பவுல் இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவித் தார் (அப்.16:32). "சிறைக் காவல் அதிகாரியின் விசுவாசம் அவனு டைய வீட்டாரையும் இரட்சிக்கும் என்று பவுல் நினைத்திருந்தால் அவனுடைய வீட்டாருக்கு அவர் சுவிசேஷத்தை அறிவித்திருக்க

---

[35] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 166.
[36] H.Alford, *The New Testament for English Readers, Volume 1 Part 2*, p. 764.

மாட்டார்."[37] "ஒருவன் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப் படும்போது, அவனுடைய விசுவாசம் காரணமாக அவனுடைய குடும் பத்தினர் இரட்சிக்கப்படுவதில்லை. ஏனெனில், தனிப்பட்டரீதியாக சுவிசேஷத்தைப் புரிந்துகொள்ளாத நிலையில் எவராலும் இயேசுகிறிஸ் துவை விசுவாசிக்கவோ இரட்சிக்கப்படவோ முடியாது."[38] எனவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபோது, அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்னும் நம்பிக்கையில், ஒருவனு டைய வீட்டார் ஞானஸ்நானம் பெற்றபோது, அவ்வீட்டிலிருந்த குழந்தை களுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது என்னும் விளக்கம் தவறாதாகவே உள்ளது.

குழந்தை ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாகச் சுட்டிக்காட்டப்படும் இன்னு மொரு வேதவசனம் 1கொரிந்தியர் 7:14 ஆகும்.[39] ஆனால் இவ்வசனத் தில் ஞானஸ்நானத்தைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இவ்வச னத்தில் மட்டுமல்ல, இவ்வசனம் இடம்பெறும் அதிகாரத்திலும் ஞானஸ் நானத்தைப்பற்றி நாம் எதுவும் வாசிப்பதில்லை. கிறிஸ்தவப் பெற்றோ ருக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமாய் இருப்பதைப்பற்றியே இவ்வசனம் கூறுகிறது. ஆனால், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை ஆதரிப்பவர்களில் சிலர் இவ்வசனத்தை ஆதாரமாகக் கொண்டு,[40] "கிறிஸ்தவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமாய் இருப்பதனால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்"[41] என்றும், "அவர்கள் தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்டவர் கள்"[42] என்றும் கூறுகின்றனர். ஞானஸ்நானம் பெற்றதினால் குழந்தை கள் பரிசுத்தமாயிருப்பதாகவும் சிலர் இவ்வசனத்தை வியாக்கியானம் செய்துள்ளனர்.[43] ஆனால், கி.பி.3ம் நூற்றாண்டு வரை குழந்தைகளுக்கு

---

[37] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 160.

[38] W.J.Larkin, *Acts: The IVP New Testament Commentary*, p. 242.

[39] G.Strawbridge, ed., *The Case for Covenantal Infant Baptism*, p. 172.

[40] குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிப்பவர்கள் அனைவரும் இவ்வசனத்தைத் தங்களுடைய கருத்துக்கு ஆதாரமாக உபயோகிப்பதில்லை. பலர் இவ்வசனத் தில் குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றே தெரிவித்துள்ளனர் (T.E.Watson, *Should Babies Be Baptised?* 39-41).

[41] C.Hodge, *1Corinthians: The Geneva Series of Commentaries*, p. 118).

[42] P.C.Marcel, *The Biblical Doctrine of Infant Baptism*, pp. 119-120.

[43] J.C.O'Neill, "1Corinthians 7:14 and Infant Baptism" pp. 359-361" Cinted in D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the NT*, p. 296.

ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கிறிஸ்தவ சபையில் இராததினால், குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றி பவுல் கொரிந்தியர் நிருபத்தில் எழுதியுள்ளதாகக் கூறுவது அர்த்தமற்றது.[44]



**கி.பி.3ம் நூற்றாண்டு வரை குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றிய எவ்வித குறிப்புகளும் உலகில் இல்லை**



கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த குழந்தை மாத்திரமல்ல, பெற்றோரில் ஒருவர் கிறிஸ்தவராய் இராதபோதிலும் அவரும் பரிசுத்தமாயிருப்பதாகவே 1கொரிந்தியர் 7:14 கூறுகிறது. எனினும், மனிதர் அனைவரும் பிறவியிலேயே பாவிகளாக இருக்கின்றார்கள் என்பதே வேதாகமத்தின் போதனையாயுள்ளது (சங்.51:5, எபே.2:1, ரோ.3:9-12).[45] இதனால், பரிசுத்தம் என்னும் சொல்லைப் பவுல் என்ன அர்த்தத்தில் இவ்வசனத்தில் உபயோகித்துள்ளார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். உண்மையில், ரோமர் 11:16ல் பரிசுத்தம் என்னும் சொல் உபயோகிக்கப்பட்டுள்ள விதமாகவே இவ்வசனத்திலும் இச்சொல்லைப் பவுல் குறிப்பிட்டுள்ளார்.[46] "முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்" என்று ரோமர் 11:16 கூறுகிறது. அதாவது, கொஞ்சம் புளித்த மாவானது, பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குவது போல, பரிசுத்தமாயிருக்கும் மாவானது அதனோடு சேர்க்கப்படும் மாவையும் பரிசுத்தமாக்கும். இதைப்போலவே, விசுவாசப் பெற்றோருடைய பிள்ளையும் அவர்களுடைய கிறிஸ்தவ செல்வாக்கு காரணமாகப் பரிசுத்தமாக்கப்படுவதாகப் பவுல்

[44] H.R.Mackintosh, "Thoughts on Infant Baptism" in *The Expositor*. (1917), p. 195; G.R.Beasley-Murray, *Baptism in the New Testament,* p. 199.

[45] மனிதர் அனைவரும் பிறவியிலேயே பாவிகள் என்று போதிப்பவர்கள்கூட, குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காக, தங்களுடைய உபதேசத்தையே முரண்படுத்தும் விதத்தில் "விசுவாசிக்குப் பிறக்கும் பிள்ளைகள் உடன்படிக்கையின் ஆசீர்வாதம் காரணமாக பாவசாபம் நீக்கப்பட்டவர்களாகவும், தேவனுடைய கிருபையினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்" என்று கூறுகின்றனர் (J.Calvin, *1Corinthians: Calvin's New Testament Commentary*, p. 140).

[46] G.D.Fee, *1Corinthians: The New International Commentary*, p. 299.

குறிப்பிட்டுள்ளார்.[47] எனினும், "பரிசுத்தம்" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஹெகியொஸ்" (*hagios*) என்னும் கிரேக்கச் சொல், "வேறுபிரிக்கப்பட்டிருத்தல்" என்னும் அர்த்தமுடையது. இது, "தேவனால் மீட்கப்படுவதற்காக வேறுபிரிக்கப்பட்டிருத்தல் ஆகும்."[48] எனவே, கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள், "இரட்சிப்பின் மூலம் தேவனுக்கு அர்ப்பணிக்கப்படுவதற்காக வேறுபிரிக்கப்பட்டவர்க

---

[47] இத்தகைய அர்த்தத்துடனேயே இவ்வசனத்தில் "அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள்" என்னும் வாக்கியமும் உள்ளது. இரட்சிக்கப்பட்ட ஒருவர் இரட்சிக்கப்படாதவரைத் திருமணமுடித்து அவருடன் வாழ்வதைப்பற்றியல்ல, ஏற்கனவே திருமணமுடித்தவர்களில் ஒருவர் இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது உள்ள நிலையைப் பற்றியே பவுல் இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். இரட்சிப்பின் பின்னர் அவிசுவாசியுடன் தொடர்ந்து வாழ்வது தங்களை அசுத்தப்படுத்தும் என்று நினைத்த கொரிந்து சபையினர் இரட்சிக்கப்படாதவரை விவாகரத்துசெய்ய முற்பட்டனர். இதனால் விசுவாசிகள் இரட்சிக்கப்படாதவருடன் தொடர்ந்துவாழவேண்டியதன் காரணத்தையும் அவசியத்தையும் பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அதாவது, இரட்சிக்கப்பட்ட ஆண் அல்லது பெண், இன்னும் இரட்சிக்கப்படாமல் இருப்பவருடன் தொடர்ந்து வாழ்வதன் மூலம் அவரும் இயேசுவை அறிந்து இரட்சிப்படைய வாய்ப்புகள் இருப்பதையே பவுல் இவ்வசனத்தில் அறியத்தருகின்றார். அவிசுவாசியுடன் வாழும் விசுவாசி அசுத்தமடைவதில்லை. விசுவாசியுடன் வாழும் அவிசுவாசி பரிசுத்தமடைகின்றான்" என்று பவுல் கூறுகிறார். பேதுரு இதைப்பற்றி எழுதும்போது, "மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் (1பேது.3:1).

[48] S.D.Renn, *Expository Dictionary of Bible Words*, p. 495. "பரிசுத்தம்" என்னும் சொல்லைப் "பரிசுத்தவான்" என்று அர்த்தந்தரும் விதத்தில் எழுவாய்ச் சொல்லாகப் (noun) பவுல் இவ்வசனத்தில் உபயோகித்துள்ளதாகக் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் கருதுகின்றனர் (G.I.Williamson, *The Shorter Catechism*, p. 103). ஆனால், "தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்காக வேறுபிரிக்கப்பட்டிருத்தல்" என்று அர்த்தந்தரும் விதத்தில் மூலமொழியில் இச்சொல் இலக்கணரீதியாக predicate adjectiveஆக உள்ளது. இச்சொல் பரிசுத்தவான் என்று அர்த்தம் தரும் விதத்தில் எழுவாய்ச் சொல்லாக வேதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் சிறப்புச் சுட்டுச்சொல்லுடனேயே (definite article) உள்ளது. ஆனால் 1கொரி.7:14ல் பரிசுத்தம் என்னும் சொல் எழுவாய்ச் சொல்லாக உபயோகிக்கப்படாததினால், கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளைப் "பரிசுத்தவான்கள்" என்று அழைக்கமுடியாது. எந்த ஒரு வேதாகமத்திலும் இவ்வசனத்தில் இச்சொல் பரிசுத்தவான் என்று மொழிபெயர்க்கப்படவில்லை (F.A.Malone, *The Baptism of Disciples Alone,* p. 133).

ளாக இருக்கின்றாா்கள்" என்பதையே பவுல் இவ்வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளாா்.[49] அதாவது, இரட்சிக்கப்பட்ட பெற்றோருடன் வாழ்வதனால் அவா்களும் இரட்சிக்கப்படக்கூடிய நிலையில் இருக்கின்றாா்கள் என்பதையே பவுல் அறியத்தருகின்றாா்.[50] அவா்கள் பரிசுத்தமாயிருப்பதனால் அவா்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்றோ, அல்லது ஞானஸ்நானம் பெற்றதினால் அவா்கள் பரிசுத்தமாயிருக்கிறாா்கள் என்றோ பவுல் கூறவில்லை.

குழந்தை ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாகத் தற்காலத்தில் அநேகரால் சுட்டிக்காட்டப்படும் வேதப்பகுதி மாற்கு 10:13-16 ஆகும்.[51] ஆனால் இங்கு இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட சிறு பிள்ளைகளை ஆசீா்வதிக்கின்றாரே தவிர, அவா்களுக்கு அவா் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. பெற்றோா்களும் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்காக அல்ல, இயேசுகிறிஸ்து அவா்களைத் தொட்டு ஆசீா்வதிப்பதற்காகவே அவா்களை அவரிடம் கொண்டுவந்தனா்.

---

[49] C.Blomberg, *1Corinthians: The NIV Application Commentary*, p. 135.

[50] D.F.Wright, ed., *Baptism: Three Views*, 39. யூதா்களுடைய மொழிவழக்கில் "அசுத்தம்" என்னும் சொல் "உடன்படிக்கைக்கு வெளியில் இருத்தல்" என்னும் அா்த்தத்துடன் உபயோகிக்கப்படுவதனால், இவ்வசனத்தில் "பரிசுத்தம்" என்னும் சொல் "உடன்படிக்கைக்கு உட்பட்டிருத்தல்" என்னும் அா்த்தத்திலேயே உள்ளதாகக் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளவா்கள் கருதுகின்றனா். விசுவாசிக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமானவைகளாக, அதாவது உடன்படிக்கைக்கு உட்பட்டவா்களாக இருப்பதனால் அவா்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும் என்பது இவா்களின் தா்க்கமாயுள்ளது (R.C.Sproul, *Truth We Cofess*, p. 123). ஆனால், புறஜாதியாருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் பரிசுத்தம் என்னும் சொல்லை யூத சடங்காசார அா்த்தத்தில் பவுல் உபயோகித்துள்ளாா் என்று கூறமுடியாது. மேலும், விசுவாசியின் பிள்ளை மாத்திரமல்ல, விசுவாசியோடு சோ்ந்துவாழும் அவிசுவாசக் கணவனும் (அல்லது மனைவியும்) பரிசுத்தமானவனாக இருப்பதாகப் பவுல் குறிப்பிட்டுள்ளாா். எனவே, குழந்தை உடன்படிக்கைக்கு உட்பட்டுள்ளது என்றால் அவிசுவாசக் கணவன் (அல்லது) மனைவியும் உடன்படிக்கைக்கு உட்பட்டவா் என்றும், குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பதுபோலவே அவா்களுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்றும் கூறவேண்டும். ஆனால், குழந்தை ஞானஸ்நான ஆதரவாளா்கள் இவ்வாறு கூறுவதில்லை. எனவே பரிசுத்தமாயிருக்கும் குழந்தைக்கு மாத்திரம் ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு, பரிசுத்தமாயிருக்கும் கணவனுக்கு (அல்லது மனைவிக்கு) ஞானஸ்நானம் கொடுக்க மறுப்பது குழந்தை ஞானஸ்நான ஆதரவாளா்களின் நிலைப்பாடு முரண்பாடானதாய் இருப்பதையே காண்பிக்கின்றது.

[51] J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, pp. 48-55.

எனவே, இப்பகுதியை குழந்தை ஞானஸ்நானத்திற்கு ஆதாரமாகக் காண்பிப்பது வேதத்தில் இல்லாததை இருப்பதாகக் கூறுவதாகவே உள்ளது. மேலும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது இயேசுகிறிஸ்துவின் பழக்கமாக இருந்திருந்தால், குழந்தைகள் அவரிடம் கொண்டுவரப்படுவதை அவருடைய சீஷர்கள் தடுத்திருக்க மாட்டார்கள். உண்மையில், சீஷர்களுடைய செயல் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது இயேசுகிறிஸ்துவின் பழக்கம் அல்ல என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

இயேசுகிறிஸ்து சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்த செயலை ஞானஸ்நானம் கொடுக்கும் செயலாக விளக்குபவர்கள், "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்" என்னும் இயேசுகிறிஸ்துவின் கூற்றை, "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைத் தடைபண்ணாதிருங்கள்"[52] என்று வியாக்கியானம் செய்கின்றனர். சிலர் இப்பகுதியை யோவான் 3:5உடன் தொடர்புபடுத்தி, இது குழந்தை ஞானஸ்நானத்திற்கு முன்னடையாளமான செயலாக இருப்பதாகக் கூறுகின்றனர்.[53] யோவான் 3:5ல் "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்று தெரிவித்த இயேசுகிறிஸ்து, மாற்கு 10:15ல், "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்விரு வசனங்களிலும், ஒருவன் எவ்வாறு தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பான் என்பதைப்பற்றியே இயேசுகிறிஸ்து கூறுவதனால், இரண்டிலும் தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள வழிமுறை ஒன்றாகவே உள்ளது என்பது இவர்களின் தர்க்கமாக உள்ளது. இதனால், "சிறுபிள்ளையைப் போலாகுதல்" என்பதை "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல்" என்றே ஆரம்பகால கிறிஸ்தவர்கள் வியாக்கியானம் செய்தார்கள் என்று இவர்கள் கூறுகின்றனர்.[54] ஆனால், குழந்தை ஞானஸ்நானம் உருவான காலத்திலிருந்து கி.பி.7ம் நூற்றாண்டு வரை எவரும் இவ்வசனங்களைக் குழந்தை ஞானஸ்நா

---

[52] M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, p. 50.
[53] J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, p. 49.
[54] J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, pp. 50-51.

னத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கவில்லை.[55] கி.பி. 16ம் நூற்றாண்டு சபைச் சீர்திருத்தத்தின் பின்பே குழந்தை ஞானஸ்நானத்திற்கான பிரதான வேதப் பகுதியாக இவ்வசனங்கள் உபயோகிக்கப்பட்டன.[56] மேலும், யோவான் 3:5உம் மாற்கு 10:13-16உம் ஒன்றோடொன்று தொடர்புடைய பகுதிகள் அல்ல. இதனால், மாற்கு 10:13-16ஐ குழந்தை ஞானஸ்நானத்திற்கான ஆதாரமாகக் காண்பிப்பது அர்த்த மற்ற ஒரு தர்க்கமாகவே உள்ளது. இப்பகுதியில் இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை அசீர்வதித்தாரே தவிர அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவோ, அல்லது, குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கூறவோ இல்லை. "குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துவது இயேசுகிறிஸ்துவினுடைய போதனையின் ஒரு பகுதியாக இருந்திருந் தால், அவருக்கு இதைவிட சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. இயேசுகிறிஸ்து தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளுக்கு ஆசீர்வாதம் மாத்திரமே அருளியதினால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமில்லை என்பதே அவருடைய சித்தம் என்பது தெளிவாகின்றது."[57]

"கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் தேவனுடைய உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களாக, தேவனுடைய ராட்சியத்திற்குள் இருப்பதனால் அவர்களுக்கு உடன்படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்"[58] என்று வாதிடுபவர்களும் மாற்கு 10:13-16ஐத் தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாக உபயோ கிப்பது வழக்கம்.[59] ஆனால், சிறு பிள்ளைகள் தேவனுடைய ராட்சியத் திற்குள் இருக்கின்றார்கள் என்று இயேசுகிறிஸ்து இவ்வசனத்தில் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவின் கூற்றை சொல்லர்த்தமாக எடுத்து குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தால், தேவனுடைய ராட்சி யத்தில் சிறுபிள்ளைகள் மாத்திரமே இருப்பார்கள் என்று அவர்

---

[55] D.H.J.Gay, *Infant baptism Tested*, p. 170.

[56] D.F.Wright, *What has Infant Baptism done to Baptism?* pp. 72-74; C.Buchanan & M.Vasey, *New Initiation Rites*, p. 7.

[57] C.H.Spurgeon, *Children Brought to Christ, Not to the Font*, pp. 414-415; D.H.J.Gay, *Infant baptism Tested*, p. 168.

[58] இவ்வுபதேசம் 80-85ம் பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளது.

[59] D.J.Engelsma, *The Covenant of God and the Children of God*, pp. 10-11.

கூறுவதாகவே இவ்வசனத்தை நாம் வியாக்கியானம் செய்யவேண்டும். இதனால்தான், தேவனுடைய ராட்சியம் அவர்களுடையது என்று கூறாமல் "தேவனுடைய ராட்சியம் அப்படிப்பட்டவர்களுடையது" என்று இயேசுகிறிஸ்து குறிப்பிட்டுள்ளார் (மாற்.10:14). எனவே, "தேவனு டைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்பவர்கள் எந்த வயதினராய் இருப்பார் கள் என்பதை அல்ல, அவர்கள் எத்தகைய குணமுடையவர்களாக இருப்பார்கள் என்பதையே இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார்."[60] மேலும், "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராட்சி யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மாற்.10:15) என்று இயேசுகிறிஸ்து கூறும்போது, சிறுபிள்ளைகள் ஒரு காரியத்தை நம்பி ஏற்றுக்கொள்வதைப்போல தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பவர்களே தேவனுடைய ராட்சியத்தில் பிரவே சிப்பார்கள் என்பதையே அறியத்தந்துள்ளார்.[61] அதாவது, தங்களுடைய தேவைகளுக்காகப் பெற்றோரைச் சார்ந்து பிள்ளைகள் இருப்பதுபோல, தேவனை முழுமையாக நம்பி வாழும் மனநிலையில் இருப்பவர்களே சிறு பிள்ளையைப்போல தேவனுடைய ராட்சியத்தை ஏற்றுக்கொள் பவர்களாக இருப்பார்கள்.[62] தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்ப தற்கு வயதல்ல, தேவனுடைய ஈவை ஏற்றுக்கொண்டு, அவரை நம்பி வாழும் மனநிலை அவசியம் என்பதையே இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளமையால்,[63] அவருடைய உபதேசத்தைத் திரிபு படுத்திக் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஆதாரமாக இவ்வசனங்களை உபயோகிப்பது தவறாகும். மேலும், குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்கள் இவ்வசனங்களை ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்தவர்கள் பரிசுத்தமுள்ள வர்களாகத் தேவனுடைய ராட்சியத்திற்குள் இருப்பதாகக் கூறுவதும் அர்த்தமற்றது. ஏனெனில், இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவரப்பட்ட பிள்ளைகள் விசுவாசப் பெற்றோருக்குப் பிறந்தவர்கள் அல்ல. பிள்ளைக ளுடைய முதலாவது பிறந்தநாளில் அவர்களை ஆசீர்வதிப்பதற்காக மதப் போதகர்களிடம் கொண்டுவரும் யூதமுறையின்படியே, பெற் றோர்கள் தங்கள் பிள்ளைகளை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டுவந்த

---

60 A.Plummer, *Mark: Cambridge Greek Testament Commentary*, p. 236.
61 J.A.Brooks, *Mark: The New American Commentary*, pp. 159-160.
62 E.P.Gould, *Mark: International Critical Commentary*, p. 188.
63 E.E.Hiebert, *Mark: An Expositional Commentary*, p. 283.

னர்.[64] எனவே, இவ்வசனங்களை ஆதாரமாகக்கொண்டு கிறிஸ்தவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் பரிசுத்தமுள் ளவைகளாகத் தேவனுடைய ராட்சியத்திற்குள் இருப்பதனால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று கூறுவது, வேதாகமத்தில் இல்லாததைப் போதிப்பதாகவே உள்ளது.

புறஜாதியார் யூதர்களாக மாறும்போது அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறையை அடிப்படையாகக்கொண்டே கிறிஸ்தவ ஞானஸ்நானம் உருவானது என்னும் கருத்தும், கிறிஸ்தவ சபை ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்துள்ளது என்னும் தர்க்கத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கப்படுகின்றது. "புறஜாதியார் யூதர்களாக மாறும்போது அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது"[65] என்று கூறும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள், யோவான் ஸ்நானகனும், இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களும் யூதர்களாக இருந்ததினால், யூதருடைய முறையைப் பின்பற்றி கிறிஸ்தவர்களாகுபவர்களின் குழந்தைகளுக்கும் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்திருக்க வேண்டும் என்று வாதிடுகின்றனர்.[66] "புறஜாதியார் யூத மதத்தைத் தழுவும்போது, குழந்தைகள் உட்பட அவர்களுடைய பிள்ளைகள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்"[67] என்பதை உண்மை என்றே நாம் ஏற்றுக்கொண்டாலும், யூதர்களுடைய இத்தகைய பழக்கத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கிறிஸ்தவத்திற்குள் வந்தது என்பது வெறும் ஊகமாக மட்டுமே உள்ளது. இதற்கு எவ்வித சரித்திர ஆதாரங்களும் இல்லை.[68] யோவான் ஸ்நானகனும் இயேசுகிறிஸ்துவும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைப் பற்றிய எவ்வித குறிப்புகளும் புதிய ஏற்பாட்டில் இல்லை. மேலும், ஞானஸ்நானம் பெற்று யூதமதத்திற்குள் ஒருவர் வந்த பின்னர் அவருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் யூதமார்க்கத்தில் இருக்கவில்லை.[69] அதேசமயம், யூதராக மாறும் புறஜாதியாருக்கு

[64] W.Barclay, *Mark: The New Daily Study Bible Commentary*, p. 280.
[65] G.W.Bromiley, *The Baptism of Infants*, p. 1.
[66] J.C.Ryle, *Knots Untied: Expository Thoughts on the Gospels*, p. 100.
[67] G.W.Bromiley, *The Baptism of Infants*, p. 1.
[68] T.E.Watson, *Should Babies be Baptised*? pp. 19-20.
[69] F.A.Malone, *The Baptism of Disciples Alone*, 121.

ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கி.பி.முதலாம் நூற்றாண்டில் இருந்தது என்பதற்கும் போதியளவு ஆதாரங்களும் இல்லை. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் என்பவரின் நூல்களில், யூதராக மாறும் புறஜாதி யார்ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை.[70] எனவே, குழந்தை ஞானஸ் நானம் யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவத்திற்குள் வந்துள்ளதாகவும் கூறமுடியாது.

குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் தர்க்கிப்பதுபோல, முதலாம் நூற்றாண்டில் யூதராக மாறும் புறஜாதியாருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கத்திலிருந்தே கிறிஸ்தவ ஞானஸ்நானம் உருவாகியி ருந்தாலும்கூட, கிறிஸ்தவ ஞானஸ்நானத்தின் சிறப்பம்சங்கள் யூத மார்க்கத்திலிருந்து வரவில்லை. ஏனெனில், ஒரு சடங்காசாரம் இன்னு மொரு மார்க்கத்திலிருந்து எடுக்கப்படும்போது, தேவையான மாற்றங் கள் செய்யப்பட்டே கிறிஸ்தவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால், யூதராக மாறும் புறஜாதியார் குழந்தைகள் உட்பட குடும்பமாக ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதற்காக, கிறிஸ்தவர்களும் அதை அப்படியே முழுமையாகப் பின்பற்றினார்கள் என்று கூறுவது தவறாகும். இயேசுகிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்ட நிலையிலேயே கிறிஸ்தவ ஞானஸ்நானம் உள்ளது. இயேசுகிறிஸ்து குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக் கவில்லை. மனிதரைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்த அவர் (யோவா.4:1), தம்முடைய முறையையே பின்பற்றும்படி சீஷர்களுக்கு அறிவுறுத்தியுள்ளதினால் (மத்.28:19) அவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று கூறுவது அர்த்தமற்றது. மேலும், "ஆதிசபையில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை இராததினால், யூதமார்க்கத்தில் இருந்த குழந்தை ஞானஸ்நானம் முதலாம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவத்திற்குள் வந்தது என்னும் தர்க்கத்தில் எவ்வித உண்மையும் இல்லை."[71] மேலும், யூதராக மாறும் புறஜாதியாருக்கு ஞானஸ்நானம் கொடுத்த யூதர்கள், யூத

---

[70] விருத்தசேதனமும் பலிகளும் யூதராக மாறும் புறஜாதியார் செய்யயவேண்டி யவைகளாக இருந்ததாகவே ஜோசீப்பஸ் குறிப்பிட்டுள்ளார் (F.Josephus, *Antiquitties of the Jews*, 13:9, 20:2).

[71] T.E.Watson, *Should Babies be Baptised?* p. 21.

ராகப் பிறப்பவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை.[72] இதனால், அவர்கள் மத்தியில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் இருக்கவில்லை. எனவே, கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை யூதர்களுடைய பழக்கத்தை அடிப்படையாகக்கொண்டது என்னும் தர்க்கம் எவ்வித ஆதாரமும் அற்றதாகவே உள்ளது. மேலும், "குழந்தை ஞானஸ்நானம் யூதருடைய பழக்கத்தில் இருந்து வந்தது"[73] என்றால் இதை வேதாகம சத்தியமாக ஏற்றுக்கொண்டு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தவறான செயலாகவே உள்ளது.



**தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை இயேசுகிறிஸ்து ஆசீர்வதித்தாரே தவிர அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை**



குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைத் தடைசெய்யும் கட்டளைகளோ அறிவுறுத்தல்களோ, வேதாகமத்திலும் முதலிரு நூற்றாண்டுகளிலும் எழுதப்பட்ட சபைத் தலைவர்களின் நுல்களிலும் இல்லாதிருப்பதனால், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். அதாவது குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்றால் இதைப்பற்றி இயேசுகிறிஸ்துவும், முதலிரு நூற்றாண்டுகளில் பணியாற்றிய கிறிஸ்தவ சபைத் தலைவர்களும் நேரடியாகக் குறிப்பிட்டிருக்கவேண்டும் என்பது இவர்களின் தர்க்கமாய் உள்ளது.[74] ஆனால், குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்களின் ஏனைய தர்க்கங்களைப்போலவே இதுவும் அறிவீனமானதாகவே உள்ளது. ஏனெனில், ஒரு பழக்கத்தைப்பற்றி ஒருவர் எழுதவில்லை என்பதற்காக அவர் அப்பழக்கத்தை அங்கீகரித்துள்ளார் என்று கூறுவதுதவறாகும். நாம் ஏற்கனவே பார்த்தபடி கி.பி. 3ம் நூற்றாண்டிலேயே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் கிறிஸ்தவ சபையில் உருவாகியது. இதனால், தங்களுடைய காலத்தில் இல்லாத ஒரு பழக்கத்தைத் தடைசெய்யும் அவசியம்

[72] A.Edersheim, *Life and Times of Jesus the Messiah Volume 2*, p. 746.
[73] H.Hammond, *Six Queries of Present Use in the Church of England*, p. 195.
[74] J.W.Alexander, *Life of Archibald Alexander*, pp. 204-224.

இயேசுகிறிஸ்துவுக்கும், ஆதி சபைத் தலைவர்களுக்கும் இருக்க வில்லை. இதைப்போலவே வேதாகமத்தில் தடைசெய்யப்படாத தவறான பல சடங்காசார சம்பிரதாயங்கள் கிறிஸ்தவ சபைகளில் உள்ளன. இவை கி.பி.4ம் நூற்றாண்டுக்குப் பின்பே கிறிஸ்தவ சபைக்குள் வந்ததினால், முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டிலும், ஆதிசபைத் தலைவர்களுடைய நூல்களிலும் இவற்றைப் பற்றிய அறிவுறுத்தல்களோ கண்டனங்களோ கொடுக்கப்படவில்லை. எனவே, வேதாகமத்தில் குழந்தை ஞானஸ்நானம் தடைசெய்யப்படாததினால், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்னும் தர்க்கம் அர்த்தமற்றதாகவே உள்ளது. மேலும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கிறிஸ்தவ சபையில் உருவாகியதனால், அதற்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டிலும், சபைத் தலைவர்களுடைய நூல்களிலும் குழந்தை ஞானஸ்நானத்திற்கான ஆதாரங்களைத் தேடுவதிலும் எவ்வித பயனும் இல்லை.

குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் வேதாகமத்தை மாத்திரமல்ல, ஆதிசபைத் தலைவர்களுடைய கூற்றுகளையும் தவறாக வியாக்கியானம் செய்துவருகின்றனர். உதாரணத்திற்கு, அப்போஸ்தலனாகிய யோவானுடைய சீஷர்களில் ஒருவரான "பொலிகார்ப்" (Polycarp) என்பவர், கி.பி.155ல் இரத்தசாட்சியாக மரிப்பதற்கு முன்பு, ரோம அரச அதிகாரிகள் அவரிடம், "இயேசுகிறிஸ்துவை மறுதலித்தால் உம்மை உயிரோடு விட்டுவிடுவோம்" என்று தெரிவித்தபோது, "86 வருஷங்களாக இயேசுவை நான் சேவிக்கின்றேன். அவர் எனக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை" என்று கூறினார்.[75] இதைச் சுட்டிக் காட்டும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள், அவர் 86 வருஷங்களாகக் கிறிஸ்தவராக இருந்துள்ளதினால், குழந்தையாயிருக்கும் போதே ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் என்று கூறுகின்றனர்.[76] ஏனெனில், அவர் 12 அல்லது 14 வயதில் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அவர் மரிக்கும்போது ஏறக்குறைய 100 வயதுடையவராய்

[75] J.B.Lightfoot & J.R.Harmer, trns., *The Apostolic Fathers*, p. 139.
[76] D.G.Dix, *The Theology of Confirmation in Relation to Baptism*, p. 31; *The Oxford Dictionary of the Christian Church*, 701; J.W.C.Wand, *A History of the Early Church to AD.500,* p. 96.

இருந்திருப்பார். அக்காலத்தில் யாரும் அவ்வளவு காலம் வாழ்வ தில்லை என்பதனால், 86 வருஷங்களுக்கு முன்பு குழந்தையாயிருந்த போதே அவர் ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் என்பது இவர்களின் தர்க்கமாயுள்ளது.[77] ஆனால், அக்காலத்தில் நூறு வயது வரை எவரும் வாழ்வதில்லை என்பது உண்மையல்ல. மேலும், தான் 86 வருஷங்களாக இயேசுவை சேவிக்கிறேன் என்னும் கூற்று, எவ்வளவு காலமாக அவர் இயேசுவுக்கு ஊழியம் செய்துள்ளார் என்பதைப்பற்றிய அறிவிப்பாய் உள்ளதே தவிர, அவர் எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றார் என்பதைப்பற்றிய குறிப்பாக இல்லை.

குழந்தை ஞானஸ்நானம் ஆரம்ப காலத்திலிருந்தே கிறிஸ்தவ சபையில் இருந்தது என்று வாதிடுபவர்கள், "சிறுபிராயத்தில் மனிதர் இயேசுவைப் பின்பற்றியதைப் பற்றிய" குறிப்புகளையே குழந்தை ஞானஸ்நானத்தைப்பற்றிய சம்பவங்களாக விளக்கியுள்ளனர். கி.பி.2ம் நூற்றாண்டில் "ஜஸ்டின் மாட்டர்" (Justin Martyr AD.100-165) என்னும் சபைத் தலைவருடைய நூலொன்றில், "அறுபது, எழுபது வயதுடைய பல ஆண்களும் பெண்களும் சிறுபிராயத்திலிருந்தே இயேசுவின் சீஷர்களானார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைச் சுட்டிக்காட்டு பவர்கள், அவர்கள் குழந்தைகளாக இருந்தபோதே இயேசுவின் சீஷர்களாகி ஞானஸ்நானம் பெற்றிருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். மேலும், "இயேசுகிறிஸ்து குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், வயோதிபர்கள் உட்பட சகலரையும் இரட்சிப்பதற்காக வந்தார்" என்னும், கி.பி.2ம் நூற்றாண்டைச் சேர்ந்த "இரேனியஸ்" (Irenaeus AD.130-200) என்னும் சபைத் தலைவருடைய கூற்றைச் சுட்டிக்காட்டி, அக்காலத்தில் குழந்தைகளும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற் றுள்ளதாக வாதிடுகின்றனர்.[78] ஆனால் சபைத் தலைவர்களுடைய நூல்களில் உள்ள "சிறுபிராயம்" என்னும் சொல் சிறுவர்களையே குறிக்கின்றது. இதைக் குழந்தைகள் என்று வியாக்கியானம் செய்யமுடி யாது.[79] இதைப்போலவே, ஞானஸ்நானத்தைப் பற்றி சொல்லப்படாத குறிப்புகளைச் சுட்டிக்காட்டியே குழந்தை ஞானஸ்நானம் ஆரம்பத்திலி ருந்தே கிறிஸ்தவ சபையில் இருந்ததாகப் பலர் கூறிவருகின்றனர்.

[77] M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, p. 52.
[78] M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, p. 52.
[79] H.F.Stander & J.P.Louw, *Baptism in the Early Church*, p. 20.

உதாரணத்திற்கு, கி.பி இரண்டாம் நூற்றாண்டில் "அரிஸ்திதஸ்" (Aristides) என்பவர் எழுதிய நூலையும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் தவறாக வியாக்கியானம் செய்துள்ளனர். இவர் எழுதிய "அரிஸ்திதஸ்சின் அப்போலொஜி" (Apology of Aristides) என்னும் நூலில், "குழந்தை பிறந்த பின்னர் அதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தும் பெற்றோர்கள், அது குழந்தை பிராயத்திலேயே மரித்தாலும், அது பாவமற்றதாக இவ்வுலகத்தைவிட்டுச் சென்றுள்ளதனால் அதற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் "தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்" என்பதைக் "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல்" என்று குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்கள் வியாக்கியானம் செய்கின்றனர்.[80] ஆனால், இது அரிஸ்திதஸ்சின் கூற்றுக்குத் தவறான அர்த்தம் கற்பிக்கும் செயல்முறையாகவே உள்ளது. மேலும், இவருடைய நூலில் குழந்தைகள் ஞானஸ்நானத்தைப்பற்றி அல்ல, கிறிஸ்தவ உபதேசங்களை அறிந்துகொள்ளக்கூடிய வயதுடைய சிறுவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைப்பற்றிய அறிவுறுத்தல்களே உள்ளன.[81]

அப்போஸ்தலருடைய காலத்திற்குப் பின்னர் (அதாவது கி.பி.முதலாம் நூற்றாண்டின் இறுதியில்) குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறை கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்தது என்று கூறுபவர்கள் இதற்கு ஆதாரமாக கி.பி.3ம் நூற்றாண்டு ஆவணங்களையும் காண்பிக்கின்றனர்.[82] ஏனெனில், கி.பி. 3ம் நூற்றாண்டு வரை குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் கிறிஸ்தவ சபைகளில் இருந்ததற்கு எவ்வித ஆதாரங்களும் இல்லை.[83] ஆனால், கி.பி. 3ம் நூற்றாண்டில் குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரித்த சபைத் தலைவர்கள், இப்பழக்கம் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களிடமிருந்து பெறப்பட்ட பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகக் கருதினார்கள்.[84] எனினும், அக்காலத்தில் பாலஸ்தீனாவில் இருந்த சபைகளில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதினால், அங்கு

80 J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, p. 71.
81 Aristides, *Apology* 15:5.
82 M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, p. 51.
83 K.Aland, *Did the Early Church Baptize Infants*, pp. 42-52.
84 Origen, *Commentary on Romans* 5:9 in *Father's of the Church Volume 103*.

இப்பழக்கம் ஆரம்பத்திலிருந்தே இருந்திருக்கவேண்டும் என்னும் ஊகத்தினாலேயே கி.பி.3ம் நூற்றாண்டில் அலெக்சாந்திரியாவிலிருந்த சபைத் தலைவர் "ஓரிகன்" (Origen) என்பவர், குழந்தை ஞானஸ்நானத்தைச் "சபையின் பாரம்பரியம்" என்றும், "அப்போஸ்தலரிடமிருந்து பெறப்பட்ட பாரம்பரியம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.[85] முதலாம் நூற்றாண்டிலேயே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் கிறிஸ்தவ சபையில் இருந்தது என்று கருதுபவர்கள், ஓரிகனின் கூற்றைத் தங்களுடைய தர்க்கத்திற்கு ஆதாரமாக உபயோகிக்கின்றனர்.[86] ஆனால், முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை. இதைப்போலவே, இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபைத் தலைவர்களினால் எழுதப்பட்ட புத்தகங்களிலும் ஞானஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகளில் குழந்தைகள் ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனால், குழந்தை ஞானஸ்நானத்தை அப்போஸ்தலரிடமிருந்து பெற்ற பாரம்பரியம் என்று ஓரிகன் கூறுவது அவருடைய ஊகமே தவிர உண்மை அல்ல.

## (3)



## குழந்தை ஞானஸ்நானத்தின் அறிவீனமான தர்க்கங்கள்

குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்தும் தர்க்கங்கள் அனைத்தும் எவ்வித ஆதாரமும் அர்த்தமும் அற்றவைகளாக இருப்பதோடு, குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய உபதேசங்களும் வேதாகமத்தை முரண்படுத்தும் அறிவீனமான போதனைகளாகவே உள்ளன. தற்காலத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பல சபைகள் "ஞானஸ்நானத்தின் மூலம் மறுபிறப்பு" (Baptisamal Regeneration) என்னும் வேதப்புரட்டு உபதேசத்தையே போதிக்கின்றன. அதாவது, ஞானஸ்நானம் பெறும் செயலே ஒருவனை மறுபடியும் பிறக்க வைக்கின்றது அல்லது இரட்சிக்கின்றது என்பதே இச்சபைகளின் போதனையாயுள்ளது. உண்மையில், "ஞானஸ்நானத் தண்ணீருக்கு

85 K.Aland, *Did the Early Church Baptize Infants*, pp. 48-49.
86 J.Jeremias, *Infant Baptism in the First Four Centuries*, p. 66.

மனிதரை இரட்சிக்கும் ஆற்றல் உள்ளது என்னும் எண்ணமே குழந்தை ஞானஸ்நானம் கிறிஸ்தவ சபையில் அங்கீகரிக்கப்பட்டதற்கான காரண மாக உள்ளது."[88] ஆனால், நாம் ஏற்கனவே பார்த்தபடி ஞானஸ்நானம் இரட்சிப்புக்கான அடையாளமாகவே உள்ளது.[89] அதாவது, இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிப்படையும் நபர், தன்னு டைய வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்படையாகக் காண்பிக்கும் ஒரு அடையாளச் செயலாகவே ஞானஸ்நானம் உள்ளது. ஞானஸ்நா னத்திற்கு எவரையும் இரட்சிக்கும் வல்லமை இல்லை. இயேசுகிறிஸ் துவை விசுவாசிப்பதனால் மாத்திரமே மனிதர் இரட்சிப்படைய முடியும் என்றே வேதாகமம் கூறுகிறது (அப்.16:30-31, ரோ.10:9, எபே.2:8, யோவா.3:16-18, 3:36).[90] இரட்சிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் செயலா கவே வேதாகமத்தில் ஞானஸ்நானம் சித்தரிக்கப்பட்டுள்ளது (மத்.28:19, மாற்.16:16, அப்.2:38, 8:12-13, 8:36-37, 16:30-33). எனவே, ஜென்ம பாவம் கழுவப்பட்டு, அவை பரலோகத்துக்குச் செல்லும் தகுதியைப் பெறுவதற்காகக் கத்தோலிக்க சபை குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது அறிவீனமான செயலாகவே உள்ளது.[91] "ஒருவன் இரட்சிக்

[88] B.W.Newten, *The Doctrine of Scripture Respecting Baptism Briefly Considered*, pp. 36-37.

[89] பக்கங்கள் 63 முதல் 79 வரை.

[90] "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித் தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோ.10:9) என்றும் "கர்த்தராகிய இயேசுகிறிஸ் துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" என்றும் கூறும் வேதாகமம் (அப்.16:30-31), "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே.2:8) என்பதை அறியத்தருகிறது. மேலும், "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16) என்றும், "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவா சியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாச முள்ள வனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோவா.3:18) என்றும், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவ னைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவா.3:36) என்றும் கூறுகிறது.

[91] ஞானஸ்நானம் பெறாமல் மரிக்கும் குழந்தைகள் பரலோகத்துக்குச் செல்வ தில்லை, அவை "லிம்பஸ் இன்ஃபன்டியம்" (*limbus Infantium*) என்னும் இடத்திற்குச் செல்கின்றன என்று கத்தோலிக்கச் சபை போதிக்கின்றது.

கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமானது”[92] என்றும், “ஞானஸ்நானத்தின் மூலம் கிருபை அருளப்படுகின்றது”[93] என்றும் கூறும் கத்தோலிக்க சபை, “பாவத்தை அழித்து உள்ளான பரிசுத்தத்தை உருவாக்கும் வல்லமை ஞானஸ்நானத்திற்கு உள்ளது”[94] என்றும், “ஞானஸ்நானத்தின் மூலமே மனிதர் மறுபிறப்படைகின்றனர்”[95] என்றும் போதிக்கின்றது. இயேசுகிறிஸ்துவின் மூலமே மனிதர் இரட்சிப்படைகின்றனர் என்பதைக் கத்தோலிக்க சபை நம்புகின்ற போதிலும், “இயேசுகிறிஸ்துவின் கிருபை ஞானஸ்நானத்தின் மூலமே அருளப்படுகின்றது”[96] என்று இச்சபை கூறுகிறது. ஆனால், ஞானஸ்நானத்திற்கு இத்தகைய வல்லமை இல்லை. “ஞானஸ்நானம் நீதியின் கிரியையாகவே உள்ளது (மத்.3:15). வேதாகம சத்தியத்தின்படி, நீதியின் கிரியைகளினால் அல்ல, தேவனுடைய கிருபையினாலேயே மனிதர் இரட்சிக்கப்படுவதனால் (தீத்.3:5, எபே.2:8-9) ஞானஸ்நானம் எவரையும் இரட்சிப்பதில்லை.”[97]

கத்தோலிக்க சபை மாத்திரமல்ல, கி.பி.16ம் நூற்றாண்டு சபைச் சீர்திருத்தத்தினால் உருவான புரட்டஸ்தாந்து சபைகளும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதோடு, ஞானஸ்நானத்தின் மூலம் குழந்தைகள் இரட்சிக்கப்படுகின்றன என்றும் போதிக்கின்றன. ஞானஸ்நானத்தைப் பற்றிய கத்தோலிக்க சபையின் உபதேசங்களைப் போலவே புரட்டஸ்தாந்து சபைகளின் போதனைகளும் வேதாகமத்தை முரண்படுத்தும் அறிவீனமான தர்க்கங்களாகவே உள்ளன. கி.பி. 16ம் நூற்றாண்டு சபை சீர்திருத்தவாதிகள் கத்தோலிக்க சபையின் சடங்காசார வழிபாட்டு முறைகளும், போப்பாண்டவரின் உபதேசங்களும் வேதாகமத்தை முரண்படுத்தும் தவறான போதனைகள் என்பதைச் சுட்டிக்காட்டி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமே மனிதரால் இரட்சிக்கப்பட முடியும் என்று கூறினாலும், ஞானஸ்நானத்தைப் பொறுத்தவரை ரோம சபையின் போதனைகளே அவர்களுடைய உபதேசங்களாக இருந்தன. இதனால் தங்களுடைய காலத்தில்

[92] H.Denzinger, *Sources of Catholic Dogma*, p. 268.
[93] L.Ott, *Fundamentals of Catholic Dogma*, 354.
[94] L.Ott, *Fundamentals of Catholic Dogma*, 355.
[95] R.Rhodes, *Reasoning from the Scriptures with Catholics*, p. 165.
[96] H.Denzinger, *Sources of Catholic Dogma*, p. 268.
[97] N.Geisler & R.MacKenzie, *Roman Catholics and Evangelicals,* p. 260.

குழந்தை ஞானஸ்நானத்தை எதிர்த்த குழுவினரை வேதப்புரட்டர்களாகக் கருதிய சீர்த்திருத்தவாதிகள்,[98] வேதாகமத்தின் அடிப்படையில் ஞானஸ்நானத்தைச் சீர்த்திருத்தாமல் ரோம சபையைப் போலவே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததோடு,[99] ஞானஸ்நானத்தின் மூலம் மறுபிறப்பு என்னும் உபதேசத்தையும் போதித்தனர்.[100]

கிறிஸ்தவ சபையின் சீர்திருத்தவாதியாகக் கருதப்படும் மார்ட்டின் லூத்தர் "ஞானஸ்நானத்தின் மூலமே மனிதருக்கு புதிய பிறப்பு கிடைக்கின்றது"[101] என்று போதித்ததோடு, "குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது அவைகளுக்கு நீதியும் இரட்சிப்பும் அருளப்படுகின்றது"[102] என்று கூறினார். ஏனைய சீர்திருத்தவாதிகளைப் போலவே மாட்டின் லூத்தரும் "இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலமே மனிதர் இரட்சிப்படைகின்றனர்" என்றும், "விசுவாசமில்லாமல் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித பயனும் அர்த்தமுமில்லை"[103] என்றும், "விசுவாசிப்பவனுக்கு மாத்திரமே ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்"[104] என்றும் அறிவித்தாலும், இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க முடியாத நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்ததோடு, "ஞானஸ்நானம் பெறும் குழந்தைகள் விசுவாசிக்கின்றன" என்றும், "ஞானஸ்நான ஆராதனையில் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்தின் மூலம் குழந்தைக்குத் தேவனால் விசுவாசம் அருளப்படுகின்றது" என்றும் போதித்ததோடு,[105] அப்போஸ்தலருடைய காலத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பழக்கம் இருந்துள்ளது என்றும் கருதினார்.[106]

குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்தும் மாட்டின் லூத்தரின் போதனைகள் அறிவீனமான தர்க்கங்களாகவே உள்ளன. உண்மை

---

[98] J.Pelikan, *Spirit Versus Structure: Luther & the Institutions of the Church*, 78.
[99] J.M.Ross, "The Theology of Baptism in Baptist History" in *The Baptist Quarterly*. 3 (July 1953), p. 111.
[100] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 55.
[101] M.Lurther, *A Commentary on Paul's Epistle to the Galatians*, pp. 340-341.
[102] M.Lurther, *A Commentary on Paul's Epistle to the Galatians*, pp. 234-235.
[103] J.Dillenberger, *Martin Luther: Selections from His Writings*, p. 293.
[104] M.Luther, *Luther's Works Volume 51*, p. 185.
[105] T.R.Schreiner &S.D.Wright, *Believer's Baptism*, pp. 193-195.
[106] J.Pelikan, *Spirit Versus Structure,* pp. 90-93.

யில், "குழந்தைகளும் விசுவாசிக்கின்றன" "குழந்தைகளுக்கு விசுவாசம் அருளப்படுகின்றது" என்னும் கூற்றுகள் வேதாகமத்தை முரண்படுத்தும் போதனைகளாகவே உள்ளன. கி.பி.16ம் நூற்றாண்டில் ஜெர்மன் தேசத்தில் மார்ட்டின் லூத்தரின் சீர்த்திருத்தப் பணியினால் உருவான "லூத்தரன் சபை" இன்றுவரை குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வருகின்றது. மார்ட்டின் லூத்தரைப் போலவே ஞானஸ்நானத்திற்கு விசுவாசத்தின் அவசியத்தை உணர்ந்துள்ள இச்சபை, "குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பெற்றோரின் அல்லது சபையின் விசுவாசம் ஞானஸ்நானம் பெறும் குழந்தையின் விசுவாசமாக இருப்பதாகக்" கருதுகிறது.[107] ஆனால், பெற்றோருடைய விசுவாசத்தை ஞானஸ்நானம் பெறும் குழந்தையின் விசுவாசமாகக் கருதுவது அறிவீனமான நம்பிக்கையாகும். கி.பி.16ம் நூற்றாண்டில் சுவிட்சர்லாந்து நாட்டில் சபையைச் சீர்திருத்திய "உல்ரிக் ஸ்விங்ளி" (Ulrich Zwingli) என்பவர் ஆரம்பத்தில் குழந்தை ஞானஸ்நானம் தவறானது என்று கருதினாலும், பிற்காலத்தில் இதன் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்டார்.[108] எனினும், மார்ட்டின் லூத்தரைப்போல இவர் விசுவாசத்தை ஞானஸ்நானத்துடன் தொடர்புபடுத்தாமல், ஞானஸ்நானத்தைப் புதிய உடன்படிக்கையின் அடையாளமாக விளக்கினார். அதாவது, பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டதனால், புதிய உடன்படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானம் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பது இவரது தர்க்கமாயிருந்தது.[109]

கி.பி.16ம் நூற்றாண்டின் இன்னுமொரு முக்கியமான சபைச் சீர்திருத்தவாதியும், சீர்திருத்த இறையியலின் தந்தையுமாகக் கருதப்படும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த "ஜோன் கல்வின்" (John Calvin) என்பவரும் குழந்தை ஞானஸ்நானத்தைப் புதிய உடன்படிக்கையின் அடையாளமாகவும் முத்திரையாகவும் கருதினார். "கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமானவைகளாகவும், தேவனுடைய நித்திய உடன்படிக்கைக்கு உட்பட்டவைகளாகவும் இருக்கின்றன" என்று போதித்த இவர், "இக்குழந்தைகள் பிறப்பதற்கும் முன்பே

---

107 F.Pieper, *Christian Dogmatics Volume 3*, p. 285.
108 G.W.Bromiley, tr. *Library of Christian Classics Volume 24*, p. 130.
109 S.M.Jackson, ed., *Ulrich Zwingli Selected Works*, pp. 23-236.

(தாயின் கருவில் இருக்கும்போதே) தேவனுடைய சபைக்கு உட்பட்டவைகளாக இருக்கின்றன” என்றும், “குழந்தைகள் பிறந்தவுடனேயே புனித ஞானஸ்நானத்தின் அடையாளத்தினால் தேவன் அவைகளுக்கு முத்திரை போடுகிறார்” என்றும் விளக்கினார்.[110] மனிதர் அனைவரும் பாவிகளாகவே பிறக்கின்றனர் என்னும் வேதாகம சத்தியத்தை (சங். 51:5, 58:3, எபே.2:1-3) வலியுறுத்திய ஜோன் கல்வின், குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காகக் கிறிஸ்தவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் பரிசுத்தமானவைகளாக இருப்பதாகவும், பிறப்பதற்கும் முன்பே அவைகள் சபையின் அங்கத்தினர்களாக இருப்பதாகவும் போதித்தது வேதாகமத்தை மாத்திரமல்ல, அவருடைய உபதேசத்தையே முரண்படுத்தும் அறிவீனமான போதனையாகவே உள்ளது. உண்மையில், ஞானஸ்நானத்தைப் பற்றிய இவருடைய போதனை முன்னுக்குப் பின் முரணானதாகவே உள்ளது. ரோம சபையின் உபதேசங்கள் தவறானவை என்பதைச் சுட்டிக்காட்டும்போது இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று போதித்த இவர், பிற்காலத்தில் விசுவாசிக்க முடியாத நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் ஞானஸ்நானம் சரியானது என்று குறிப்பிட்டுள்ளார்.[111]



வேத ஆதாரம் இல்லாத நிலையில் புரட்டஸ்தாந்து சபைகள் ரோம சபையிலிருந்து சுவீகரித்துக்கொண்ட பாரம்பரியமே குழந்தை ஞானஸ்நானம்.



ஞானஸ்நானத்தைப்பற்றிய சீர்த்திருத்தவாதிகளின் போதனை முன்னுக்குப் பின் முரணானதாகவே உள்ளது. மாட்டின் லூத்தரின் போதனைகளிலும் இத்தகைய முரண்பாடு உள்ளது. “விசுவாசமில்லாத ஞானஸ்நானம் அர்த்தமற்றது” என்று ஆரம்ப காலத்தில் போதித்த மார்ட்டின் லூத்தர், பிற்காலத்தில் குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காக “ஞானஸ்நானம் விசுவாசத்தில் சார்ந்திருப்பதில்லை”[112] என்று

[110] J.Calvin, *Institutes of the Christian Religion Volume 2*, pp. 525,535.
[111] F.Wendel, *Calvin: Origin & Development of His Religious Thought*, 318-329
[112] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believers Baptism,* p. 195.

கூறத்தொடங்கினார். உண்மையில், தங்களுடைய காலத்தில் உருவான "அனாபெப்டிஸ்ட்" (Anabaptist) என்னும் குழுவினரது போதனை தவறானது என்று நிரூபிப்பதற்காகவே,[113] அக்குழுவினர் போதித்த அனைத்தையும் வேதப்புரட்டு உபதேசமாகச் சீர்திருத்தவாதிகள் கருதினார்கள். இதனால்தான், அக்குழுவினர் தவறாகக் கருதிய குழந்தை ஞானஸ்நானத்தைச் சீர்திருத்தவாதிகள் சரியானது என்று ஏற்றுக்கொண்டனர்.[114] உண்மையில், "வேதாகம ஆதாரம் இல்லாத நிலையில் சீர்திருத்தவாதிகள் ரோம சபையிலிருந்து சுவீகரித்துக் கொண்ட பழக்கமாகவே குழந்தை ஞானஸ்நானம் உள்ளது."[115] ஞானஸ்நானத்தைப்பற்றி சீர்திருத்தவாதிகள் சரியான விளக்கங்களைக் கொடுத்துள்ளபோதிலும், அவர்கள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது, ஞானஸ்நானத்தைப்பற்றிய அவர்களுடைய விளக்கங்களையே முரண்படுத்தும் அறிவீனமானச் செயலாகவே உள்ளது.[116] உண்மையில், ஞானஸ்நானத்தைப்பற்றிய தங்களுடைய போதனையையே முழுமையாக மறந்த நிலையில் சீர்த்திருத்தவாதிகள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்துள்ளனர்.[117]

கி.பி.16ம் நூற்றாண்டு சபைச் சீர்திருத்தவாதிகள், அதுவரை காலமும் ரோம சபை கைக்கொண்டுவந்த குழந்தை ஞானஸ்நானத்தைத் தங்களுடைய "உடன்படிக்கையின் இறையியலுக்குள்" (Covenant Theology) கொண்டுவந்தனர்.[118] குழந்தை ஞானஸ்நானம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் எவரும் இதை ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் தொடர்புபடுத்தவில்லை.[119] ஆனால் சபைச் சீர்த்திருத்தவாதிகள் ரோம சபையிலிருந்த குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காக இதை ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனத்துடன் தொடர்புபடுத்தினார்கள்.[120]

[113] கி.பி16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ரேம சபையின் போதனைகளும், சடங்காசார வழிபாட்டு முறைகளும் சீர்த்திருத்தப்பட்ட காலத்தில் உருவான ஒரு குழுவினரே "அனாபெப்டிஸ்ட்" என்று அழைக்கப்படுகின்றனர்.
[114] D.F.Wright, *What has Infant Baptism Done to Baptism?* pp. 19-20.
[115] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 45.
[116] D.F.Wright, "Children, Covenant, and the Church" in *Themelios*. 29/2, p. 33-35.
[117] K.Barth, *The Teaching of the Church Regarding Baptism*, p. 48.
[118] H.Davies, *Worship and Theology in England*, pp. 311-313.
[119] H.F.Stander & J.P.Louw, *Baptism in the Early Church*, pp. 18,37,69,80,185.
[120] J.W.Riggs, *Baptism in the Reformed Tradition*, p. 122.

உண்மையில், "கத்தோலிக்க சபையிலிருந்து வந்துள்ள குழந்தை ஞானஸ்நானத்திற்கு வேதாகம ஆதாரத்தைக் காண்பிப்பதற்காகவே சீர்திருத்தவாதிகள் இவ்வாறு போதித்துள்ளனர்."[121] எனவே, இது வேதாகமத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு உபதேசமாக அல்ல, குழந்தை ஞானஸ்நானத்தை நியாயப்படுத்துவதற்காக வேதாகம வசனங்களைத் திரிபுபடுத்திய தவறான செயல்முறையாகவே உள் ளது. சீர்திருத்தவாதிகள் "வேதாகமத்தின் இரு ஏற்பாடுகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசங்களைக் கருத்திற்கொள்ளாதவர்க ளாகவே குழந்தை ஞானஸ்நானத்தைப் பற்றிய தங்களுடைய உபதே சத்தை உருவாக்கியுள்ளனர்."[122] உண்மையில், ரோமர், கலாத்தியர், எபிரேயர் என்னும் நிருபங்களின் போதனைகளைக் கருத்திற்கொள்ளாத வர்களாக சீர்திருத்தவாதிகள் குழந்தை ஞானஸ்நானத்தை ஆபிரகாமு டன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் அடையாளத்துடன் தொடர்பு படுத்தியுள்ளனர்.[123] இதனால் தற்காலத்தில் இவர்களின் உபதேசத்தைப் பின்பற்றும் சபைகள், ஞானஸ்நானத்தின் மூலம் குழந்தைகளுக்குத் தேவனுடைய கிருபை அருளப்படுகின்றது என்றும்,[124] ஜீவபுத்தகத்தில் அவர்களுடைய பெயர்கள் எழுதப்படுகின்றன என்றும்,[125] ஆவியானவர் அவர்களை மறுபடியும் பிறக்கவைக்கின்றார் என்றும்,[126] மனந்திரும்புதலி னதும் விசுவாசத்தினதும் வித்து குழந்தைகளில் உருவாக்கப்படுகின் றது என்றும்,[127] குழந்தைகள் பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்படுத லையும் பெற்றுக்கொள்கின்றன என்றும் போதிக்கின்றன.[128] ஆனால், ஞானஸ்நானத்தின் மூலம் குழந்தைகள் இத்தகைய ஆசீர்வாதங்க ளைப் பெற்றுக்கொள்கின்றன என்பதற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை.

கி.பி.16ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சபையில் ஏற்பட்ட சீர்த்திருத்தம், சடங்காசார வழிபாட்டிலிருந்தும், மானிட கிரியையை அடிப்படையாகக்

[121] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 79.
[122] J.H.Yoder, "The Recovery of the Anabaptist Vision" in *Radical Reformation Reader*. 18 (1971), pp. 19-20.
[123] L.Verduin, *The Reformers and Their Stepchildren*, pp. 210-211.
[124] *The Westminster Confession of Faith*, 28:6
[125] C.Hodge, *Systematic Theology Volume 3*, p. 388.
[126] A.Alexander, *Thoughts on Religious Experience*, pp. 12-13.
[127] J.Calvin, *Institutes of the Christian Religion Volume 2*, p. 543.
[128] D.J.Engelsma, *Covenant of God & the Children of Believers*, p. 12-13, 17-18.

கொண்ட இரட்சிப்பிலிருந்தும் மக்களை வேதாகமத்தின் சத்தியத்திற் குள் வழிநடத்தினாலும், ஞானஸ்நானத்தைப் பொறுத்தவரை சீர்திருத்த சபைகளும் அறிவீனமான நிலையிலேயே உள்ளன. நாம் ஏற்கனவே பார்த்தபடி, பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் அடையாளமாக விருத்தசேதனம் இருந்ததுபோல புதிய ஏற்பாட்( உடன்படிக்கையின் அடையாளமாக ஞானஸ்நானம் இருப்பது உண்மை என்றாலும்,[129] "பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் குழந்தைகளுக்குச் செய்யப்பட்டதனால், புதிய ஏற்பாட்டு உடன்படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானமும் குழந்தைகளுக்கு கொடுக்கப்படவேண்டும்"[130] என்று இச்சபைகள் வாதிடுவது அறிவீனமானது. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப் பதைப்பற்றிய அறிவுறுத்தல்கள் எதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லை என்பதை இச்சபைகள் ஏற்றுக்கொண்டுள்ள போதிலும்,[131] தேவனுடைய உடன்படிக்கை குழந்தை ஞானஸ்நானத்தை அவசியமாக்குகிறது என்று இச்சபைகள் கருதுகின்றன.[132] இச்சபைகளைப் பொறுத்தவரை, தேவன் ஆபிரகாமின் காலத்திலேயே சபையை உருவாக்கி, உடன் படிக்கையின் அடையாளத்தைக் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படி செய்துள்ளார். இதனால், தற்கால சபையிலும் உடன்படிக்கையின் அடையாளம் குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று இச்சபைகள் கருதுகின்றன.[133] புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் ஆவிக்குரிய இஸ்ரவேலராக இருப்பதனால், இவர்கள் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள் என்றும், இதனால் இவ்வு டன்படிக்கையில் குழந்தைகளுக்கும் உடன்படிக்கையின் அடையாளம் கொடுக்கப்படவேண்டும் என்றும், புதிய ஏற்பாட்டில் உடன்படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானம் ஆவிக்குரிய விருத்தசேதனமாக உள்ளது என்றும் இச்சபைகள் விளக்குகின்றன.[134] அதாவது, ஞானஸ் நானம் புதிய உடன்படிக்கையின் அடையாளமாக இருப்பதனால்,

---

[129] பக்கங்கள் 80 முதல் 85 வரை.

[130] M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, p. 58; W.Hendriksen, *Colossians: New Testament Commentary*, pp. 86,116.

[131] J.Murray, *Christian Baptism*, p. 69.

[132] T.R.Schreiner & S.D.Wright, ed., *Believer's Baptism*, p. 97.

[133] B.B.Warfield, "The Problems of Infant Baptism" p. 408.

[134] L.Berkhof, *Systematic Theology*, pp. 632-634; R.R.Booth, *Children of the Promise: The Biblical Case for Infant Baptism*, pp. 9-10.

இவ்வுடன்படிக்கைக்கு உட்பட்டவர்களாயிருக்கும் விசுவாசிகளின் குழந்தைகளுக்கும் உடன்படிக்கையின் அடையாளமான ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என்பது இச்சபைகளின் தர்க்கமாயுள்ளது.

தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலம் செய்த புதிய உடன்படிக்கை, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆபிரகாமுடன் செய்யப்பட்ட உடன் படிக்கையின் தொடர்ச்சியாக உள்ள போதிலும் (கலா.3:6-29),[135] புதிய உடன்படிக்கையில் சில புதிய அம்சங்களும் இருப்பதை நாம் கருத்திற்கொள்ளவேண்டியது அவசியம்.[136] இது பழைய உடன் படிக்கையைப்போல இருக்காது என்று தேவனே தெரிவித்துள்ளார் (எரே.31:31-32). இவ்வுடன்படிக்கையில் விருத்தசேதனத்திற்குப் பதிலாக ஞானஸ்நானம் இருப்பது மாத்திரமல்ல, இது முழுமையாக ஆவிக்கு ரிய அம்சங்களைக் கொண்டுள்ளது. தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில் பூகோளரீதியான ராட்சியமும், உலக செல்வங்க ளும், பெருந்திரளான சந்ததியும் ஆசீர்வாதங்களாக இருந்ததோடு (ஆதி.12:1-3, 15:4-5, 15:18-21, 17:1-8, 18:18-19, 22:16-18), ஆபிரகாமின் வம்சத்தினரே இவ்வுடன்படிக்கையின் அங்கத்தினராக இருந்தனர் (ஆதி.26:3-5, 28:13-15, 35:9-12). ஆனால், புதிய உடன்படிக்கையில் ஆபிரகாமின் வம்சத்தினர் மட்டுமல்ல, முழு உலகத்தினரும் உள்ளடக் கப்பட்டுள்ளதோடு (கலா.3:8),[137] இதன் ஆசீர்வாதங்கள் பெரும்பாலும்

---

[135] கலாத்தியர் 3ம் அதிகாரத்தில் “ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக” (கலா.3:7) என்றும், “அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகா முடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்” (கலா.3:9) என்றும், “ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தி னாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று” (கலா.3:14)” என்றும், “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாரா யும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்” (கலா.3:29) என்றும் கூறுகிறது.

[136] தேவன் மோசேயின் மூலம் செய்த உடன்படிக்கையே காலவரையறைக்கு உட்பட்டதாயுள்ளது. மோசேயின் காலம் முதல் இயேசுகிறிஸ்துவின் காலம் வரைக்குமே அவ்வுடன்படிக்கை நடைமுறையில் இருந்தது (லூக்.16:16).

[137] “தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்க ளாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது” என்று கலாத்தியர் 3:8 கூறுகிறது.

ஆவிக்குரியவைகளாகவே உள்ளன (எபே.1:3).[138] மேலும், ஆபிரகாமின் உடன்படிக்கையைப்போல எவரும் பிறப்பினால் புதிய உடன்படிக்கை யின் அங்கத்தினராகுவதில்லை. தனிப்பட்ட ரீதியாக இயேசுகிறிஸ் துவை விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகுபவர்களே (யோவா.1:12-13) புதிய உடன்படிக்கையின் அங்கத்தினராகின்றனர்.[139] அதாவது, ஆபிரகாமின் வம்சத்தில் வந்தவர்கள் அல்ல, "விசுவாச மார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளாக இருக்கின்றனர்" (கலா.3:7). இதனால், ஆபிரகாமின் வம்சத்தில் வந்தவர் களும், ஆவிக்குரிய பிரகாரமாகத் தேவனுடைய ராட்சியத்திற்குள் மறுபடியுமாகப் பிறக்கவேண்டியவர்களாய் இருந்தனர். இதனால்தான், ஆபிரகாமின் வம்சத்தில் வந்து யூதமார்க்கப் போதகனாயிருந்த நிக் கொதேமுவிடம், அவன் தேவனுடைய ராட்சியத்திற்குள் பிரவேசிப்ப தற்கு மறுபடியும் பிறக்கவேண்டும் என்று இயேசுகிறிஸ்து கூறினார் (யோவா.3:3-7). எனவே இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகுபவர்களே (யோவா.1:12) புதிய உடன்ப டிக்கையின் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். இதனால் குழந்தைகள் அல்ல, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்களே புதிய உடன்படிக்கை யின் அங்கத்தினர்களாக ஞானஸ்நானம் பெறுவதற்குத் தகுதியானவர் களாக இருக்கின்றனர்.

---

138 "அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தி னாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" என்பதை எபேசியர் 1:3 அறியத்தருகின் றது. தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையில் அவனுக்கு பூகோள ரீதியான ஒரு தேசம் வாக்களிக்கப்பட்டது (ஆதி.15:18-21). ஆனால், புதிய உடன்படிக்கைக்குட்பட்ட கிறிஸ்தவர்களுடைய குடியுரிமை பரலோகத்தில் இருப்பதனால் (பிலி.3:20) நாம் இவ்வுலகத்தில் அந்நியரும் பரதேசிகளாகவும் இருக்கின்றோம் (1பேது.1:17, 2:11). மேலும், ஆபிரகாமுக்கு உலக செல்வம் ஆசீர்வாதமாக வாக்களிக்கப்பட்டது (ஆதி.12:13). ஆனால் புதிய உடன்படிக் கையில் நமது அன்றாட தேவைகள் சந்திக்கப்படும் என்னும் வாக்குத்தத்தம் அருளப்பட்டுள்ளது. இதனால், "இவ்வுலகச் செல்வங்களை அல்ல, பரலோகத் திலுள்ள ஆவிக்குரிய செல்வங்களை நாடும்படியும் (கொலோ.3:1-4, 2கொரி. 4:17-18), பொக்கிஷங்களை பூமியில் அல்ல, பரலோகத்தில் சேர்த்துவைக்கும் படியும்" (மத்.6:19-20) புதிய ஏற்பாடு கூறுகிறது. நமக்கு இவ்வுலகில் அல்ல, பரலோகத்திலேயே "அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரம் வைக்கப்பட்டுள்ளது" (1பேது.1:4-5). அத்தோடு, ஆபிரகாமின் வம்சம் திரளாய் பெருகும் என்றும் வாக்களிக்கப்பட்டது. ஆனால் புதிய உடன்படிக்கையில் விசுவாசிகளின் வம்சம் அல்ல, இரட்சிக்கப்படும் மக்களி னால் சபையினரின் எண்ணிக்கையே அதிகரிக்கின்றது.

139 D.F.Wright, ed., *Baptism: Three Views*, p. 41.

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்கள், ஞானஸ்நானத்தைப் போலவே விருத்தசேதனமும் "இரட்சிப்பின் அடையாளமாக" இருப்பதா கக் கருதுவதோடு இதற்கு ஆதாரமாக ரோமர் 4:11ஐ சுட்டிக்காட்டுகின் றனர்.[140] ரோமர் 4:11ல் ஆபிரகாம் "விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசே தனமாகிய அடையாளத்தைப் பெற்றான்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், பழைய ஏற்பாட்டில் தேவன் ஆபிரகாமுடன் செய்த உடன் படிக்கையின் அடையாளமாகவே விருத்தசேதனம் உள்ளது (ஆதி.17:9-14).[141] ஆனால், இந்த அடையாளம், "ஆபிரகாம் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு" முத்திரையாக இருப்பதாகவே ரோமர் 4:11 கூறு கிறது. அக்காலத்தில் ஒரு பொருளின் அல்லது ஆவணத்தின் நிஜத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும், உரிமையைக் குறிப்பிடுவ தற்கும் முத்திரை உபயோகிக்கப்பட்டது.[142] எனவே, தேவன் ஆபிரகாமு டன் செய்த உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம், பதினான்கு வருஷங்களுக்கு முன்பு அவன் "விசுவாசத்தினாலே அடைந்த நீதி" நிஜமானது என்பதையும்,[143] அவன் தேவனுடையவன் என்பதையும் உறுதிப்படுத்தும் முத்திரையாக இருந்தது.[144] மேலும், ஆபிரகாம் "விசுவாசத்தினால் அடைந்த நீதி" அவனுடைய இரட்சிப்பா கவே உள்ளபோதிலும்,[145] இது ஆபிரகாமுக்கு மட்டுமே கிடைத்த ஆசீர்வாதமாகவே உள்ளது.[146] ஏனெனில், அவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்ததினாலேயே நீதிமானாக்கப்பட்டான் (ரோ.4:3).

---

140 J.Sartelle, *What Christian Parents Should Know About Infant Baptism*, p. 4.

141 ஆதியாகமம் 17:11ல் "உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

142 M.L.Lloyd-Jones, *God's Ultimate Purpose*, pp. 245-265.

143 ஆதியாகமம் 12ம் அதிகாரத்திலேயே ஆபிரகாம் தேவனுடைய வார்த் தையை விசுவாசித்து நீதிமானாகினான். ஆனால் பதினான்கு வருஷங்களின் பின்பு ஆதியாகமம் 17ம் அதிகாரத்திலேயே தேவன் அவனுடன் உடன்படிக்கை செய்து, அதற்கு அடையாளமாக விருத்தசேதனம் செய்யும்படி கூறினார்.

144 M.L.Lloyd-Jones, *Atonement and Justification,* p. 185.

145 புதிய ஏற்பாட்டில், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்பது இரட்சிப்பின் செயல்முறையைக் குறிக்கின்றது. ஒருவன் இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தைப் புரிந்துகொண்டு அவரை விசுவாசிக்கும்போது நீதிமானாக்கப்படுகின்றான்.

146 D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 141; F.A.Malone, *The Baptism of Disciples Alone*, p. 112.

ஆபிரகாம் விருத்தசேதனம் செய்த நாளில் இஸ்மவேல் உட்பட அவனுடைய வீட்டில் இருந்த ஆண்கள் அனைவருக்கும் விருத்தசேதனம் செய்யப் பட்டது (ஆதி.17:23-27). ஆனால், ஆபிரகாமுக்கு மட்டுமே விருத்தசே தனம் அவன் விசுவாசத்தினால் அடைந்த நீதிக்கு முத்திரையாக இருப்பதாக ரோமர் 4:11 கூறுகிறது. ஆபிரகாமின் மகனான இஸ்ம வேலோ மாம்சத்தின்படி பிறந்தவனாகவே சித்தரிக்கப்பட்டுள்ளான் (கலா.4:22-23). இதனால் ரோமர் 9:6-8ன்படி அவன் தேவனுடைய பிள்ளை அல்ல.[148] மேலும், பிற்காலத்தில் ஆபிரகாமுடைய வம்சத்தில் வந்த ஆண் குழந்தைகளுக்கு, அவர்கள் பிறந்து எட்டாவது நாள் விருத்தசேதனம் செய்யப்பட்டது. இதனால், ஆபிரகாமினுடைய அனுப வம், அதாவது தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து நீதிமானா கிய அனுபவம் அவர்களுக்கு இருக்கவில்லை (ரோ.9:6-8). எனவே, அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும், அவர்களுக்குச் செய்யப்பட்ட விருத்தசேதனம் அவர்களுடைய இரட்சிப்பிற்கான அடையாளம் என்றும் கூறமுடியாது. இது தேவன் அறிவித்ததுபோல, அவர்கள் ஆபிரகாமு டன் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள் என்பதற்கான அடையாளமாகவே உள்ளது (ஆதி.17:10-11).[149]

குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகள், "அக்குழந்தை கள் விசுவாசிக்கின்றன" என்றும், "மறுபடியும் பிறக்கின்றன" என்றும் போதித்தாலும்,[150] ஞானஸ்நானம் பெற்ற குழந்தைகளுக்குத் திருவி ருந்து கொடுப்பதில்லை. திருவிருந்தின் தாற்பரியங்களைப் புரிந்துகொள்

[148] ரோமர் 9:6-8ல், "இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[149] ஆதியாகமம் 17:10-11ல், "எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ளவேண்டியது மான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம்பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" என்று தேவன் தெரிவித்துள்ளார்.

[150] 132ம் 133ம் பக்கங்களிலுள்ள மேற்கோள்களைப் பார்க்கவும்

ளும் ஆற்றலோ, தங்களை சோதித்தறிந்து திருவிருந்தில் பங்கேற்கும் மனநிலையோ குழந்தைகளுக்கு இல்லை என்று இவர்கள் கூறுகின் றனர்.[151] இது மறுக்கமுடியாத உண்மையாக இருப்பது போலவே, குழந்தைகளினால் விசுவாசிக்கமுடியாது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகவே உள்ளது. எனவே, குழந்தைகள் விசுவாசிக்கின்றன என்று அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சபைகள், அவற்றி னால் இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பலியைப் புரிந்துகொண்டு திருவி ருந்தில் பங்கேற்க முடியாத நிலையில் உள்ளன என்று கூறுவது, இவர்களுடைய உபதேசங்கள் ஒன்றையொன்று முரண்படுத்துபவைக ளாக இருப்பதையே சுட்டிக்காட்டுகின்றது. குழந்தைகள் திருவிருந்தில் பங்கேற்க முடியாத நிலையில் இருப்பதுபோலவே, ஞானஸ்நானம் பெறவும் முடியாத நிலையிலேயே இருக்கின்றன. எனவே, "குழந்தைக ளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம். ஆனால், தங்களை ஆராய்ந்து பார்க்கக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கே திருவிருந்து கொடுக்க வேண்டும்"[152] என்னும் குழந்தை ஞானஸ்நான ஆதரவாளர்களின் போதனைகள், முரண்பாடுடைய அறிவீனமான தர்க்கங்களாகவே உள்ளன.



சபைத் தலைவர்கள்
கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவந்த
பல தவறுகளில் ஒன்றாகவே
குழந்தை ஞானஸ்நானம் உள்ளது



ஞானஸ்நானத்தைப்பற்றிய வேதாகமக் கட்டளைகள் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு எதிரானவைகளாகவே உள்ளன. மக்களை சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கும்படியே இயேசுகிறிஸ்து அறிவுறுத்தியுள்ளார் (மத்.28:19). ஆரம்பகாலத்தில் கிறிஸ்தவர்கள் அனைவரும் சீஷர்கள் என்றே அழைக்கப்பட்டனர். எனவே, "சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுத்தல்" என்பது ஒருவனைக் கிறிஸ்தவனாக்கி ஞானஸ்நானம் கொடுப்பதாகும். ஒருவன் கிறிஸ்தவனாகுவதற்கு, அவன் இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தைக் கேட்டு, அதைப்

[151] J.Calvin, *Institutes of the Christian Religion Volume 2*, p. 550.
[152] *Westminster Catechism*, Question 177.

புரிந்துகொண்டு, தன்னுடைய பாவங்களை இயேசுகிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு, அவரைத் தன்னுடைய இரட்சகராகவும் தெய்வமாக வும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனால், இயேசுகிறிஸ்து கட்டளையிட் டுள்ள ஞானஸ்நானம் குழந்தைகளுக்கானது அல்ல. குழந்தைகள் ஞானஸ்நானத்தைப்பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை. ஒருவன் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் (மாற்.16:16) என்றே இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளதினால், அவர் குறிப்பிடும் ஞானஸ்நானம் விசுவாசிக்க முடியாத நிலையிலுள்ள குழந்தைகளுக் கானது அல்ல. இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷத்தைக் கேட்டு, அவரை விசுவாசித்து அவருடைய சீஷனாகுபவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதே வேதாகமம் போதிக்கும் ஞானஸ்நானமாயுள்ளது. எனவே, இயேசுகிறிஸ்துவை விசுவாசியாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவ தும், விசுவாசியாதவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும் அர்த்தமற் றது. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதைப்பற்றிய கட்ட ளையோ, அல்லது ஞானஸ்நானம் கொடுத்ததைப்பற்றிய சம்பவங் களோ வேதாகமத்தில் இராததினால், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இதனால் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதை நியாயப்படுத்தும் போதனைகள் அனைத்தும் எவ்வித அர்த்தமும், ஆதாரமும் அற்ற அறிவீனமான தர்க்கங்களாகவே உள்ளன. உண்மையில் "சபைத் தலைவர்கள் கிறிஸ்தவத்திற்குள் கொண்டுவந்த பல தவறுகளில் ஒன்றாகவே குழந்தை ஞானஸ்நானம் உள்ளது."[153] இதனால், குழந்தை ஞானஸ்நானம் ஒரு பாரம்பரிய சடங்காசாரமாக இருக்கின் றதே தவிர, வேதாகமம் போதிக்கும் சத்தியமாகவும், நாம் கைக் கொள்ளவேண்டிய பழக்கமாகவும் இல்லை.



[153] D.H.J.Gay, *Infant Baptism Tested*, p. 183.



## ஏழாம் அத்தியாயத்தின் சுருக்கவுரை

ஞானஸ்நானம் பெறுபவர் பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்று வேதாகமம் கூறுவதனால், நாம் இத்தகைய அனுபவம் இல்லாமல் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், இத்தகைய ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்றபின்னர், மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியமாயுள்ளது. இதனால்தான், அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில் யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்த சிலருக்குப் பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்தார். மேலும், நாம் மற்றவர்களுக்காக, குறிப்பாக மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவதற்கு வேதம் அனுமதி கொடுக்கவில்லை. இதனால், நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியதன் அவசியத்தை இவ்வத்தியாயம் சுட்டிக்காட்டுகிறது. நம்முடைய ஞானஸ்நானம் வெறும் சடங்காசாரமாக அல்ல, ஆவிக்குரிய அனுபவத்தின் வெளிப்பாடாக இருக்கவேண்டியது அவசியம்.

## ஏழாம் அத்தியாயம்



# ஞானஸ்நானத்திற்கான அறைகூவல்

### நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது?

கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப்பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை அறியத்தரும் இந்நூல், இவ்விஷயத்தில் நம்முடைய உள்ளத்தில் இதுவரை காலமும் இருந்த பல்வேறு விதமான கேள்விகளுக்கான பதில்களை வேதாகமத்தின் அடிப்படையில் விளக்கியுள்ளதோடு, ஞானஸ்நானம் பெறும்படியான அதிரடியான அறைகூவலையும் விடுத்திருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதனால், இவ்விறுதி அத்தியாயத்தில், இதுவரையில் ஞானஸ்நானத்தைப்பற்றி நாம் அறிந்துகொண்ட காரியங்களுக்கான முடிவுரையாக அமைந்திடும் மூன்று முக்கிய கேள்விகளுக்கான பதில்கள் ஆராயப்பட்டுள்ளன. உண்மையில், இம்மூன்று கேள்விகளும் கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரினது வாழ்வுக்கும் மிகவும் முக்கியமான சத்தியத்தை அறிவித்திடும் அறைகூவல்களாக உள்ளன.



# (1) நாம் மறுபடியும் ஞானஸ்நானம் பெறலாமா?

கிறிஸ்தவத்தில் ஒரேயொரு ஞானஸ்நானம் மாத்திரமே இருப்பதாக எபேசியர் 4:5ல் பவுல் குறிப்பிட்டுள்ளதினால், குழந்தைகளாக இருந்த போது ஞானஸ்நானம் பெற்றவர்கள் பிற்காலத்தில் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளைகளாகினால் அவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டுமா என்னும் கேள்வி தற்காலத்தில் பெரும்பாலான கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் உள்ளது. பாரம்பரியச் சபைகளில், குழந்தைகளாக ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு அவர்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் காலத்தில் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியதில்லை என்னும் போதனை உள்ளது.[1] இதனால், குழந்தைகளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் குறிப்பிட்ட வயதை அடைந்த பின்னர் அவர்களுக்கு "உறுதிப்படுத்தும் பூசை" அல்லது "திடப்படுத்தல்" (Confirmation Service) என்னும் சிறப்பான ஆராதனை பாரம்பரியச் சபைகளில் உருவாக்கப்பட்டுள்ளது.[2] ஆனால், கி.பி.3ம் நூற்றாண்டிற்குப் பின்னர் கிறிஸ்தவ சபையில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்தகைய செயல்முறைக்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. உண்மையில், திடப்படுத்தலோடு சம்பந்தப்பட்ட காரியங்கள் சபையின் பாரம்பரிய சடங்காசாரங்களாகவே உள்ளன.

எபேசியர் 4:5 அறியத்தருவதுபோல, ஒரேயொரு ஞானஸ்நானம் மாத்திரமே உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை என்றாலும்,

---

[1] M.Green, *Baptism: Its Purpose, Practice and Power*, pp. 83-90.

[2] கத்தோலிக்க சபையில் இவ்வாராதனை, ஞானஸ்நானத்தில் குழந்தைக்கு அருளப்பட்ட தேவனுடைய கிருபையையும் பரிசுத்தஆவியின் வரத்தையும் உறுதிப்படுத்தும் சடங்காசார வைபவமாக உள்ளது (P.Stanford, *Catholicism*, p. 117-118). லூத்தரன் சபையில், இது குழந்தையாக இருந்தபோது பெற்ற ஞானஸ்நானத்தை உறுதிப்படுத்தும் ஆராதனையாக உள்ளது. (*Lutheran Book of Worship – Ministers Desk Edition*, p. 324). இங்கிலாந்து சபையில் திடப்படுத்தல் ஆராதனை, ஞானஸ்நான வாக்குறுதியை உறுதிப்படுத்தும் நிகழ்வாகும்.

இது குழந்தை ஞானஸ்நானம் அல்ல. ஏனெனில் நாம் ஏற்கனவே பார்த்தபடி, கி.பி.3ம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட குழந்தை ஞானஸ்நானத்திற்கு எவ்வித வேதாகம ஆதாரமும் அங்கீகாரமும் இல்லை. இயேசுகிறிஸ்துவின் அறிவுறுத்தலின்படியான ஞானஸ்நானம் "மக்களைச் சீஷராக்கிக் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்" என்பதனால் (யோவா.4:1, மத்.28:19-20), கிறிஸ்தவர்களாகிய நாம் பெறவேண்டிய ஞானஸ்நானம் குழந்தை ஞானஸ்நானம் அல்ல. நாம் "விசுவாசமுள்ள வர்களாகி ஞானஸ்நானம் பெறவேண்டும்" (மாற்.16:15) என்றே இயேசு கிறிஸ்து தெரிவித்துள்ளார். எனவே, இயேசுகிறிஸ்துவின் சீஷனாயிருப்ப வனுக்குக் கொடுக்கப்படும் ஞானஸ்நானமே நாம் பெறவேண்டிய ஞானஸ்நானமாயுள்ளது. இதனால், குழந்தைகளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் பிற்காலத்தில் தனிப்பட்ட ரீதியாகப் பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள் ளையாகித் (யோவா.1:12) தங்களுடைய வாழ்வைத் தேவனிடம் அர்ப்பணித்து இயேசுகிறிஸ்துவின் சீஷர்களாகும்போது, தங்களுடைய வாழ்வில் ஏற்பட்ட ஆவிக்குரிய மாற்றத்தை வெளிப்படையாகக் காண்பிப்பதற்கும், இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கும் மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயுள்ளது. இதனால், குழந்தைகளாக ஞானஸ்நானம் பெற்றவர்களும், ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம சத்தியங்களைப் புரிந்துகொள்ளாமல் ஞானஸ்நானம் பெற்றவர்களும் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக அறிந்து கொண்ட பின்னர் மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித தவறும் இல்லை. உண்மையில், இது அவசியமான ஒரு செயல்முறை யாகவே உள்ளது.

குழந்தை ஞானஸ்நானத்திற்கு வேதாகம ஆதாரமும் அங்கீகாரமும் இல்லாதிருக்கையில், வேதாகம சத்தியத்திற்கு முரணான விதத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களும், வேதாகம சத்தியத்தைச் சரியானவிதத் தில் புரிந்துகொள்ளாமல் ஞானஸ்நானம் பெற்றவர்களும் இயேசுகிறிஸ் துவை அறிந்துகொள்ளும்போது மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவ தற்கு வேதாகமம் அனுமதி கொடுத்துள்ளது. ஒரேயொரு ஞானஸ்நா னம் மாத்திரமே இருப்பதாக எபேசு பட்டணத்திலிருந்த சபைக்கு எழுதிய நிருபத்தில் குறிப்பிட்டுள்ள பவுல் (எபே.4:5), அப்பட்டணத்தில் யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தவர்களுக்கு இயேசு

கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தை அறிவித்து அவர்கள் விசுவாசிகளா னபோது, அவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்துள்ளார் (அப்.19:1-5).[4] யோவான் ஸ்நானகன் கொடுத்த ஞானஸ்நானம் பாவத்தி லிருந்து மனந்திரும்புதலுக்கானதாய் மாத்திரம் இருந்ததினால் (அப். 19:4), இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளைக ளாகுபவர்களுக்கு அது பொருத்தமற்றதாக இருந்தது. இதனால்தான், யோவானுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தவர்களுக்குப் பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்துள்ளார் (அப்.19:5). இதைப்போ லவே, வேதாகம சத்தியத்தை அறிந்து இயேசுகிறிஸ்துவை விசுவா சித்து தேவனுடைய பிள்ளைகளாகுபவர்களுக்கு குழந்தை ஞானஸ்நா னம் பொருத்தமற்றதாக இருப்பதனால், இவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுப்பது அவசியமாயுள்ளது.



**வேதாகம சத்தியத்தை அறியாமல் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம்**



குழந்தையாக இருந்தபோது ஞானஸ்நானம் பெற்றவர்கள் மாத்திர மல்ல, ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம சத்தியத்தை சரியாக அறியாத நிலையில் ஞானஸ்நானம் பெற்றவர்களும், இயேசுகிறிஸ் துவை விசுவாசித்துத் தேவனுடைய பிள்ளைகளாகிய பின்னர் மறுபடி

[4] இதைப்பற்றி அப்போஸ்தலர் 19:1-5ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான். அங்கே சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென் பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்."

யும் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயுள்ளதையும் அப்போஸ்தலர் 19:1-5லுள்ள சம்பவம் அறியத்தருகின்றது. பவுல் எபேசு பட்டணத்தில் சந்தித்தவர்கள் யோவான் ஸ்நானகனுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தாலும், அவர்கள் யோவானுடைய உபதேசத்தைப் புரிந்து கொள்ளாதவர்களாகவே இருந்தனர். யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவின் வருகையையும், அவரை விசுவாசிப்பவர்களுக்கு அருளப் படும் பரிசுத்த ஆவியானவரையும் பற்றி அறிவிப்பவனாக இருந்தான் (யோவா.1:26-34, மத்.3:11-12). ஆனால், எபேசு பட்டணத்திலிருந்த யோவானின் சீஷர்கள், பரிசுத்த ஆவியானவரைப்பற்றியே கேள்விப்படா தவர்களாக இருந்தனர். இதிலிருந்து அவர்கள் யோவான் ஸ்நானகனு டைய போதனையைப் புரிந்துகொள்ளாமல் அவனிடம் ஞானஸ்நானம் பெற்றுள்ளது தெளிவாகின்றது. அவர்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பி யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றிருந்தபோதிலும், யோவானு டைய போதனையை முழுமையாகப் புரிந்துகொள்ளாதவர்களாகவும்,[5] இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துப் பரிசுத்தஆவியைப் பெறாதவர்களாக வும் இருந்தனர். இதனால் பவுல் அவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நா னம் கொடுத்தார். இதைப்போலவே, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சத்தி யத்தைப் புரிந்துகொள்ளாமல் வெறும் சடங்காசாரமாக மாத்திரம் ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள், சரியான சத்தியத்தை அறிந்து இயேசுகிறிஸ்துவிடம் தங்கள் வாழ்வை அர்ப்பணிக்கும்போது மறுபடி யும் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயுள்ளது. ஏனெனில், ஞானஸ்

[5] நான்காம் வசனத்தில் பவுல் அவர்களுக்கு கூறும் விஷயம், அதாவது யோவான் ஸ்நானகன் எதைப்பற்றிப் போதித்தான் என்பதைச் சுட்டிக்காட்டுவத னால், அவர்கள் யோவானுடைய போதனைகளைக் கேட்டிருந்தும் அவற்றைப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே அறியத்தருகின்றது. ஆனால், பெரும்பா லான வேதஆராய்ச்சியாளர்கள், இவர்கள் யோவான் மூலம் பரிசுத்த ஆவியான வரைப்பற்றி அறிந்திருந்தார்கள் என்றும், ஆனால், பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் அருளப்பட்டிருந்ததையே அறியாதிருந்தார்கள் என்றும் கருது கின்றனர் (J.R.W.Stott, *The Message of Acts*, 304; F.F.Bruce, *Acts: The New International Commentary on the New Testament*, p. 363). ஆனால் “பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவேயில்லை” என்று அவர்கள் கூறுவதனால் இத்தகைய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. யோவான் ஸ்நானகன் பரிசுத்தஆவியானவரைப்பற்றி போதிப்பவனாக இருந் தான் (லூக்.3:15-16). ஆனால் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்ற இவர்கள் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி கேள்விப்படவேயில்லை என்று கூறுவது, யோவானின் உபதேசம் இவர்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்குபோல இருந்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.

நானத்தைப்பற்றிய வேதாகம சத்தியத்தைப் புரிந்துகொள்ளாமல் எடுத்த ஞானஸ்நானம் எவ்வித அர்த்தமும் பயனும் அற்றதாக இருப்பதனால், வெறும் சடங்காசாரமாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டியது அவசியம்.



## (2)
## நாம் மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெறலாமா?

ஒருவன் மறுபடியும் ஞானஸ்நானம் பெறுவதற்கு வேதாகமம் அனுமதி கொடுத்தாலும், மற்றவருக்காக, அதுவும் மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெறுவதற்கு வேதாகமம் அனுமதி கொடுக்கவில்லை. ஆனால், சில கிறிஸ்தவ சபைகளும் வேதப் புரட்டுக் குழுக்களும் 1கொரிந்தியர் 15:29ஐ ஆதாரமாகக்கொண்டு, உயிரோடிருப்பவர்கள் மரணமடைந்த தங்களுடைய உறவினர்களுக்காக ஞானஸ்நானம் பெறும் முறையைக் கைக்கொண்டு வருகின்றன.[6] உண்மையில், மனிதர் இரட்சிப்படைவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்று கருதுபவர்களே, இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படுவதற்கு முன்னர் மரித்தவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு உயிரோடிருக்கும் அவர்களுடைய உறவினர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று போதிக்கின்றனர். ஆனால், மரணத்தின் பின்னர் மனிதர் இரட்சிக்கப்படுவதற்கு எவ்வித சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை என்று வேதாகமம் கூறுவதனால் (லூக்.16:24-26, எபி.9:27),[7]

---

[6] தற்காலத்தில் “மோர்மன்” (Mormon) என்னும் வேதப் புரட்டுக்குழுவினர் மரித்தோருக்காக ஞானஸ்நானம் கொடுக்கின்றனர்.

[7] மரணத்தின் பின்னர் தங்களுடைய நிலையை மனிதர்களினால் மாற்றிக் கொள்ள முடியாது என்பதை இயேசுகிறிஸ்து லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் தெரிவித்தள்ளார். இவ்வுவமையில், மரணத்தின் பின்னர் பாதாளத்திற்குச் சென்ற ஐசுவரியவான் ஆபிரகாமிடம் “தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்” என்று கேட்டபோது, இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான் (லூக்.16:24-26). “ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது” (எபி. 9:27) என்று வேதாகமம் கூறுவதனால் மரணத்தின் பின் மனிதருக்கு இரட்சிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் அல்ல நியாயத்தீர்ப்பே உள்ளது.

மரித்தோரின் இரட்சிப்புக்காக உயிரோடிருப்பவர்கள் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித பயனும் இல்லை.[8] அதுமாத்திரமல்ல, உயிரோடி ருப்பவர்களும் இயேசுகிறிஸ்துவைத் தனிப்பட்டரீதியாக விசுவாசித்து இரட்சிக்கப்படாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவதிலும் எவ்வித அர்த்தமும் இல்லை.

1கொரிந்தியர் 15:29ல் பவுல் எழுதியுள்ளவைகள், மரித்தோருக்காக உயிரோடிருப்பவர்கள் ஞானஸ்நானம் பெறுவதை நியாயப்படுத்துவதா கவே நமக்குத் தென்படலாம்.[9] ஏனெனில் இவ்வசனத்தில் பவுல், "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ் நானம் பெறுகிறார்கள்?" என்று கொரிந்தியரிடம் கேட்டுள்ளார். சில வேதஆராய்ச்சியாளர்களும், மரித்த உறவினர்களுக்காக உயிரோடிருப் பவர்கள் ஞானஸ்நானம் பெறுவதைப்பற்றியே பவுல் இவ்வசனத்தில் எழுதியுள்ளதாகக் கருதுகின்றனர்.[10] ஆனால், கி.பி. இரண்டாம் நூற்

[8] இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படாமல் மரிப்பவர்களின் இறுதி நிலை யைப்பற்றி கிறிஸ்தவர்கள் மத்தியில் வித்தியாசமான கருத்துகள் உள்ளன. இவ்வுலகத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி கேள்விப்படாதவர்களுக்கு மரணத் தின் பின்னர் இன்னுமொரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று சிலர் எண்ணுகின்ற னர். கிறிஸ்தவத்தில் மாத்திரமல்ல ஏனைய மதங்களிலும் இயேசுகிறிஸ்து இருக்கின்றார் என்று வாதிடுபவர்கள், அம்மத வழிபாடுகளினூடாகவும் மனிதர்கள் இரட்சிக்கப்படுவதாக நம்புகின்றனர். ஆனால், இத்தகைய கருத்து களுக்கு எவ்வித வேதாகம ஆதாரமும் இல்லை. சகல மனிதருக்கும் சிருஷ்டிக்கப்பட்ட இயற்கை உலகத்தின் மூலமும், மனிதருடைய இருதயத்தி லும் தம்மைப்பற்றித் தேவன் வெளிப்படுத்தியுள்ளதாகக் கூறும் வேதாகமம் (சங்.19:1, பிர.3:11, அப்.14:16-17, 17:26-27, ரோ.1:19-20, 2:14-15), இவ்வுலக வாழ்வில் இயேசுகிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள், இவ்வெளிப்படுத் தலை அடிப்படையாகக்கொண்டு நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று கூறுகிறது (வெளி.20:12). இதுபற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது ***மனுக்குலத்திற் கான மகத்தான வெளிப்படுத்தல்*** என்னும் நூலைப் பார்க்கவும்.

[9] வேதாகமத்திலேயே அதிக சர்ச்சைக்குரியதாய் உள்ள இவ்வசனத்திற்கு இதுவரையில் நூற்றுக்கும் அதிகமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன ஆனால் இவை அனைத்தும் வேதஆராய்ச்சியாளர்களின் வெறும் ஊகங்களாக மாத்திரமே உள்ளன.

[10] C.Blomberg, *1Corinthians: The NIV Application Commentary*, p. 299; R.St.J.Parry, *1Corinthians: Cambridge New Testament Commentary*, pp. 228-229; R.B.Hays, *1Corinthians: Interpretation*, p. 267; R.A.Horsley, *1Corinthians: Abingdon New Testament Commentary*, p. 207; R.Collins, *1Corinthians: Sacra Pagina*, p. 556.

றாண்டில் உருவான மதக்குழுக்கள் மத்தியிலேயே இத்தகைய ஞானஸ்நான முறை இருந்தது.[11] முதலாம் நூற்றாண்டில் இத்தகைய பழக்கம் கிரேக்க உலகில் இருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.[12] இதனால், இரண்டாம் நூற்றாண்டில் உருவான பழக்கம் முதலாம் நூற்றாண்டு கொரிந்து சபையில் இருந்தது என்னும் ஊகத்தின் அடிப்படையில் இவ்வசனத்தை வியாக்கியானம் செய்வது தவறாகும். மேலும், மரித்தோரின் இரட்சிப்புக்காக உயிரோடிருப்பவர்கள் எதுவும் செய்யமுடியாது என்று வேதாகமம் கூறுவதனால்,[13] பவுலின் கூற்றை சொல்லர்த்தமாக வியாக்கியானம் செய்யமுடியாது.

1கொரிந்தியர் 15:29ல் "மரித்தோர்" என்னும் சொல் ஆவிக்குரிய மரணத்தையே குறிக்கின்றது. மேலும், "மரித்தோருக்காக" என்னும் சொற்பிரயோகம் மரணமடைந்த உறவினர்களை அல்ல, "ஞானஸ்நானம் பெறுபவர் சரீரப்பிரகாரமாக மரணநிலையில் இருக்கின்றார்"[14]

---

[11] Tertullian, *Against Marcion*. 5:10; Epiphanius, *Refutation of All Heresies*. 28:6

[12] L.Morris, *1Corinthians: Tyndale New Testament Commentary*, p. 215; D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the NT*, p. 717.

[13] மனிதர் உயிரோடிருக்கும்போது இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதும் விசுவாசியாமலிருப்பதும் அவர்களுடைய இறுதி நிலையை நிர்ணயிக்கும் என்பதை வேதாகமம் தெட்டத்தெளிவாகக் காண்பிக்கின்றது. இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு என்றும், விசுவாசியாதவன் ஆக்கினைக்குட்படுவான் என்றும் யோவான் 3:16-18, 3:36 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. மேலும், மரணத்தின் பின்னர் மனிதனுக்கு நியாயத்தீர்ப்பே இருப்பதனால் (எபி.9:27), மரணத்தின் பின்னர் மனந்திரும்புவதற்கோ இரட்சிக்கப்படுவதற்கோ எவ்வித சந்தர்ப்பமும் கொடுக்கப்படுவதில்லை என்பதை லாசருவையும் ஐசுவரியவானையும்பற்றிய உவமையில் இயேசுகிறிஸ்து சுட்டிக்காட்டியுள்ளார். இச்சத்தியத்தைப் பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே தாவீது அறிந்திருந்ததினால்தான், தன்னுடைய பிள்ளை வியாதிப்பட்டு மரிக்கும் நிலையை அடைந்தகாலத்தில் அப்பிள்ளைக்காகத் தேவனிடம் மன்றாடிக்கொண்டிருந்தவன், அப்பிள்ளை மரித்தவுடன் ஜெபிப்பதை நிறுத்தி விட்டான். ஏனெனில், பிள்ளை மரித்தபின்னர் தன்னுடைய ஜெபத்தினால் அப்பிள்ளைக்கு எவ்வித பலனும் கிடைப்பதில்லை என்பதை தாவீது அறிந்திருந்தான். இதைப்போலவே மரித்தோரின் இரட்சிப்புக்காக உயிரோடிருப்பவர் மன்றாடுவதில் எவ்வித பயனும் இல்லை. ஒருவனுடைய இரட்சிப்பு மற்றவருடைய ஜெபத்தில் அல்ல, அவன் தனிப்பட்டரீதியாக இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதிலேயே தங்கியுள்ளது (எபே.2:8-9).

[14] J.C.O'Neill, "1Corinthians 15:29" in *Expository Times*. 91 (1979-80), pp. 310-311; A.B.Oliver, "Why Are They Baptized for the Dead? A Study of 1Corinthians 15:29" in *Review and Expositor*. 34 (1937), pp. 48-53; K.C.Thompson, "1Corinthians 15:29 and Baptism for the Dead" in *Studia Evangelica*. 2 (1964), pp. 649-657.

என்னும் அர்த்தத்திலேயே பவுலினால் உபயோகிக்கப்பட்டுள்ளது. வேதாகம உபதேசத்தின்படி, பாவியான மனிதர் ஆவிக்குரிய பிரகாரம் மரித்தவர்களாக இருப்பதோடு (எபே.2:1, 2:5, கொலோ.2:13) ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைவதற்கான அடையாளமாயுள்ளது (ரோ.6:3-11).[15] இதனால், மரித்தோர் என்னும் சொல் இவ்வசனத்தில் ஞானஸ்நானம் பெறுபவர்களையே குறிக்கின்றது.[16] கொரிந்து சபையினர் உலகமுடிவில் மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்பதை நம்பாதவர்களாக இருந்ததினால், இதைப்பற்றி 15ம் அதிகாரத்தில் விரிவாக எழுதியுள்ள பவுல், ஞானஸ்நானம் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்தும் செயலாய் இருப்பதனால், உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கை இல்லாத நிலையில் ஞானஸ்நானம் பெறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதை 29ம் வசனத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெறுவதற்கான ஆதார வசனமாக 1கொரிந்தியர் 15:29ஐ உபயோகிக்கமுடியாது. வேதாகம உபதேசத்தின்படி ஒருவர் மற்றவருக்காக ஞானஸ்நானம் பெறமுடியாதது மாத்திரமல்ல, மரணத்தின் பின் இரட்சிக்கப்படுவதற்கு எவருக்கும் எவ்வித சந்தர்ப்பமும் இல்லை. இதனால்தான், லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் பாதாளத்திற்குச் சென்ற ஐசுவரியவான் அங்கிருந்து வெளியேற விரும்பியும் அவனுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை (லூக்.16:24-26).[17] நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகில் வாழும் காலத்தில் தனிப்பட்டரீதியாக இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து தேவனுடைய பிள்ளையாகி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றே வேதாகமம் கூறுகிறது.



## (3)
## நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது?

ஞானஸ்நானத்தைப்பற்றிய வேதாகம சத்தியத்தை முழுமையாக இந்நூலின் மூலம் அறிந்துகொண்ட நமக்கு அறைகூவலாய் அமையும்

---

[15] இது பற்றிய விளக்கத்திற்கு பக்கங்கள் பார்க்கவும்.
[16] D.E.Garland, *1Corinthians: Baker Exegetical Commentary on the NT*, p. 718.
[17] இவ்வசனங்கள் அடிக்குறிப்பு 7ல் உள்ளது.

இறுதிக் கேள்வி நம்முடைய ஞானஸ்நானத்தைப்பற்றியது. அதாவது, தனிப்பட்டரீதியாக நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியமாய் உள்ளது. சில நேரங்களில் நாம் குழந்தையாக இருந்தபோது நமக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டிருக்கலாம். அல்லது நாம் குறிப்பிட்ட வயதையடைந்த பின்னர் ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம். எனினும், நாம் எப்போது ஞானஸ்நானம் பெற்றோம் என்பதல்ல, எப்படி ஞானஸ்நானம் பெற்றோம் என்பதே முக்கியமான கேள்வியாக உள்ளது. அதாவது, நாம் வேதாகம சத்தியத்தின்படி ஞானஸ்நானம் பெற்றோமா? அல்லது பாரம்பரிய சடங்காசாரத்தின்படி ஞானஸ்நானம் பெற்றோமா? என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். உண்மையில், பாரம்பரிய சடங்காசாரத்தின்படியான ஞானஸ்நானம் அல்ல, வேதாகம சத்தியத் தின்படியான ஞானஸ்நானமே நாம் பெறவேண்டிய ஞானஸ்நானமாயுள் ளது. பலர் தங்களுடைய பாரம்பரிய சடங்காசார சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருக்கின்றனர். இதனால் இவர்களுடைய ஞானஸ்நானம் தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாகவே உள்ளது. உண்மையில், பாரம்பரியப் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தேவனுடைய வார்த் தையை அவமதிக்கும் செயலாகும். இதனால்தான், முன்னோரின் பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த யூதர்களை இயேசு கிறிஸ்து கடுமையாக விமர்சித்துள்ளார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் முன்னோரின் பாரம்பரியத்தை மீறுவதாகப் பரியேசர்கள் குற்றம்சாட்டிய போது, இயேசுகிறிஸ்து பின்வருமாறு அவர்களைக் கடிந்துகொண்டார்:

> இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண் ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும், மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறபிரகாரம், மாயக்காரரா கிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறவர்களாய்... அநேக சடங்குகளையும் அனுசரித்து வரு கிறீர்கள்... நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்

படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருகிகிறது... நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தி னால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள் (மாற்கு 7:6-9,13).

முன்னோரின் பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த யூதர்கள், தேவனுடைய வார்த்தையைத் தள்ளிவிட்டு, உதட்டளவில் வீணான ஆராதனை செய்கிறவர்களாக இருந்துள்ளதையே இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அறியத்தருகின்றன. இதைப்போலவே, தற்காலத்திலும், வேதாகம அறிவுறுத்தலின்படி ஞானஸ்நானம் பெறாமல், தங்களுடைய சபையின் பாரம்பரியங்களுக்கு ஏற்றவிதத்தில் நடப்பவர்கள் இருக்கின்ற னர். இயேசுகிறிஸ்துவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் பல்வேறுவித மான பாரம்பரியப் போதனைகள் காணப்பட்டன. இவற்றை அவர்கள் நியாயப்பிரமாணத்திற்குச் சமமானவைகளாகக் கருதினார்கள்.[18] இவை யூதமதப் போதகர்கள் நியாயப்பிரமாணக் கட்டளைகளுக்கு கொடுத்த விளக்கங்களாக உருவானபோதிலும், யூதர்கள் இவற்றையும் மோசே யின் மூலம் தேவனால் அருளப்பட்ட உபதேசங்களாகவே ஏற்றுக் கொண்டிருந்தனர்.[19] கி.மு. 2ம் நூற்றாண்டில் உருவான இப்பாரம்பரியப் போதனைகள் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இல்லாதவை என்று யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பஸ் குறிப்பிட்டுள்ளபோதிலும்,[20] யூதமதப் போதகர்கள் இவற்றைத் தேவனால் அருளப்பட்ட நியாயப்பிரமாணத் தையும்விட மேலானதாகவே கருதினார்கள். “நியாயப்பிரமாணம் சுவையற்ற தண்ணீர், ஆனால் முன்னோரின் பாரம்பரியங்கள் சுவை உள்ள திராட்சைரசம்”[21] என்று குறிப்பிட்டுள்ள யூதமதப் போதகர்கள், “முன்னோரின் பாரம்பரியத்தை முரண்படுத்தும் விதத்தில் வேதாக மத்தை வியாக்கியானம் செய்பவனுக்கு நித்தியஜீவன் இல்லை”[22] என்று அறிவித்துள்ளனர். ஆனால் இயேசுகிறிஸ்துவோ முன்னோரின் பாரம்பரியத்தை “மனுஷருடைய கற்பனைகள்” (மாற்.7:7), “மனுஷரு டைய பாரம்பரியம்” (மாற்.7:8), “உங்கள் பாரம்பரியம்” (மாற்.7:9) என்று குறிப்பிட்டுள்ளதோடு, பாரம்பரியப் போதனைகளைக் கைக்

---

[18] F.Josephus, *The Antiquities of the Jews*, 13.297.
[19] J.R.W.Stott, *Christ the Controversialist*, p. 87.
[20] F.Josephus, *The Antiquities of the Jews*, 13.297
[21] Cited in A.Cole, *Galatians: Tyndale New Testament Commentary*, p. 50.
[22] Cited in W.W.Wiersbe, *Be Diligent*, p. 72.

கொண்டுவந்த யூதர்கள் தேவனுடைய கட்டளையைத் "தள்ளி விட்டார்கள்" (மாற்.7:8) என்றும், "வியர்த்தமாக்கினார்கள்" (மாற்.7:9) என்றும், அவர்கள் "தேவவசனத்தை அவமாக்குகிறார்கள்" (மாற்.7:13) என்றும் தெரிவித்துள்ளார். பாரம்பரியப் போதனைகளைக் கைக்கொள் வது, மானிட உபதேசங்களுக்காகத் தேவனுடைய வார்த்தையை எதிர்க்கும் அல்லது நிராகரிக்கும் செயலாக இருப்பதையே இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் அறியத்தருகின்றன.[23]



பாரம்பரிய சடங்காசாரத்தின்படி அல்ல வேதாகம சத்தியத்தின்படியான ஞானஸ்நானமே நாம் பெறவேண்டிய ஞானஸ்நானமாயுள்ளது.



இயேசுகிறிஸ்துவின் காலத்தில் முன்னோரின் பாரம்பரியங்களைக் கைக்கொண்ட யூதர்கள் தேவனுடைய வார்த்தையின்படி செயற்படா மல், மனிதருடைய கற்பனையில் உருவான போதனைகளின்படி வாழ்ந்து வந்தனர்.[24] இதைப்போலவே தற்காலத்திலும், தேவனுடைய வார்த்தையை முரண்படுத்தும் விதத்தில் சபையின் பாரம்பரியங்களைக் கைக்கொள்பவர்களும் இருக்கின்றனர். வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருக்கையில் பாரம்பரியப் போதனைகள் மனிதருடைய கற்பனைகளாகவே உள்ளன. எனவே, நாம் மனிதருடைய கற்பனைக ளின்படி ஞானஸ்நானம் பெற்றுள்ளோமா? அல்லது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அறிவுறுத்தலின்படி ஞானஸ் நானம் பெற்றுள்ளோமா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம். தேவனுடைய அறிவுறுத்தலின்படியான ஞானஸ்நானம், நாம் இந்நூலின் 2ம் 3ம் அத்தியாயங்களில் பார்த்தபடி, பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை விசுவாசித்துத் தண்ணீரில் மூழ்கிப் பெறும் ஞானஸ்நானமாகவே உள்ளது. "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொ ருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றே வேதாகமம் கூறுகிறது (அப்.2:38). நாம் இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்று, இந்நூலின்

[23] J.R.Edwards, *Mark: The Pillar New Testament Commentary*, pp. 209-210.
[24] W.Barclay, *Mark: The New Daily Study Bible*, 195.

ஆறாம் அத்தியாயத்தில் அறிந்துகொண்டதுபோல இரட்சிப்பின் நிச்சயத் தையும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும் பெற்று, இயேசு கிறிஸ்து சரீரமாயுள்ள சபையின் அவயவங்களாக இருக்கின்றோமா என்பதை இன்றே ஆராய்ந்து பார்க்கவேண்டியது அவசியம்.



விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனே
இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்
(மாற்கு 16:16)

# உசாத்துணை நூல்கள்

**ஞானஸ்நானத்தைப்பற்றிய**
**நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும்**
BOOKS AND ARTICLES ON BAPTISM


Adams, Jay E. *The Meaning and Mode of Baptism*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 2003.

Anderson, Mark. *See, Here is Water: A Case for Believer's Baptism*. Manchester: Barratt Ministries, 2004.

Aland, Kurt. *Did the Early Church Baptize Infants*? Eugene: Wipf & Stock Publishers, 1961.

Armour, Rollin S. *Anabaptist Baptism*. Scottdale: Herald Publishing, 1966.

Armstrong, John H. ed., *Understanding Four Views on Baptism*. Grand Rapids: Zondervan Publishing House, 2007.

Baillie, John. *Baptism and Conversion*. Oxford: Oxford University Press, 1964.

Barth, Karl. *The Teaching of the Church Regarding Baptism*. London: SCM Press, 1948.

Beasley-Murray, G.R. *Baptism Today and Tomorrow*. London: Macmillan, 1966.

Beasley-Murray, G.R. *Baptism in the New Testament*. Carlisle: Paternoster Press, 1972.

Booth, Robert R. *Children of the Promise: The Biblical Case for Infant Baptism*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1995.

Bradshaw, Paul F. "The Profession of Faith in Early Christian Baptism" in *Evangelical Quarterly*. April (2006), pp.

Bridge, Donald & Phypers, David. *The Water that Divides: Two Views of Baptism Explored*. Fearn: Christian Focus Publications, 1998

Bromiley, Geoffrey W. *Baptism and the Anglical Reformers*. Cambridge: Lutterworth Press, 1953.

Bromiley, Geoffrey W. *Sacramental Teaching and Practice in the Reformation Church*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1957.

Bromiley, Geoffrey W. *Children of Promise: The Case for Baptizing Infants*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.

Brooks, Oscar S. *The Drama of Decision: Baptism in the New Testament Church*. PeabodyHendrickson Publishers, 1987.

Buchanan, Colin O. *Baptismal Discipline*. Bramcote: Grove Books, 1972.

Buchanan, Colin O. *A Case for Infant Baptism*. Bramcote: Grove Books Ltd., 1990.

Burnish, Raymond F.G. *The Meaning of Baptism*. London: SPCK Press, 1985.

Buhler, F.M. *Archaeological, Historical, and Biblical Aspects of Baptism*. Dundas: Joshua Press Inc., 2004.

Carson, Alexander. *Baptism: It's mode and Subjects*. Lafayette: Sovereign Grace Publishers, 2000.

Cramer, Peter. *Baptism and Change in the Early Middle Ages: c.200 – c.1150*. Cambridge: Cambridge University Press, 1993.

Clark, Neville. *An Approach to the Theology of the Sacraments*. London: SCM Press, 1956.

Cottrell, Jack. *Baptism: A Biblical Study*. Joplin: College Press Publishing Company, 1989.

Cullmann, O. *Baptism in the New Testament*. London: SCM Press, 1950.

Dale, James W. *Christic and Patristic Baptism*. Monmouth: Balchazy-Carducci, 1975.

Eller, Vernard. *In Place of Sacraments: A Study of Baptism and the Lord's Supper*. Grand Rapids: Eerdmans Publishing Co., 1972.

Felton, Gayle C. *The Gift of Water: The Practice and Theology of Baptism Among Methodists in America*. Nashville: Abingdon Press, 1969.

Fisher, J.D.C. *Christian Initiation: Baptism in the Medieval West*. London: SPCK, 1965.

Fisher, J.D.C. *Christian Initiation: The Reformation Period*. London: SPCK, 1965.

Ferguson, Everett. "Inscriptions and the Origin of Infant Baptism" in *Journal of Theological Studies*. 30 (1979), pp. 37-46.

Ferguson, Everett. *Early Christians Speak*. Abilene: Abilene Christian University Press, 1987.

Ferguson, Everett. *Baptism in the Early Church: History, Theology, and Liturgy*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2009.

Flemington, W.F. *The New Testament Doctrine of Baptism*. London: SPCK, 1957.

Forsyth, Peter Taylor. *The Church and the Sacraments*. London: Independent Press, 1964.

Fowler, Stanley K. *More than a Symbol: The British Baptist Recovery of Sacramentalism*. Carlisle: Paternoster Press, 2002.

Gaukroger, Stephen. *Being Baptized*. London: Marshall Pickering Publishing, 1993.

Gay, David H.J. *Infant Baptism Tested*. Biggleswade: Brachus Publication, 2009.

George, Timothy. "The Reformed Doctrine of Believer's Baptism" in *Interpretation*. 4 (1993), pp. 242-254.

Gilmore, Alec. *Baptism and Christian Unity*. Valley Forge: Judson Press, 1966.

Green, Michael. *Baptism: Its Purpose, Practice and Power*. Milton Keynes: Paternoster Press, 2006.

Holland, Bernard G. *Baptism in Early Methodism*. London: Epworth Press, 1970.

Jeremias, Joachim. *Infant Baptism in the First Four Centuries*. London: SCM Press, 1960.

Jeremias, Joachim. *Origins of Infant Baptism*. London: SCM Press, 1963.

Jewett, P.K. *Infant Baptism and the Covenant of Grace*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1978.

Johnson, Maxwell E. *The Rites of Christian Initiation: Their Evolution and Interpretation*. Collegeville: Liturgical Press, 1999.

Kavanagh, Aidan. *The Shape of Baptism: The Rite of Christian Initiation*. Collegeville: Liturgical Press, 1978.

Kerr, H.T. *The Christian Sacraments: A Source Book for Ministers*. Philadelphia: The Westminster Press, 1944.

Kingdon, David. *Children of Abraham: A Reformed Baptist View of Baptism, the Covenant, and Children*. Worthing/Haywords Heath: University Tutorial Press/Cary Publications, 1973.

Lane, A.N. "Did the Apostolic Church Baptise Babies? A Seismological Approach" in *Tyndale Bullletin*. 55.1 (2004), pp. 109-130.

Lewis, J. "Baptismal Practices of the Second and Third Century Church" in *Restoration Quarterly*. 26 (1983), pp. 1-17.

Mackintosh, H.R. "Thoughts on Infant Baptism" in *The Expositor*. (1917), p.195.

Marcel, Pierre-Charles. *The Biblical Doctrine of Infant Baptism: Sacrament of Covenant of Grace*. London: James Clarke, 1959.

Malone, Fred A. *The Baptism of Disciples Alone: A Covenantal Argument for Credobaptism Versus Peadobaptism*. Cape Coral: Founders Press, 2007.

Marty, Martin E. *Baptism: A User's Guide*. Minneapolis: Augsburg Books, 2008.

Mauro, Philip. *Baptism: Its Place and Importance in Christianity*. London: Morgan & Scott, 1914.

Murray, John. *Christian Baptism*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1985.

Newton, Benjamin Wills. *The Doctrine of Scripture Respecting Baptism Briefly Considered*. London: Lucas Collins, 1907.

Oliver, A.B. "Why are they Baptized for the Dead?: A Study of 1Corinthians 15:29" in *Review and Expositor*. 34 (1937), pp. 48-53.

O'Neill, J.C. "1Corinthians 15:29 - Baptism for the Dead" in *Expository Times*. 91 (1979), pp. 310-311.

Osborne, Kenan B. *The Christian Sacraments of Initiation*. Mahwah: Paulist Press, 1987.

Pawson, David. & Buchanan, Colin. *Infant Baptism Under Cross-Examination*. Bramcote: Grove Books, 1974.

Pawson, David. *Explaining Water Baptism*. Tonbridge: Sovereign World Limited, 1992.

Pelikan, Jaroslav. Spirit *Versus Structure: Luther and the Institution of the Church*. London: Collins, 1968.

Porter, Stanley E. & Cross, Anthony R. ed., *Baptism, the New Testament and the Church*. Sheffield: Sheffield Academic Press, 1999.

Porter, Stanley E. & Cross, Anthony R. ed., *Dimensions of Baptism*. Sheffield: Sheffield Academic Press, 2003.

Rahner, Karl. *The Church and the Sacraments*. New York: Hyperion Press, 1994.

Richardson, R.D. "The Mystics and the Sacrements" in *The Modern Churchman*. XVI (1926-27), pp. 22-23.

Riggs, John W. *Baptism in the Reformend Tradition: A Historical and Practical Theology*. London/Louisville: John Knox Press/ Westminster Press, 2002.

Riley, Hugh. *Christian Initiation: A Comparative Study of the Interpretation of the Baptismal Liturgy*. Washington: Catholic University of America Press, 1974.

Ross, J.M. "The Theology of Baptism in Baptist History" in *The Baptist Quarterly*. 15 (July 1953).

Root, Michael & Risto, Saarinen. ed., *Batism and the Unity of the Church*. Grand Rapids Eerdmans Publishing Company, 1998.

Sartelle, John P. *What Christian Parents Should Know About Infant Baptism*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1985.

Schenck, Lewis Bevins. *The Presbyterian Doctrine of Children in the Covenant*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 1985.

Schnackenburg, Rudolph. *Baptism in the Thought of St.Paul*. Oxford: Blackwell, 1964.

Schreiner, Thomas R. & Wright, Shawn D. *Believer's Baptism: Sigh of the New Covenant in Christ*. Nashville: B&H Publishing, 2006.

Shurden, Walter B. ed., *Proclaiming the Baptist Vision of Baptism and the Lord's Supper*. Macon: Smith & Helwys, 1999.

Spurgeon, Charles H. *Baptismal Regeneration & Children Brought to Christ Not to the Font*. Pasadena: Pilgrim Publications, 1970.

Stnander, Hendrick F. & Louw, Johannes P. *Baptism in the Early Church*. Leeds: Reformation Today Trust, 2004.

Stookey, Laurence Hull. *Baptism: Christ's Act in the Church*. Nashville: Abingdon Press, 1982.

Strawbridge, Gregg. ed., *The Case for Covenantal Infant Baptism*. Phillipsburg: Presbyterian & Reformed Publishing Co., 2003.

Thompson, K.C. "1Corinthians 15:29 and Baptism for the Dead" in *Studia Evangelica*. 2 (1964), pp. 649-657.
Thurian, Max & Geoffrey Wainwright ed., *Ecumenical Perspectives on Baptism, Eucharist and Ministry*. Geneva: World Council of Churches, 1983.
Thurian, Max & Geoffrey Wainwright ed., *Baptism and Eucharist: Ecumenical Convergence in Celebration*. Geneva: World Council of Churches, 1984.
Torrance, T.F. "The Origins of Baptism" in *Scottish Journal of Theology*. 11 (1958), pp. 158-171.
Tyler, John R. *Baptism: We've Got It Right and Wrong*. Macon: Smith & Helwys, 2003.
Vander Zee, Leonard J. *Christ, Baptism and the Lord's Supper: Recovering the Sacraments for Evangelical Worship*. Downers Grove: Inter Varsity Press, 2004.
Verduin, Leonard. *The Reformers and Their Stepchildren*. Carlisle: Paternoster Press, 1980.
Warns, Johannes. *Baptism: Studies in Original Christian Baptism*. Minneapolis: Klock & Klock, 1980.
Watson, T.E. *Should Babies Be Baptized*. London: Grace Publications Trust, 1995.
Wendel, Francois. *Calvin: The Origins and Development of His Religious Thought*. London: Collins, 1973.
White, Frank H. *Christian Baptism*. London: S.W.Partridge and Company, 1960.
White, R.E.O. *The Biblical Doctrine of Initiation*. London: Hodder & Stoughton, 1960.
Wilson, Douglas. *To A Thousand Generation – Infant Baptism: Covenant Mercy for the People of God*. Moscow: Canon Press, 1996.
Witherington, Ben. *Troubled Waters: Rethinking the Theologu of Baptism*. Waco: Baylor University Press, 2007.
Wright, David F. "The Origin of Infant Baptism - Child Believer's Baptism" in Scottish Journal of Theology 40 (1987), pp. 1-23.
Wright, David F. "At What Ages Were People Baptised in the Early Centuries?" in *Studia Patristica*. 30 (1997), pp. 389-394.
Wright, David F. *What has Infant Baptism done to Baptism?* Milton Keynes: Paternoster Press, 2005.
Wright, David F. *Baptism: Three Views*. Downers Grove: Inter Varsity Press, 2009.
Yarnold, Edward. *The Awe Inspiring Rites of Initiation*. Collegeville: Liturgical Press, 1994.
Yoder, J.H."The Recovery of the Anabaptist Vision" in *Radical Reformation Reader*. 18 (1971), pp. 19-20.

## வேத வியாக்கியான நூல்கள்
## BIBLICAL COMMENTARIES


Barclay, William. *Mark: The New Daily Study Bible*. Edinburgh: Saint Andrew Press, 2001.

Barrett, C.K. *Romans: Black's New Testament Commentary*. Peabody: Hendrickson Publishers, 1991.

Beasley-Murray, George R. *John: Word Biblical Commentary Vol.36*. Nashville: Thomas Nelson Publishers, 1999.

Blomberg, Craig L. *Matthew: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.

Blomberg, Craig L. *1Corinthians: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1994.

Blum, E.A. *1,2 Peter: The Expositor's Bible Commentary Volume 12* Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Bock, Darrell L. *Acts: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 2007.

Borchert, Gerald L. *John 1-11: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 1996.

Borchert, Gerald L. *John 12-21: The New American Commentary*. Nashville: Broadman & Holman Publishers, 2002.

Brooks James A. *Mark: The New American Commentary*. Nashville: Broadman Press, 1991.

Bruce, F.F. *Colossians, Philemon and Ephesians: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1984.

Bruce, F.F. Acts*: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.

Burge, Gary M. *John: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2000.

Carson, D.A. *Matthew: The Expositor's Bible Commentary Volume 8*. Grand Rapids: Zondervan Publishing House, 1984.

Carson D.A. *John: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1991.

Cole, R.Alan. *Galatians: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1991.

Collins, R.F. *1Corinthians: Sacra Pagina Volume 7*. Collegeville: Liturgical Press, 1999.

Davids, Peter H. *1 Peter: The New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1990.

Dodd, C.H. *Romans: Moffatt New Testament Commentary*. New York: Harper & Bros., 1932.

Dunn, James D.G. *Colossians and Philemon: The New International Greek Testament Commentary*. Grand Rapids: Eerdmans, 1996.

Edwards, James R. *Mark: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2002.

Fee, Gordon D. *1Corinthians: The New International Commentary on the NT*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1987.

France, R.T. *Matthew: The New International Commentary on the New Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2007.

Garland, David E. *1Corinthians: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 2003.

George, Timothy. *Galatians: The New American Commentary*, Nashville: Broadman & Holman Publishers, 1994.

Gould, Ezra P. *Mark: International Critical Commentary*. Edinburgh: T&T Clark, 1896.

Grudem, Wayne. *1 Peter: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1988.

Hays, R.B. *First Corinthians: Interpretation*. Louisville: John Knox Press, 1977.

Hiebert, D.Edmond. *The Epistle of First Peter*. Winona Lake: BMH Books, 1992.

Hiebert, D.Edmond. *The Gospel of Mark: An Expositional Commentary*. Greenville: Bob Jones University Press, 1994.

Hill, David. *Matthew: The New Century Bible Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1972.

Hodge, Charles. *An Exposition of the First Epistle to the Corinthians*. Edinburgh: The Banner of Truth Trust, 1964.

Horsley, R.A. *1Corinthians: Abingdon New Testament Commentary*. Nashville: Abingdon Press, 1998.

Kelly, J.N.D. *The Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*. Peabody: Hendrickson Publishers, 1969.

Knight, George A.F. *Psalms Volume 1: The Daily Study Bible*. Philadelphia: The Westminster Press, 1982.

Kostenberger, Andreas J. *John: Baker Exegetical Commentary on the New Testament*. Grand Rapids: Baker Publishing Group, 2004.

Kruse, Colin G. *The Letters of John: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2000.

Larkin, William J. *Acts: The IVP New Testament Commentary*. Leicester/ Downers Grove: Inter Varsity Press, 1995.

Lenski, R.C.H. *The Interpretation of St.John's Gospel*. Minneapolis; Augsburg Publishing House, 1943.

Lenski, R.C.H. *The Interpretation of St.Paul's Epistles to the Colossians*. Minneapolis; Augsburg Publishing House, 1961.

Longenecker, Richard N. *Acts: The Expositor's Bible Commentary Volume 9*. Grand Rapids: Zondervan Publishing House, 1981.

Luther, Martin. *A Commentary on Paul's Epistle to the Galatians*. London: James Clarke and Co., Ltd., 1961.

Marshall, I. *Acts: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1988.
Moo, Douglas J. *Colossians and Philemon: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Co., 1988.
Moo, Douglas J. Romans: The New International Commentary on the New Testament. Grand Rapids: Eerdmans Publishing Co., 1996.
Morris, Leon. *1Corinthians: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1987.
Morris, Leon. *Romans: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1988.
Morris, Leon. *Luke: Tyndale New Testament Commentary*. Leicester: Inter Varsity Press, 1988.
Morris, Leon. *Mattthew: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1992.
Mounce, Robert H. *Matthew: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1991.
Parry, R. St. J. *1Corinthians: Cambridge Greek Testament Commentary*. Cambridge: Cambridge University Press, 1926.
Patzia, Arthur G. *Ephesians, Colossians, Philemon: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1984.
Peterson, David G. *Acts: The Pillar New Testament Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 2009.
Plummer, A. *Mark: Cambridge Greek Testament Commentary*. Cambridge: Cambridge University Press, 1938.
Polhill, J.B. *Acts: The New American Commentary*. Nashville: Broadman Press, 1992.
Schreiner, Thomas R. *1,2 Peter, Jude: The New American Commentary*, Nashville: Broadman & Holman Publishers, 2003.
Stott, John R.W. *The Message of Acts: The Bible Speaks Today*. Leicester Inter Varsity Press, 1990.
Thompson, G.H.P. *Ephesians Colossians and Philemon: The Cambridge Bible Commentary*. Cambridge: University Press, 1967.
Vaughan, Curtis. *1,2,3 John: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1970.
Vaughan, Curtis. *Colossians and Philemon: Bible Study Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1973.
Wall, Robert W. *Colossians & Philemon: The IVP New Testament Commentary*. Downers Grove/Leicester: Inter Varsity Press, 1993.
Wiersbe, Warren W. *Be Diligent: Bible Study - Mark*: Wheaton: Victor Books, 1988.
Wilkins, Michael J. *Matthew: The NIV Application Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 2004.
Williams, D.J.W. *Acts: New International Biblical Commentary*. Peabody: Hendrickson Publishers, 1985.

Wilson, Geoffrey B. *New Testament Commentaries Volume 2*. Edinburgh: The Banner of Truth Trust, 2005.

## ஏனைய நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும்
## OTHER RELATED BOOKS AND ARTICLES

Arndt, William F & Gingrich, F.Wilbur. *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*. Chicago: The University of Chicago Press, 1957.

Berkhof, Louis, *Systematic Theology*. Edinburgh: The Banner of Truth Trust, 1988.

Bosch, David J. *Transforming Mission: Paradigm Shifts in Theology of Missions*. Maryknoll: Orbis Books, 1996.

Boyd, Gregory A. *Oneness Pentecostals & the Trinity*. Grand Rapids: Baker Book House, 1992.

Brooks, O.S. "Matthew 28:16-20 and the Design of the First Gospel" in *Journal for the Study of the NT*. 10 (1981), pp. 2-18.

Brown, Colin. ed., *The New International Dictionary of New Testament Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1986.

Calvin, John. *Institutes of the Christian Religion*. London: James Clarke & Co., 1957.

Coxe, A Cleveland. ed., *Ante-Nicene Fathers*. Peabody: Hendrickson Publishers, 1994.

Cross, F.L. *The Early Christian Fathers*. London: Gerald Duckworth & Co. Ltd., 1960.

Denzinger, Henry. *The Sources of Catholic Dogma*. St.Louis: B.Herder Books, 1957.

Dillenberger, John. ed., *Martin Luther: Selections from His Writings*. Garden City: Doubleday, 1961.

Dunn, James D.G. *Baptism in the Holy Spirit*. Philadelphia: The Westminster Press, 1970.

Erickson, Millard J. *Christian Theology*. Grand Rapids: Baker Book House, 1988.

Geisler, Norman & MacKenzie, Ralph E. *Roman Catholics and Evangelicals: Agreements and Differences*. Grand Rapids: Baker Book House, 1995.

Gower, Ralph. *The New Manners and Customs of Bible Times*. Chicago: Moody Press, 1987.

Green, Joel B. Mcknight, Scot & Marshall I.Howard. *Dictionary of Jesus and the Gospels*. Downers Grove: Inter Varsity Press, 1992.

Grudem, Wayne. *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*. Leicester: Inter Varsity Press, 1994.

Hill, D. *Greek Words and Hebrew Meanings:Studies in the Semantics of Soteriological Terms*. Cambridge: University Press, 1967.

Kelly, J.N.D. *Early Christian Doctrine*. San Francisco: Harper & Row, 1978.

Kingsbury, J.D. "The Composition and Christology of Matthew 28:16-20" in *Journal of Biblical Literature*. 93 (1974), pp. 573-574.

Kosmala, H. "The Conclusion of Matthew" in *Annual of the Swedish Theological Institute*. 4 (1965), pp. 132-147.

Liddell, H.G. & Scott, R. *Greek-English Lexicon*. Oxford: Clarendon Press, 1961.

Luther, Martin. *A Treatise on the New Testament, that is, the Holy Mass*. Saint Louis: Concordia, 1960.

Macleod, Donald. *The Spirit of Promise*. Fearn: Christian Focus Publications, 1986.

McDowell, Josh. *More than a Carpenter*. Minneapolis: World Wide Publication, 1977.

Mckinion, *S.A. Life and Practice in the Early Church*. New York: New York University Press, 2002.

Mohrlang, R. *Matthew and Paul: A Comparison of Ethical Perspectives*.Cambridge: Cambridge University Press, 1980.

Morris, Leon. *The Atonement: Its Meaning and Significance*. Leicester/ Downers Grove: Inter Varsity Press, 1983.

Morris, Leon. *New Testament Theology*. Grand Rapids: Zondervan Publishing House, 1986.

Morris, Leon. *Jesus is the Christ: Studies in the Theology of John*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1989.

Morris, Leon. *The Lord from Heaven: The Deity and Humanity of Jesus Christ*. Leicester: Inter Varsity Press, 1995.

Niesel, W. *The Theology of Calvin*. Philadelphia: Westminster, 1960.

Ott, Ludwig. *Fundamentals of Catholic Church*. Rockford: Tan Books and Publishers, 1960.

Przybylski, B. *Righteousness in Matthew and His World of Thought*. Cambridge: Cambridge University Press, 1980.

Renn, Stephen D. *Expository Dictionary of Bible Words*. Peabody: Hendrickson Publishers, 2005.

Richards, Lawrence O. *Expository Dictionary of Bible Words*. Grand Rapids: Zondervan Corporation, 1985.

Scaer, D.P. "The Relation of Matthew 28:16-20 to the Rest of the Gospel" in *Catholic Biblical Quarterly*. 55 (1991), pp. 245-246.

Sproul, R.C. *Essential Truths of the Christian Faith*. Wheaton: Tyndale House Publishers,1992.

Sproul, R.C. *Truth We Confess: A Layman's Guide to the Westminster Confession of Faith*. Phillipsburg: Presbyterian and Reformed Publishing Company, 2003.

Stanford, Peter. *Catholism: Teach Yourself Series*. London: Hodder Education, 2008.

Stott, J.R.W. *Christ the Controversialist*. Leicester: Inter Varsity Press. 1996.

Stott, J.R.W. *Baptism and Fullness: The Work of the Holy Spirit Today.* Leicester: Inter Varsity Press, 2006.

Swindoll, Charles R. *The Theological Wordbook.* Nashville: Word Publishing, 2000.

Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1979.

Vincent, M.R. *Word Studies in the New Testament*. Florida: Macdonald Publishing Company.

Vine, W.E. Unger, Merrill F. White, William. ed., *Vine's Expository Dictionary of Biblical Words*. Nashville: Thomas Nelson Publishers, 1985.

Walker, W. *A History of the Christian Church*. Edinburgh: T & T Clark, 1970.

Wallace, R.S. *Calvin's Doctrine of the Word and Sacraments*. London: Oliver and Boyd, 1953.

Warfield, Benjamin B. *Studies in Theology*. Edinburgh: The Banner of Truth Trust, 1988.

Wendel, F. *Calvin: The Origin and Development of His Religious Thought*. New York: Harper and Row, 1963.

Whiston, William. tr., *The Works of Josephus*. Peabody: Hendrickson Publishers, 1987.

Wight, Fred H. *Manners and Customs of Bible Lands*. Chicago: Moody Press, 1953.



# Our Regular Services

## Southall

10:30am English & සිංහල
**Bethany House**
12, Park Avenue, Southall. Middlesex. UB1 3AJ
Mob; 0790 401 6395 - 0787 266 5157

11:00am English
**Baptist Church**
Western Road, Southall. UB2 5DS
Tel; 0208 574 4456 Mob; 0777 189 1342

2:00pm. தமிழ்
**Baptist Church**
Western Road, Southall. UB2 5DS
Mob; 0790 424 8108 - 0786 138 9841

## Kenton

5:30pm English & தமிழ்
**Methodist Church**
Woodgrange Avenue, Kenton. Middlesex. HA3 0XF
Mob; 0795 073 5417

## Slough

3:00pm English & தமிழ்
**Methodist Church**
Hampshire Avenue, Slough. Berkshire. SL1 3AQ
Mob; 0796 057 0704

## Norwich

3:00pm. தமிழ்
**St. Paul's Church**
Sherwood Road, Tuckswood Norwich. NR4 6AB
Mob; 0794 631 7120

*The family U need*

BfM BETHANY CHURCH OF GOD
பெத்தானியா தேவாலயம்
බෙතානියා දේවස්ථානය

**Bethany House**
12, Park Avenue, Southall. UB1 3AJ
P.O. Box 294, Southall, UB2 5EE Tel: 020 8571 2156
E-mail: info@bethanychurches.org
**Web: www.bethanychurches.org**

Ravina Graphics 078 0394 5050

# திருமறை போதிக்கும் திருமுழுக்கு

ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகமப் போதனை

## BAPTISM ACCORDING TO THE BIBLE

**An Analysis of the Biblical Doctrine of Baptism**

**M. S. VASANTHAKUMAR**

ஞானஸ்நானத்தைப் பற்றி வேதாகமம் போதிக்கும் சத்தியங்களை அறியத்தரும் இந்நூலில் கிறிஸ்தவ உலகில் அதிக சர்ச்சைகளை உருவாக்கியுள்ள பின்வரும் கேள்விகளுக்கான பதில்கள் ஆராயப்பட்டுள்ளன.

நாம் ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும்?
நாம் எந்நிலையில் ஞானஸ்நானம் பெறவேண்டும்?
நாம் எப்படி ஞானஸ்நானம் பெறவேண்டும்?
ஞானஸ்நானம் என்றால் என்ன?
ஞானஸ்நானத்தில் நாம் எவற்றைப் பெற்றுக்கொள்கின்றோம்?
குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா?
நாம் மறுபடியும் ஞானஸ்நானம் பெறலாமா?
நம்முடைய ஞானஸ்நானம் எப்படிப்பட்டது?

Published by
**BETHANY CHURCH OF GOD**
P O BOX 294, SOUTHALL, MIDDLESEX UB2 5EE, UK
Email: bethanychurchuk@yahoo.com
Web: bethanychurches.org
Phone: 0044 (0)208 5712156

பதினாறு வருடங்களாக இலங்கை வேதாகமக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், சத்திய வசனம் சஞ்சிகை ஆசிரியராகவும் பணியாற்றிய வேதஆராய்ச்சியாளர் எம். எஸ். வசந்தகுமார், 2005ஆம் ஆண்டிலிருந்து இங்கிலாந்தில் இறைபணியாற்றுவதோடு வேதாகமப் புத்தகங்களுக்கு விளக்கவுரைகள் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

A PRODUCTION OF
**TAMIL BIBLE RESEARCH CENTRE, LONDON**
Web: tamilbibleresearchcentre.com